Vol. IV.] April, 1912 [No. 10.

# விவேக போதினி

# VIVEKA BODHINI

பொருளடக்கம்


| | |
|---|---|
| தேச மஹான்கள் ... ... ... ... | 425 |
| விக்ரஹ ரஹஸ்யம்.—5. ஆனந்த நடேசர் ... ... | 426 |
| ஆத்திசூடி விளக்கம் ... ... ... | 430 |
| சித்தியடைந்த ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதி ஸ்வாமிகள் ... ... ... ... | 433 |
| மெய்யமாலை ... ... ... ... | 435 |
| நாம்வசிக்கும் அற்புத வீடு ... ... ... | 437 |
| உபநிஷத் ரத்தினமாலை ... ... ... | 440 |
| உல்லாஸன் சரித்திரம்.—(தொடர்ச்சி) ... ... | 442 |
| தமிழ்ப்பரிபாலகர்—ரெவரெண்டு ஜி. யூ. போப்பையர் ... | 447 |
| சமரஸத் தோத்திரம் ... ... ... ... | 448 |
| ராகங்களின் உத்பத்தி ... ... ... | 449 |
| வஸந்தமாளிகை ... ... ... ... | 451 |
| மாணவர் பக்கங்கள்.—வியாஸவிதானம்:—பொய்யுரைத்தல் | 453 |
| சிறுவர்களுக்கான பக்கங்கள் ... ... ... | 457 |
| ஸ்திரீகளுக்கான பக்கங்கள் ... ... ... | 459 |
| விசேஷக் குறிப்புகள் ... ... ... | 460 |


காபிரைட்

இப்பத்திரிகைக்குரிய

# "VIVEKA BODHINI" OPINIONS—(Contd.)

**M. R. Ry. A. Rajaram Aiyar Avl., B. A., Principal, Zamorin's College, Calicut:**—I have been regularly in receipt of your excellent monthly the Viveka Bodhini. I have been particularly pleased with what I have regarded as a specially commendable feature * * * **popular treatment of scientific subjects.** Students of College and High School classes who have to "tackle" the subject of **Vernacular Composition, ought to find the Viveka Bodhini of material assistance to them.**

**M. R. Ry. B. V. Ramaswami Sastri, Avl. B. A., L. T., Headmaster, Mahajana High School, Erode** Writes :—* * * **The value of the journal to the student population has, of late, been increased by the appearance of model essays and translations. I have strongly recommended the journal to the careful study of my boys.**

**T. Ramakrishna Pillay, B A., F.M.U., Chief Examiner in Tamil to the University** I have gone through some of the issues of *that excellent Magazine* the "Viveka Bodhini." I have much pleasure in adding my word of praise for the services rendered by the conductors. The articles are *well written*. I sincerely hope that this journal will become more popular. The conductors have my best wishes for their success.

**M. R. Ry. G. Seshaiyangar Avergal, Head Master, National High School, Trichinopoly,** writes : * * * * It is a *very useful* and well conducted monthly. It is issued regularly and punctually every month; Its articles which are occasionally illustrated are *interesting and instructive* contributed either by specialists or those who are an authority on subjects they write on. All classes of people young and old, men and women lay and religious find in its issues matter suited to their tastes.

**M. R. Ry. T. Rajam Aiyangar, B. A., L. T., Headmaster, Kalyanasundaram High School, Tanjore :—**

I feel genuine pleasure to certify that Viveka Bodhini published by the General Supplies Co., Mylapore is a high class Tamil Monthly. I have been carefully reading the issues of the Journal as they come out, and been recommending them for the study of school boys and girls during the last two years. The articles bear upon various interesting subjects of study, sciences and general literature. I have been struck with the general chasteness and simplicity of the style they have been able to maintain throughout uniformly. The original compositions that appear now and then seem to me to be real additions to the classic prose literature of Southern India. I wish the journal long continued prosperity and a term of long continued usefulness.

## Books useful for introduction as Additional Readers in IV Class, I, II, III, IV and V Forms, of Secondary and High Schools.

| | Rs. | A. |
|---|---|---|
| **Ramayana Catechism** completely revised and improved, with illustrations, pp. 368 (4th edition) ... | 1 | 0 |
| **Mahabharata Catechism, Part I,** contains *Adi, Sabha, Aranya, Virata and Udyoga Parvas* ... ... | 0 | 12 |
| **Mahabharata Catechism, Part II,** contains *Bhishma, Drona, Karna, Salya, Sauptika and Stri Parvas* ... | 0 | 12 |
| **Mahabharata Catechism, Part III,** contains Santi, Anusasana, *Aswameda, Asramavasika, Mahaprastana, Mousala and Swargarohana Parvas* | 0 | 12 |
| **Bagavata Catechism, Part I,** contains the 1st Nine skandas, with 10 excellent half tone illustrations printed beautifully on art paper ... | 1 | 0 |
| **Sathiavalli :** A High Class Tamil Novel, by Mr. R. P. Kulandaiswami Pillai, B.A., L.T. ... ... ... | 0 | 12 |
| *Wonders in Nature* : By Mr. A. S. Kasturiranga Aiyar, B.A., L.T., Illustrated. Has an introduction by Rao Bahadur late Mr. L. C. Williams Pillai, Retired Inspector of Schools. | 0 | 8 |
| *Lessons from Geology* : By Mr. M. R. Subrahmanyam, B.A., Largely appreciated—contains more than 80 fine illustrations. ... ... ... | 0 | 8 |
| *Aryamala Upakyanam*, Part I, 5th Edition : by Mr. A. Krishnasami Iyer, Retired pleader of Tinnivelly Revised and enlarged *With an appreciative introduction* By the Hon'ble Mr. P. S. Sivaswami Aiyar, C.I.E., Member of Council of Fort St. Georges, Contains 14 half tone illustrations printed beautifully on art paper ... ... ... | 0 | 4 |

*Note* :—Specimen copies of any of these books, on requisition, are forwarded to Head Masters and Managers of High Schools and Colleges, so that they may be introduced in their Institution also, if the book or books meet with their approval.

Special rates are also allowed on some of these books only for Schools.

Further particulars on application to.

THE GENERAL SUPPLIES Co., PUBLISHERS, MYLAPORE, MADRAS.

443

# THE "VIVEKA BODHINI"


**An Illustrated Popular Tamil Monthly : Has a large list of able contributors**

**(Started in 1908—Annual Subscription including Postage Rs. 3)**

MAINLY DEVOTED TO

**Education, Science, Philosophy, Morality, Literature and Art, History, Biography and Fiction, Agriculture, Industry, Commerce & Economics.**

**THE ONLY JOURNAL OF ITS KIND IN INDIA.**

*Accuracy and originality form its speciality : Articles penned by the best of intellects.*

**Vol. IV** **APRIL 1912** **No. 10**


## CONTENTS


| | PAGE |
|---|---|
| The Great Men of the Gita ... | 425 |
| The Inner Meaning of Images.—5. Ananda Natesar | 426 |
| Moral Sayings explained ... | 430 |
| The passing away of Sri Sankaracharya of Sringeri Mutt | 433 |
| Popular maxims explained ... | 435 |
| The Wonderful house We live in : by M. R. Ry. N. S. Jambunatha Aiyar Avl. B.A., L.T., Sub Assistant Inspector of Schools ... | 437 |
| The Summary of Minor Upanishads ... | 440 |
| Adventures of Ulysses—(*contd.*) : by M. R. Ry. K. Venkatrama Aiyar Avl., B.A. | 442 |
| The Revd. G. U. Pope, M.A., D.D. : by M. R. Ry. Pundit T. Venkatrama Aiyangar Avl. | 447 |
| The Universal Prayer : by M. R. Ry. S. Swaminatha Iyer Avl. ... | 448 |
| The Origin of Ragas : by M. R. Ry. P. S. Sundaram Iyer Avl., B.A., L.T. ... | 449 |
| Vasanta Malikai—An adaptation of Kenilworth : by M. R. Ry. R. S. Narayanaswami Iyer Avl., B.A., B.L. | 451 |
| Students' Pages—Reflective Essays. Bad Qualities—Lying | 453 |
| Children's Pages | 457 |
| Ladies' Pages ... | 459 |
| News and Notes ... | 460 |


*All literary contributions, books, &c., for review, should be addressed to the Editor,* and all communications and remittances to the Manager, the "Viveka Bodhini," Mylapore, Madras.

# "VIVEKA BODHINI" OPINIONS—*(Contd.)*

**M. S. H. Thompson, Esq., B. A., A. C. P., Assistant Inspector of Schools :—** * * Interesting magazine. The articles mainly of a literary character, but interesting and instructive. The Magazine is written in simple, but good Tamil.

* * *

**M. R. Ry. B. C. Ramaswami Aiyar Avergal, B.A., Assistant Inspector of Schools.** * * *Best suited for the requirements of the teachers of Elementary Schools and the advanced students in them. The style is simple and easy and the matter interesting and varied and useful.*

* * *

**S. Venkoba Chariar, Esq., B. A., F. M. U, Principal, Madura College, Madura,** writes:— * * A **very useful and instructive journal.** It deals with a variety of subjects and is written in a **simple and clear style.** It can be profitably used in our Secondary Schools.

* * *

**I. Srinivasa Aiyar, Esq., B. A., Principal, The Hindu College, Tinnevelly.**—* * * A very interesting Journal containing readable articles **on a variety of useful subjects.** The easy style in which the articles are written must commend itself to a wide circle of readers.

* * *

**A. Panchapakesa Aiyar, Esq., M. A., L. T., Head Master, P.S. High School, Mylapore:**— The articles contributed *deal with a variety of subjects all interesting and useful*—The Journal supplies *a real want* and should be welcomed by all Schools and Colleges, by all Indian Houses and by both sexes of all grades—*The series of essays begun for the benefit of school pupils are very good and must be appreciated by teachers and students alike.* * * *

* * *

**M. R. Ry. R. Swaminatha Aiyar Avergal, Headmaster, Town High School, Kumbakonam,** writes :—The subjects it deals with **are varied, interesting and instructive,** and the information is conveyed in easy elegant Tamil so as to be within the comprehension of students of all grades of advancement. Schoolmasters will find in it much that will be of help to them in their vocation as teachers of the young.

**T. R. Krishnamachariar, Esq., B. A., L. T., Head Master, The Sourashtra High School, Madura,** writes :—A high class journal written in chaste Tamil. It promises to be very popular with the rising generation on account of the variety of subjects dealt in it. Education, Nature study, Science, Hygiene and the like. It is **so very interesting and useful** that it should be found in the hands of every school boy and in every Hindu Home.

**The Hindu:**—During the three years of its existenc, this Tamil Magazine *has grown very much popular* among the Tamil public. It has a *large number of well-known contributors and its articles are always interesting. There are a number of other articles dealing with a variety of subjects and there* are also a few illustrations. *Both on account of its chaste and simple Tamil and the choice of subjects, the Magazine may be advantageously introduced into all Lower Secondary and High Schools.*

* * *

**The "Madras Mail"**:—This interesting Tamil Monthly contains as usual a number of useful and well-written articles on Nature, Education, Literature, Agriculture and Hygiene and judging from the standard which the publishers have set before themselves, this little monthly is likely to prove more and more popular and useful. **The special pages for children and for the enlightenment of Indian women continue to be interesting.** The Journal deserves more encouragement and *will be found useful for boys and girls' schools*'

* * *

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-**ஸ்ரீ** மஹாமஹோபாத்யாய வே. சாமிநாதய்யரவர்கள்:—*"நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளும், புதிய நாடகங்களும் சில மொழிபெயர்ப்புகளும், தற்காலத்திற்கேற்ற நாகரீக விஷயங்களும் இப்பத்திரிகையில் மிக எளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றன; சிறுவர்களும் பெண்பாலாரும் இதனால் பல விஷயங்களையும் வருத்தமின்றித் தெரிந்துகொள்ளலாம்.*

* * *

**T. V. Sivakumara Sastry, Esq., B. A., L. T., Lecturer, Teachers' College, Saidapet:**—The articles *are very instructive and embrace a variety of useful topics.* You deserve to be specially complimented upon the articles on scientific subjects that you are making available to the general public.

* * *

**M. R. Ry. Hon'ble Dewan Bahadur, S. R. M. M Ramasami Chettiar Avergal**—*தங்களாற் பிரசுரம் செய்யப்பட்டுத் தமிழ் நாடெங்கும் பரவிவரும் "விவேக போதினி" என்னும் பத்திரிகை வாயிலாகத் தற்காலத்திற்கேற்றபடி நன்மையைத் தரும் விஷயங்களை யாவரும் எளிதில் படித்துணருமாறு இனிமையான நடையில் வெளிப்படுத்தி வருவது தமிழ் நாட்டிற்குச் செய்கின்றதோர் பேருபகாரமாகும். இப்பத்திரிகையில் வெளியாகும் விஷயங்கள் அருமையுடையனவாயும் எவரும் பாராட்டத்தக்கனவாயுமிருக்கின்றன. கற்பிக்கும் உபாத்தியாயர்கள் கற்கும் மாணவர்கள், என விருதிறத்தார்க்கும் இப்பத்திரிகை அதிகமான நன்மைபயக்கும் என்பது எனதபிப்பிராயம்.*

* * *

**T. S. Subramania Aiyar, Esq., M. A., L. T. Lecturer, Teachers' College, Saidapet.**—* * Your journal is now *the best, the cheapest* and *the most ably conducted Tamil monthly* in our midst.* *

*Only to subscribers* :—**Back Bound Volumes of Bodhini I, II and III—for Rs. 10**

445



லார்ட் கார்மைகேல்



லேடி கார்மைகேல்

# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருது௵ பங்குனிமீ : 1912-௵ எப்பிரல்மீ {பகுதி 10

## கீதா மஹான்கள்

### THE GREAT MEN OF THE GITA

### 6. ஸங்யாஸி (அத் 5. சுலோ. 3, 7—12)

**எ**வன் விருப்பு வெறுப்பு அற்றவனாக இருக்கிறானோ அவன் துவந்துவங்களிலிருந்து நீங்கி, கர்மபந்தத்திலிருந்து விடுபடுவன். அவன் கர்மயோகத்தில் தேர்ந்து பரிசுத்தனாகி, தேஹேந்திரியங்களை அடக்கி, தன் ஆத்மாவையே எங்கும் நிறைந்துள்ள ஆத்மாவாகக் கண்டவனாதலால் என்ன செய்தபோதிலும், அவனை ஒன்றும் ஒட்டாது உண்மைமை உணர்ந்து தேர்ந்தவன், பார்த்தல் முதலிய ஞானேந்திரியத் தொழில்கள், பேசுதல்முதலிய கர்மேந்திரியத் தொழில்கள், தூக்கம் முதலிய மற்றைத் தொழில்கள், ஆகிய இவைகளுள் எது நடந்தபோதிலும், 'இந்திரியங்கள் விஷயங்களுள் உலாவுகின்றன! நான் செயலற்று நிற்கிறேன்!' என்று மதித்திருக்கவேண்டும். எவன் பகவத் பரமாக விருந்து கர்மம் செய்கிறானோ, அவன் தண்ணீரிலிருந்தும் தாமரை இலை நனையாதிருப்பது போலத் தாக்கற்றே நிற்பன். இவன் கர்மம் செய்யுங்கால் அவைகளின் பலனைக் கவனியாது கடமையாகச் செய்து விடுவதால், இக்காலத்தும் நிஷ்டையின் பலனாகிய ஒழிவு இவனிடம் குடிகொண்டிருக்கும். மனத்தில் எல்லாக் கர்மங்களிலும் உள்ள பற்று நீங்கிவிட செய்பவன், எற்பவன் என்ற எண்ணம் நீங்கப் பெற்று இந்த நவத்வார நகரத்தில் ஸுகமாக அசைவற்றிருப்பான்.

### 7. ஸமதர்சி (அத் 5, சுலோ. 3, 7—12)

**ஸா**ங்க்யத்திற்கும் யோகத்திற்கும் உள்ள பேதத்தை ஒரு பொருட்டாக மதியாது, இவைகளுள் ஒருவன் எதைப் பின்பற்றியபோதிலும் இரண்டன் முடிவும் கைகூடிவிடும் என்று காண்பவனே உள்ளபடி காண்பவன். பரம்பொருளிலேயே புத்தியுடையவனாகி, அதையே ஆத்மாவாகக்கொண்டு, அதையே சரணம் புகுந்தவன், ஞானத்தால் மனோபாவங்கள் தேயப் பெற்று, மீளாநெறி எய்துவன். இவன், ஒழுக்கமுடைய வேதியன், பசு, யானை, நாய், நாய் மாம்ஸம் உண்போன் ஆகிய இவர்களிடத்து எல்லாம் ஒன்றையே காணும் பண்டிதன். பிரஹ்மம் பொதுவாக விருப்பதால், மனம் நடுநிலை பெற்ற இவன் ஸந்தோஷம், துக்கம் இவைகளுக்கு ஆளாக முடியாது. வேறாகித் தனித்துத் தொடங்கி முடியும் குணமுள்ள வெளிவஸ்துக்கள் ஸம்பந்தமான ஸுகம் துன்பமே யாதலால் வெளிப்பற்றற்று, ஆத்மஸுகம் அடைந்து, எல்லாவற்றின் ஸுகத்தையும் பாவிப்பதால் இவன் பிரஹ்மானந்தத்தில் மூழ்குவன். இதனால் ஆசை சினம் இவைகளின் வேகம் இவனுக்கு ஒரு பொருட்டேயில்லை.

### 8. யோகி (அத். 6)

**த**ன்னைத்தானே அடக்குபவனுக்குத் தானே நண்பன். இவ்வாறு செய்யாதவனுக்குத் தானே பகைவன். அடங்கும் குணமுடையவனுக்கு, குளிர்வெப்பம், இன்பதுன்பம், மானஅவமானம், ஆகிய இவைகளில் மனம் ஒருமைப்பட்டு அசையாதிருக்கும். அறிவு அனுபவம் இவைகளால் இந்திரியஜயம், மண் கல் தங்கம் இவைகளை ஒன்றாகப் பார்த்தல், ஆகிய இவைகள் அமைந்த யோகியே நடுநிலை பெற்றவனாவான். எல்லோரிடத்தும் ஸமதிருஷ்டி வந்துவிடும். இவ்வாறு மனம் அடங்கிய யோகி, முடிவான சாந்தி பெறுவன். அடங்கிய இவன்மனம் ஆத்மாவினிடத்திலேயேநிலைபெறும். காற்றில்லாவிடத்தில் உள்ள விளக்குப்போல அசைவற்றிருக்கும். இந்திரியங்களால் உணரமுடியாது புத்திக்கு அப்பாற்பட்டு நிற்கும் அனந்த ஆனந்தம் இவனுக்கு விளங்கும். இதற்கு மேலான ஆனந்தம் ஒன்றுமில்லை, எந்தக் கஷ்டம் வரினும் இந்நிலையில் பிரியான். துக்கஸம்பந்தம் நீங்குபவனே யோகி, இவன் எங்கும் தன்னையும், தன்னுள் எல்லாவற்றையும் பார்ப்பான். இவன் எல்லா ஸன்மார்க்கர்களையும்விட மிகச் சிறந்தவன்.

விவேக போதினி

தொ 4] விரோதிகிருதுஸு பங்குனிமீ [பகுதி 10

## விக்ரஹ ரஹஸ்யம்

### THE INNER MEANING OF IMAGES

### 5. ஆனந்த நடேசர்

இந்த விக்ரஹம், ஒரு நடனமாடும் புருஷன் ரூபமாக அமைந்துள்ளது. வலது காலைக் கீழே ஒரு அரக்கன்மேல் மிதித்து, இடது காலை மேலே உயர்த்தி, ஒரு இடது கையால் உயர்ந்த காலைக் காட்டி, மற்றைய இடது கையில் அக்னி தாங்கி, ஒரு வலது கையில் அபய ஹஸ்தம் பிடித்து, மற்றொரு வலதுகையில் உடுக்குப் பிடித்து நிற்பதாக இவ்விக்ரஹம் அமைந்துள்ளதால், இதைப் பார்ப்பவர்களுக்கு இது நடனமாடுவதுபோலவே தோன்றி ஆச்சர்யத்தை உண்டாக்கும். இந்த ஆச்சர்யத்தோடு பக்தியும் சேர்ந்துவிட்டால் கேட்கவும் வேண்டுமா ! பக்தி பாவசத்தில் ஈடுபட்டு, ஒரு மஹான் இந்நடனத்தை,

மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கைசிவகாமியாட
மாலாட நூலாட மறையாட திரையாட
மறைதந்த பிரஹ்மனாட
கோனாட, வானுலகு கூட்டமெல்லாமாட
குஞ்சரமுகத்தனாட
குண்டலமிரண்டாட தண்டைபுலியுடையாட
குழந்தை முருகேசனாட
ஞான சம்பந்தரொடு இந்திரர் பதினெட்டு முனி
அட்டபாலகரு மாட
நரை தும்பையறுகாட நந்திவாஹனமாட
நாட்டியப்பெண்களாட
வினையோட உனைபாட வெனைநாடி யிதுவேளை
விருதோடியாடி வருவாய்
ஈசனே ! சிவகாமி நேசனே ! யெனை யீன்ற
தில்லைவாழ் நடராஜனே !

என்று எடுத்துக்கூறிப் பாராட்டியிருக்கிறார். இந்தத் தாண்டவத்திற்கு உட்பொருள்படி ஆனந்தத்தாண்டவம் என்ற பெயராதலால் இவ்விக்ரஹத்திற்கு **ஆனந்த நடேசர்** என்றபெயர் வந்தது.

இப்புருஷன் பரம்பொருளை யுணர்த்துகிறான். ஒரு வலது கையில் பிடித்திருக்கும் டமருகத்தி (உடுக்கி)லிருந்து வரும் ஒலியால் அண்டபிண்ட சராசரங்கள் எல்லாம் பெரு நெருப்பிலிருந்து பொறிகளும், ஊற்று நீரிலிருந்து குமிழிகளும் வருவபோன்ற கதித்தெழுவதைக் குறிக்கப்படுகிறது.(சப்தநிஷ்டம் ஜகத் ப்ரபஞ்சம் சப்தத்தில் பிறந்து அதிலேயே நிலைபெற்றிருப்பது என்பது வேதம்). அமைதிக்குறியைக் காட்டும் அபயஹஸ்தம் ததாஸ்து(அப்படியே ஆகுக) என்பதைக் காட்டிப்ரபஞ்சம் முழுவதும் மாறாததும் தவறாததுமான ஒழுங்குப்படி பரிபாலனம் செய்யப்படுவதைக் குறிக்கும். இடது கையில் தாங்கியிருக்கும் அக்னி, விளங்காததாயும் சிறந்ததாயும்,மலை, நக்ஷத்ரம், ஸமுத்ரம் ஆகிய இவைகளை அநித்யமாக்கும் ஸம்ஹார சக்தியையும், ஊன்றிய வலது கால், ஸ்ருஷ்டி ஆதி விஷயங்களை எவர்களுக்கும் விளங்கவொட்டாது மறைக்கும் மாயா சக்தியையும், குஞ்சித பாதமாகிய தூக்கியிருக்கும் இடது கால், எல்லோரையும் மயக்கும் படியான அநாதியாயும் அனந்தமாயும் உள்ள ஸ்ருஷ்டியாதி நாடகத்திலிருந்து விடுபட்டு ஓய்வு அடையும்படி செய்யும் நிழல்போன்ற கடவுள் கருணையையும்,குறிப்பாகக் குஞ்சித பாதத்தைக் காட்டும் இடதுகை இந்தக் கருணையன்றி வேறு கதி இல்லை ப்ரபஞ்சத்துள் அகப்பட்டிருப்பவர்



நடராஜர் தாண்டவ வைபவம்



ஆனந்த நடேசர்

களுக்கு என்று வற்புறுத்துவதையும் குறிக்கும். ஆகவே நடராஜரது ஆனந்தத்தாண்டவம் பஞ்ச கிருத்திய தாண்டவம் என்று மதிக்கப்படும். கடவுள் உருவமான இந்த விக்ரஹம் அவரது பஞ்ச கிருத்யமாகிய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதானம், அனுக்ரஹம் ஆகிய இவைகளை ஒவ்வொரு சின்னங்களால் உணர்த்துகின்றது.

உலகமாகிய நாடகத்தை மறைந்திருந்துஆட்டி வைக்கும் ஸூத்ரதாரியாகிய நடராஜர் விக்ரஹம் ஊலகெங்கும் பரம்பொருள் நிறைந்திருக்கிறது என்பதைக் குறிக்கிறது. அசைவாலாகிய உலகில், எங்கு அசைவு காணப்பட்டபோதிலும் அங்கும் நடராஜர் தாண்டவமே காணப்படுகின்றது என்பது பக்தர்கள் துணிபு. குழந்தைகள் விளையாட்டு, ஸ்திரீகள் குதூஹலம், ஜாதியார்கள் தம்முள் ஏற்படும் பெரிய யுத்தம், அண்ட கோளங்கள் ஆகாயத்தில் உருண்டோடுவது, பூகம்பம், காட்டுத்தீ, ஆற்றுவெள்ளம், நீர்த்திவலை, மலைவீழருவி எங்கும் நடராஜர் ஓயாது ஆனந்தத் தாண்டவம் ஆடுவதாகவே அவர்கள் காண்பார்கள். இம்மாதிரியான மனோபாவக் கிளர்ச்சியில் நிலைபெற்றுத்தான் மஹான்கள் உடல் உணர்ச்சி இழந்து வசன நடைமைமறந்து மடைதிறந்துவிட்டாற்போலத்திருவருட்பாமாரி சொரிந்து விட்டிருக்கின்றனர். இதற்கேற்பவே அப்பர்:—

அரியானை, அந்தணர்தம் சிந்தையானை
யருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாதநா ளெல்லாம் பிறவா நாளே!

என்று கூறி யிருக்கிறார்.

தாயுமானவர் இக்கருத்தை 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று சுருக்கிச் சொல்லிவிட்டார். ஆதலால் மனிதரூபமாக அமைந்துள்ள விக்ரஹங்களுள் இது மிகச் சிறந்தவைகளில் ஒன்று என்று பெரியோர் மதிக்கின்றனர். இது பற்றியே தாயுமானவரும் :—

சைவ ஸமயமே ஸமயம், ஸமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிக்காட்டும் இக்கருத்தை
[விட்டு
பொய்வந்துழலும் ஸமயநெறி புகுதவேண்டாம்,
[முத்திதரும்
தெய்வஸபையைக் காண்பதற்குச் சேரவாரும் ஜகத்
[தீரே!

என்று, தாம் சைவராதலால் தம் மதச்சிறப்பு தோன்றச் சைவர்களுக்குக் கூறியும், அச்சிறப்பிற்குக் காரணம் இன்னது, அது உள்ள மதம் எல்லாம் மெய் காட்டும் மதம் என்பது தோன்ற ஸமரஸஸ்தானத்தை வெளிக்காட்டியுமிருக்கிறார்.

இவ்விக்ரஹ ஸம்பந்தமாகச் சிற்சில நுட்ப விஷயங்களுள. இவ்விக்ரஹத்தின் படங்களில், காலடியில் இடதுபுறத்தில் ஒரு மான் துள்ளுவதாகவும், அரையில் புலித்தோல் தரித்திருப்பதாகவும் காணப்படும். இவ்விக்ரஹத்தில் ஸர்ப்பாபரணம், சிரஸில் கங்கை பிறைச்சந்திரன் முதலியவைகளும் இருபுறத்தில் பதஞ்சலி வ்யாக்ரபாதர் உருவங்களும் காணப்படும். அருகில் சிவகாமி அம்மன் விக்ரஹம் உண்டு. மேலும் திருவாலங்காட்டில் நடராஜப்பிரபு ஊர்த்தவதாண்டவத்திற்காகக் குஞ்சிதபாதத்தைச் சிரஸின்மேல் தூக்கி ஆட, அதுவரையில் போட்டிக்கு ஆடிவந்த காளி, வெட்கி ஆட முடியாது களைத்துவிட்டாளாம். அருகிலிருந்த சிவகாமி அம்மைக்கு அத்யாச்சர்யமுண்டாயதாம். இந்த ஊர்த்வ தாண்டவ விக்ரஹத்தில் குஞ்சிதபாதம் இருந்தவிடத்தை ஒரு இடது கையும், ஊர்த்வபாதத்தை வேறு ஒருகையும் குறிப்பாகக் காட்டுகின்றன.

காலடியிலிருக்கும் அரக்கனும், மானும் கடவுள் சஞ்சலமற்றவர், மாயைக்கு அப்பாற்பட்டவர் என்பதையும்; சிரஸில் உள்ள கங்கை பிறைச்சந்திரன் சித்சக்தி விலாஸத்தையும், ஆனந்தக்

குளிர்ச்சியையும்; நாகாபரணங்கள் காலத்தால் கடவுள் கட்டுண்டவர் அல்லர் என்பதையும், இருபுறமிருக்கும் பதஞ்சலி வ்யாக்ரபாதாள் யோகம் பக்தி அதாவது இவைகளின்சேர்க்கை விசேஷங்களாலாகிய பலமதங்களும் உள்ளபடி பின் பற்றுபவரைக் கடவுளிடம் கொண்டு சேர்க்கும் என்பதையும் உணர்த்தும். மற்றைய ஊர்த்வ தாண்டவம் முதலியவைகள் பகவத் அநுக்ரஹத்திற்கும் மேலுள்ள நிலைகளை உணர்த்துவதால் அவைகளை ஞானி நோக்கும் ஆசார்ய பாவத்தை விளக்குங்கால் நன்கு விவரிப்போம்.

இதுவரையிலும் கூறிவந்த பொருள் பக்தி வைராக்யாதி ஆத்ம குணங்களில் பழகித் தேர்ந்து வருபவர்களுடையது. இம்மாதிரி நிலையிலிருக்கும் ஒருவர் நடராஜ விக்ரஹ விஷயத்தைப் புராணகதைகளோடு ஒட்டிப் பின்வரும் கீர்த்தனையைப் பாடி இருக்கிறார்.

ராகம்-காம்போதி-திரிபுடைதாளம்

பல்லவி

நடமாடித்திரிந்த உமக்
கிடது கால் தவாமல்
முடமானதேது சொல்லய்யா.

அநுபல்லவி

தடமேவும் தில்லைநகர்
மருவுபே ரானந்தத்
தாண்டவரே நிதம் எம்மை
ஆண்டவரே ஸபை அறிய (நடமாடி)

சரணங்கள்

1. திருநீற்றைச் சுமந்திரே
நெருப்பான மேனிதனில்
சீதத்தினால் மிகுத்த வாதகுணமோ?
ஒருமையுடன் மார்க்கண்டருக்
குதவியாய் மறலிவிழ
உதைக்கச் சுளுக்கே றுண்டகுணமோ?
பரவை தன்னின் தெருவாசப்
படி இடறித்தோ என்தன்
பாபமோ சிவனே
மூவருக்கு முதல்வரென்று (நடமாடி)

2. தனஞ்ஜெயமஹிபனுடன்
சமரிலடிபட்டுவிழ
சந்திலே முழிபிசகி நொந்ததுவோ?
இனம்புரிந்த தாருகாவனம்
எங்கும்திரிந்து முள்ளேரி
உண்டோ சொல்லும் முரிந்ததுவோ?
கனகஸபை தன்னில் நடனம்
கண்டோர் அதிசயித்து
கண்ணேறுண்டோ சொல்லும்
விண்ணவருக்கு முதல்வ ரென்று (நடமாடி)

3. பக்தி செய்யும் பெரியோர்கள்
பாபநாசன மென்னும்
பரமபதம் இதுவென்று தூக்கிநின்றதுவோ?
சக்திசிவ காமிவல்லி
தன் பாதம் நோகும் என்று
தரையிலே அடிவைக்க தயங்கிநின்றதுவோ?
ஸத்திய லோகாதிபதி
தாளத்திற் கேற்பநடம்
தாக்கியே ஒரு காலை
தூக்கி நின்றததுவோ. (நடமாடி)

இனி ஞானிகள் நோக்கும் வேதாந்த பாமாக இந்த விக்ரத்துள் அடங்கி இருக்கும் பொருளை வெளியிடுவோம். இதன்படி ஸகல பந்தங்களினிருந்தும் விடுபட்டு ஆனந்த ரூபியாகிய ப்ரஹ்மமான ஸத்குருவை உணர்த்துகிறது இவ்விக்ரஹம். அவர் தம் நிலையையும், அதை அடைந்த வழியையும் தமது சின்னங்களால் நன்கு வெளியிடுகிறார். இங்கு தான் கொன்ற புலியின் தோலை அரைக்கிசைத்திருப்பது, அகங்காரத்தை வேரோடு களைந்துவிட்டதை உணர்த்தும். அகங்காரத்தால் விளையும், கோபம் சண்டை முதலிய உலக வ்யவஹாரங்களை உற்று நோக்கில் இங்கு அதைப் புலியாக உருவகப்படுத்தியதின் பொருத்தம் வெளியாகும். காலடியில் இருக்கும் அரக்கன் மாயையும், மான் மனத்தையும் உணர்த்தும். அரக்கர்கள் மாயாசக்தியும், மானின் சஞ்சல ஸ்வபாவமுமே இதற்குத் தகுந்த ஆதாரம். ஜாக்ரத் (விழிப்பு), ஸ்வப்நம் (கனவு), ஸுஷுப்தி (தூக்கம்) ஆகிய இவைகளுக்கு அப்பாற்பட்ட துரிய (நான்காவது)



அழகர் கள்ளர் வேஷத்துடன் மதுரைநோக்கி வருதல்

நிலையைக் குஞ்சிதபாதம் உணர்த்தும். இதுமன தையும் மாயையும்விட்டு நீங்கி வெளிப்படுங்கால் ஏற்படுவது என்பதை, அரக்கனையும் மானையும் விட்டு இது உயர்ந்து நிற்பதே நன்குகக்காட்டும். மேலும் அரக்கன் ஜாக்ரதாவஸ்தையையும், மான் ஸ்வப்னத்தை இடைவெளி ஸுஷுப்தியை யும், குஞ்சிதபாதம் துரியத்தையும் உணர்த்து வதும் வெளியாகும். ஆகவே ஊர்த்வ தாண்ட வத்தில் குஞ்சிதபாதம் தலைக்குமேல் போய் நிற்பது துரியத்திற்கு மேலுள்ள துரியாதீதமாகி பிரஹ்மவரிஷ்ட நிலையைக் காட்டும். இதைக் கண்டதும் மாயையாகிய காளி வெட்கி ஒய்ந்து விடுகிறாள். சித்சக்தியாகிய சிவகாமி இப்படி நம்மையும் முழுத்தும் ஒருநிலை இருக்கிறதே என்று ஆச்சர்ய பாவசையாகிறாள்.

இந்நிலையின் சிறப்பை வற்புறுத்தவே கைகள் முதலியவைகள் ஏற்பட்டுள்ளன. குஞ்சித பாதத் தைக் குறிப்பாகக்காட்டும் கை இந்தத் துரிய பதம் தவிர மானிடர்களுக்கு லக்ஷித்திருக்கு மிடம் இல்லை என்பதையும், ஊர்த்வதாண்டவத் தில் தலைமேலுள்ள காலைக்காட்டும் கையோடு குஞ்சித பாதத்தைக் காட்டும் கையும் இருப்பது, துரியாதீதம் தான் மீளா நிலையாயினும், அது துரியத்தின் மூலமாயல்லாமல் கிடைக்காது என்பதையும் வற்புறுத்துகின்றன. ஒருகையி லுள்ள டமருகம், சப்தரூபமாக நிலை பெற் றிருக்கும் ஜகத் இந்நிலையிலிருக்கும் ஆசார்யன் இச்சைமாத்ரம், அதனுள் அடக்கம் என்ப தையும், அபயஹஸ்தம் இந்நிலையிலுள்ள சாந்தி ரஸத்தையும், ஒரு கையிலுள்ள அக்னி, அதைப் பார்த்தே உணரவேண்டும், அதை உணர கண் மாத்திரம் போதும். வேறு விளக்கு வேண்டிய தில்லை என்பதன் மூலமாக, இந்நிலை அனுபவமே ஒழிய வாசாஞானத்தால் உணரப்படுவதல்ல வென்றும், இதை உணர விருத்தியாகிய ஆவல் மாத்திரம் போதும், உணருபவனுகிய ஜீவன் நிலை வேண்டியதில்லை' என்பதையும், விளக்கிக் காட்டும். ஆகவே இங்குள்ள நடனம் முற்கூறிய விடத்தில் ஏற்படும் ஆனந்த பரவசத்தால் வரும் கூத்து. இக்கருத்துக்களை உள்ளடக்கியேதான் தாயுமானவரும்:—

> கருதரிய சித்ஸபையில் ஆனந்த நிருத்தமிடும்
> கருணாகரக்கடவுளே

என்று நடராஜரைப்பற்றிக் கூறியிருக்கிறார்.

இவர் நடமாடும் இடம்! தில்லைவனம், ஸ்மசா னம். தில்லைவனமென்பது மாறுபாடுகள் நிறைந்த இப்பிரபஞ்சத்தையும், ஸ்மசானம் என்பது நாம ரூபாதிகள் எல்லாம் அழிந்து எல்லாம் பிடி சாம்பலாகச் சேஷிக்கும் இடமாதலால், நாம ரூபாதிகளுக்கு அப்பாற்பட்ட விடத்தையும், குறிப்பிக்கும். ஆலங்காட்டார் ஊர்த்வ தாண் டவமாடும் இடம் வெட்டவெளி என்பது நாம ரூபம் நீங்கியும் தோன்றும் சூன்யத்திற்கு அப் பாற்பட்ட பரவெளி என்பதைக் காட்டும். தில்லை நடராஜருக்குப் பின் உள்ள ரஹஸ்யம் இதுதான். இம்மாதிரியான அற்புதத்தை அனுபவித்தறிந் தே தாயுமானவர்'ஆகாரபுவனம் சிதம்பர ரஹஸ் யம்' என்னும் தொகுதியில் இந்த நிலையை 'அறி வாகி ஆனந்தமயமாயென்றும்' என்று தொடங் கும் பாட்டுமுதல், 'கதியன்றி உறங்கேன் மேற் கருமம்பாரேன்' என்று முடியும் பாட்டுவரையில் 5 பாடல்களில் விரிவாக விளக்கி உபநிஷத் அர்த் தத்தை எல்லோரும் கண்டு தெளியும்படிசெய்து விட்டார். நடராஜர், அவர் ஆடும் தில்லை ஸபை, அவைகளின் உட்பொருள்கள் எல்லாவற்றையும் **ஸ்ரீமான் கோபால கிருஷ்ணபாரதியவர்கள்** தாம் பாடிய நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளில் எடுத் துப் பாராட்டி எல்லோரும் அவனுடன் கேட் டுணரும்படி ஸங்கீதத்தில் இசைத்துவிட்டார். ஸ்ரீமான் ராஜம் அய்யர் அவர்கள் பின்வருமாறு இவைகளில் ஈடுபடுகிறார்.

'தில்லை ஸ்தலமே ஸ்தலம். தில்லை தில்லை என்றால் பிறவி இல்லை இல்லை என்று மறை மொழியும். தொல்லை தொல்லை என்ற கொடுவினை வல்லை வல்லை என்று அகலும். ஸ்வாமி உண்டென்பதும் அங்கே தான், இல்லை என்பதும் அங்கேதான் ; கடவுள் ஆனந்

தத்தாண்டவமாடுவதும் அங்கேதான், அசைவற்று வெளியாயிருப்பதும் அங்கேதான் ; அறியாதார் அறிவைப் பெறுவதும் அங்கேதான், அறிந்தவர்கள் அனுபவிப்பதும் அங்கேதான் ; உருவமும் அங்கேதான், ஒளியும் அங்கேதான் ; ஸ்ருஷ்டியும் ஸம்ஹாரமும் அங்கேதான். அங்குதான் உபநிஷத்தின் உட்கருத்தை உள்ளடக்கி யமைத்த ஆலயமும் ; அதற்குள் ஸ்ருஷ்டிக்கு முன்னும் பின்னும், ஒடுங்காத கடவுளின் ஆனந்த நிலைமையையும், ஆகாயரூபத்தையும், ஆனந்தத்தாண்டவத்தையும், ஒருமித்து உருவகம் செய்திருக்கும், ஸபாபதியும், ரஹஸ்யவெளியும், அவற்றிற்குப்பின் திருமூலர் திருமந்திரமும் அமைந்துள்ளது.'

ஆகவே வேதாந்த பரமாகநோக்கில், ஆசாரியன் முற்கூறியபடி தமது நிலையை உணர்த்தி 'நீயும், உன்னுள்ளிருக்கும் ஆத்மாவின் ஆனந்தநிலையை அனுபவித்து விடுபட வேண்டினால், அகங்காரத்தை வேரோடு களைந்து, மாயை மனது முதலியவைகளுக்கு அப்பாற்பட்டு துரிய நிலையை அடைய முயலவேண்டும், துரியாதீதம் தானாக வரும். இந்நிலையில் அமைதியும், சாந்தியும் பிறக்கும். பிரபஞ்சம் உன்னைவிட்டுத் தனித்திராது. காலத்திற்கு அப்பாற்படுவாய். சித்சக்தி முதலியவைகள் நிறைந்திருக்கும். இவை அனுபவித்து உணரவேண்டுமே ஒழிய வாசா ஞானத்தால் விளங்கா' என்று உபதேசிப்பதாக ஞானிகள் மதித்துத் தம்முள் தாமே நிலைபெறுவர்.

இதை நன்கு உணர்ந்து வழிபடுங்கால் ஏற்படக்கூடிய தடைகளை **ஸ்ரீராமலிங்கஸ்வாமிகள்** பின்வருமாறு எடுத்துக்கூறி, ஏங்கி பகவத்கிருபையை எதிர்பார்த்திருப்பதே இவ்வழிபாட்டின் அந்தரங்க ஸாதனம் என்று விளக்குகிறார்.

களக்கமறப் பொதுநடம்நான் கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்தது ஒருகாய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ ? வெம்பி உதிர்ந்திடுமோ?
வெம்பாது பழுக்கினும் என்குறிப்பிலகப்படுமோ?
கொளக்கருதும் மலமாயைக் குரங்கு கவர்ந்திடுமோ?
குரங்குகவராதெனது கரத்திலகப்படினும், [மோ?
துளக்கமற வுண்ணுவனோ? தொண்டைவிக்கிக்கொளுஜ்யோதித்திரு வுளமெதுவோ ? ஏதுமறிந்திலனே!

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 13. அக்கஞ் சுருக்கேல்

**உறவினர்களைக் குறையும்படி செய்யாதே**

அதாவது உன் செல்வ நிலைக்கேற்றபடி உன் உறவினர்கள் அநேகரைக் காப்பாற்றி அவர்கள் ஓங்கிவரும்படி செய்யவேண்டும். இக்கருத்தை **அதிவீரராம பாண்டியன்** தாம் எழுதிய **நறுந்தொகையில்** 'செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்' என்று கூறியிருக்கிறார். இங்கு **அக்கம்** என்பது உள் என்று பொருள்படும் அகம் என்பதன் திரிபு. வெளி என்று பொருள்படும் **பக்கம்** என்பதே இதன் எதிர்ப்பதம். ஆகவே **அக்கம் பக்கம்** என்னும் தொடருக்கு உள்ளே இருப்பவராகிய உறவினரும்,வெளியிலிருப்பவராகிய அயலாரும் என்பதே பொருள். சுருக்கேல் என்பதனால் நம்மால் கூடிய அளவு காப்பாற்ற வேண்டும் அந்த அளவிற்குக் குறையும்படி செய்யவே கூடாது என்பதாயிற்று.

ஆனால் செல்வம் வருங்கால் உறவினர்களை அலக்ஷ்யம் செய்யும்படியான நிலை வந்துவிடுமோ? அதை நீக்கத்தான் இந்த நீதி வாக்கியத்தை ஔவை கூறியிருக்கிறாளோ ? என்ற சங்கை பிறக்கலாம்.

செல்வம்வந் துற்ற காலைத்
தெய்வமும் சிறிதும் பேணார்
சொல்வன வறிந்து சொல்லார்
சுற்றமும் துணையும் நோக்கார்
வெல்வதே நினைவ தல்லால்
வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவு மோரார்
மண்ணின்மேல் வாழு மாந்தர்.

என்று கூறியிருக்கிறார் **வில்லிபுத்தூராழ்வார்.**

இதனால் செல்வம் வரும்பொழுது உறவினர்களை அலக்ஷ்யம் செய்யும்படி யாகிவிடும் என்பதாயிற்று. தனம் அதிகமாகிவிட்டால் அந்நிலைக்கு

ஏற்ற தனவந்தர்கள் இணக்கம் நமக்கு ஏற்பட ஏழைகளான உறவினர்களிடம் பழகுவதே ஒரு வித இழிவு என்ற துர் எண்ணம் உண்டாகிவிடுவது வழக்கம். ஏழையாகவிருந்து நல்ல நிலைக்கு வந்த ஒருவன் வைதிகமாகச் சாந்தராகி யிருந்த தன் தகப்பனாரைத் தனக்கு ஸமானமானவர்கள் முன்னிலையில் தகப்பனார் என்றுஒப்புக்கொள்ளக் கூசினான் என்று ஒரு கதைகூட உண்டு மேலும் உறவினர்கள் செல்வம் வந்தசாலத்தில் வந்துகூடி, செல்வம் நீங்கிய காலத்தில் விட்டுப் போய் அலக்ஷ்யமாக விருப்பார்கள் என்ற உண்மை செல்வவந்தர்களைத் தமது உறவினர்கள் விஷயத்தில் பாராமுகமாகவிருக்கும்படி செய்துவிடுகிறது. இதனால் சில தனவான்கள் பிடிவாதமாக உறவினர்களை வெறுத்துப் பிறருக்கே உதவி புரியத் தொடங்கி விடுகின்றனர். இக்காலக் கொடுமையால் இந்தத் துர்க்குணம் இன்னும் அதிகமாகிவிட்டது. 'ஒருவன் கஷ்டப்பட்டு ஸம்பாதித்துத் தனவந்தனாகவாவது,மற்றவர்கள் பிடுங்கித் தின்னும் கழுகுகள்போலத் தின்று தூங்குவதாவது? அவனவன் நெற்றி வேர்வை நிலம் தோய கஷ்டப்பட்டல்லவோ, ஸுகிக்கவேண்டும்' என்பது இக்காலத்து நாகரீகமுடையார் அற்புதக் கொள்கைகளுள் ஒன்று. ஆகவே ஒருவன் அடையும் செல்வத்தைஎல்லாம் உறவினர்களுக்குக் கொடுப்பதாகிய தர்மத்தை விட்டு,பலருக்கும் பொதுநன்மை செய்யவேண்டும் என்ற துர் ஆக்ரஹத்துடன் ஸமூகதர்மத்திற்குப் பொருள் சேர்த்து 'வைக்கின்றான். கிளைஞரைத் தாங்குவதைப் பெரிய தர்மமாக மதியாது இதை வெறுத்து ஸமூகதர்மத்திற்குப் பொருளை விட்டுவிடுவது ஒரு பெரிய துர்க்குணம். கிளைஞருக்கு உதவும் பொருள் விஷயம் மற்றதைப்போலக் கீர்த்தி தருவதல்ல. இதனால் வெறும் உலககீர்த்தியை விரும்பி செய்ய வேண்டிய கடமையைச் செய்யாது விடுவதான நிலைவரும், ஆதலால் இது துர்க்குணமே. மேலும் பொது நன்மைக்காகவிடப்படும் பொருள் முற்றிலும் உத்தேசித்தவரிடம் போய்ச் சேருவது என்பதும் இல்லை. அதைச் செலவிட ஏற்படும் தர்மகர்த்தருக்கும் சிப்பந்திகளுக்கும் போனவை போக மிருந்ததுதான் கருதியவரிடம் போய்ச் சேரும். ஆதலால் கிளைஞரைத் தாங்குவதற்கு வேண்டிய பொருளுக்குமேல் ஒருவனிட மிருந்தால் அவன் பொதுநன்மைக்கு அதைக் கொடுத்து விடலாம். பொதுநன்மைப் பயித்தியம், தனிஸம்பாத்யம் செய்யவேண்டும் என்ற ஆக்ரஹம், கீர்த்திஆசை, கௌரவஎண்ணம் முதலிய துர்க்குணங்கள் தனவந்தர்களிடம் இக்காலக்கொடுமையால் அதிகமாகிவிட்டன. இதுபோல முன்னரும் இருந்திருக்கும். இம்மாதிரியான துர் எண்ணத்தை நீக்கவே மூதாட்டியான ஔவையார் இந்நீதி வாக்கியத்தைக் கூறினாள்.

உறவினர்களைத் தாங்கவேண்டியது தனவான்களுடைய கடமை. அவர்கள் தனம் நீங்கிய காலத்தில் அவனை அலக்ஷ்யம் செய்வார்களாகில் நன்றிகொன்ற பாபம் அவர்களுக்கு வரும். அதைப்பற்றி தனவான் ஆலோசிப்பது அனாவசியம்; அதனால் செழுங்கிளை தாங்குவதை நிறுத்துவது மஹாபாபம். தர்மத்திற்கு விரோதமாக நடந்தவர்களுக்கு வரும் கதி அவனுக்கும் வந்துவிடும். மேலும் ஒவ்வொருவரும் தாம் பொருள் சேர்ப்பது தமது உறவினர்கள் செழிக்கத்தான் என்று எண்ணி இந்தக் கடமை ஒழுங்காக நடத்தி வருவார்களாயின் பொது நன்மைப் பணம்வைத்தல் என்ற பித்தம் தெளியும். பொது நன்மையைக் கோருபவர் அநேகர் இருக்கவேமாட்டார்கள். பிச்சைக்காரர்கள் யாசகர்கள் கணக்குக் குறையும். மிக அவசியமான விஷயங்களில் மாத்திரம்தான் பொது நன்மைக்குப் பணம் கொடுக்க வேண்டிவரும். இந்நீதி வாக்யத்தைப் பின்பற்றி ப்ரபுக்கள் நடப்பார்களானால் இக்காலத்தில் உண்டாகியிருக்கும் அநேக பொதுநன்மை ஸமூகங்கள் அனாவசியமாகிவிடும். தனவந்தர்கள் இந்தத் தர்மத்தைக் கடைப்பிடித்து நடக்காவிடில் இன்னும் பொதுநன்மைப் பித்து அதிகரித்துப் பணம் எல்லாம் வீணாகவே

போய்விடும்: கார்யம் மாத்திரம் ஒன்றும் நடவாது. ஒரு தெருவில் ஒவ்வொரு வீட்டுக்காரனும் தன் வாயிலைச் சுத்தமாக வைத்துக்கொண்டிருந்தால் தெருவு முழுவதும் சுத்தமாகவேயிருக்கும் என்பது போலத்தான் இதுவும். இக்காலத்திற்கு அநுகுணமாக உறவினர்களைக் காப்பதில் ஒருவித மாறுபாடு ஏற்படுத்தலாம். முன் காலத்தில் செய்ததுபோலப் பணம் கொடுத்து அவர்களைச் சோம்பேறிகளாக்கிவிடாமல், அவர்களுக்குத் தனவந்தர்கள் தம் பணம் செலவழித்து ஏதாவது வயிற்றுப்பாட்டிற்கு வேண்டிய தொழிலைக் கற்றுக்கொடுத்து அவர்களாகவே பணம் ஸம்பாதிக்கும்படி செய்யலாம். என்ன செய்தாலும் உறவினர்களுக்குத் தன் பணம், தன் நிலை ஆகிய இவைகளால் ஒழுங்குப்படி செய்யக்கூடிய உதவி செய்துவிட்டுத்தான் ஒருவன் பொதுநன்மையை யோசிக்கவேண்டும். பொதுநன்மைப் பித்து என்பது ஸமுத்திரத்தில் பெருங்காயத்தைக் கரைப்பதுபோல வீணானகார்யமாக முடியும். சிறுகூட்டத்தாரை ஸரிவர திருப்திப்படுத்த வேண்டிய பொறுமை, சிரத்தை முதலியவைகள் இல்லாதவனா பொது நன்மைக்கு உள்ளபடி உழைத்து வாரிக் கட்டிக்கொள்ளப் போகிறான்! ஒருநாளும் இல்லை. உறவினர்களைக் காப்பதாகிய கடமையைச் செய்யாது விட்ட பாபம், மேல்தர்மத்தை ஆத்திரத்துடன் கைக்கொண்ட பாபம், கோரிய கீர்த்தி கிடைக்காதிருந்தால் வரும் துக்கம், கிடைத்துவிட்டால் வரும் வீண் கர்வம், தன்பொருள் எண்ணியபடி உதவாதிருந்தால் ஏற்படும் சஞ்சலம் ஆகிய இவைகளுக்கு ஆளாகித் தத்தளிப்பானேயொழியவேறல்ல. இவைகளை எல்லாம் எண்ணித்தான், ஔவையார் 'அக்கம் சுருக்கேல்' என்று மிகப்பரிவுடன் கூறி, சுருக்கில் வரும் அனர்த்தத்திற்கு அளவில்லை என்று தோன்றும்படி விட்டுவிட்டாள். இந்த விஷயத்தில்.—

மைக்கடல்கொண் முட்டைதனை வாங்குவோ மென்று [சிட்டு
புக்கதனை வென்றுதன் புத்தியினல்-அக்கதைபோல்
வேளாளா புன்னைவன மேகமே யுண்மையெனக்
கேளாயலகஞ் சுருக்கேல்.

என்பது ஆத்திசூடி வெண்பா. இதில் ஸமுத்ரக் கரையில் முட்டையிட்டு வைத்துவிட்டுப் பெண் பறவையைத்தைர்யமாக இரைதேட அழைத்துச் சென்ற ஆண்சிட்டு திரும்பிவந்து பார்க்கையில் முட்டையைக் காணாது, அதைக் கொள்ளை கொண்டு சென்ற ஸமுத்திரத்திலிருந்து வாங்கிய விதத்தைக் கூறும் பஞ்சதந்திர கதை குறிக்கப்பட்டிருக்கிறது. இக்கதையில் ஆண் சிட்டும் பெண்சிட்டும் ஸமுத்திரத்தில் மூழ்கி வெளியே வந்து சிறகுகளை உதறி ஸமுத்திரத்தை வற்ற வைக்கச்செய்த ஏற்பாட்டைப் பறவைகள் கண்டு நகைத்து, முடியாத காரியத்தைக் கைக்கொண்டாயே என்று கேலிப்பண்ணத் தொடங்கின. அதற்கு ஆண்சிட்டு கோபம் கொண்டு, மற்றப் பறவைகளை அவமதித்துப் பேசாது, மிகுந்த அமைதியுடன் உறவினர்களை நோக்கி, 'நீங்கள் நம்மினத்தைச் சேர்ந்தவர்கள். நான் செய்யத் தொடங்கியது அஸாத்ய வேலையாயினும் நீங்களும் என்னுடன் சேர்ந்தால் இதில் எனக்கு ஜயம் உண்டானாலும் உண்டாகும். நீங்கள் என்னை இம்மாதிரி அதைர்யப்படுத்தினால் என் காரியம் கைகூடுவதாக விருந்தாலும் முடிவு பெறாது. இந்தப் பொதுவான காரியத்தில் நம் மினத்தாருள் அபிப்பிராயபேதம் வரக்கூடாது. ஆதலால் என்னோடுசேர்ந்து இந்தக் காரியத்தில் முனைந்தால் நலம். உங்கள் உதவியை முக்யமாக நான் எதிர்பார்க்கிறேன்' என்று உறவினர்களைத் தழுவிப் பேசவே, அவைகளுக்குத் தமது உறவுக் கட்டின்படி உதவிபுரிய வேண்டும் என்ற மனக் கனிவுண்டாயிற்று. இவைகள் சேர்ந்து செய்த

நிஷ்டாவஸரம்



உபந்யாஸ அவஸரம்



ஸித்தியடைந்த சிருங்கேரி மடாதிபதி ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகள்

வேலையைக் கண்ணுற்ற நாரதர், கருணை மூலமாகக் கருடமந்திரத்தால் சிட்டின் காரியம் முடிந்தது. ஆகவே உறவினர்களை இனிய மொழியால் சேர்த்துக்கொண்டால் இவ்வளவு சிறப்பு இருக்குமாகில், அவர்களைத் தனவந்தர்கள் தாங்கித் திருப்தியாக வைத்திருந்தால் எவ்வளவு மேன்மை ஏற்படாது?

தர்மபுத்திரர் மஹாதர்மாத்மா. அவரால் கூடிய வரையில் மஹாபாரதயுத்தத்தைத் தடுக்கப்பார்த்தார். இது நடந்தால் உறவினர்கள் இறந்து, தாம் தனித்து நின்று, செல்வம் நிறையுங்கால் அக்கம் சுருக்கித் தட்டழிய வேண்டுமே என்பது தான் அவர் எண்ணம். இதனாலே, எப்படியாவது சண்டை மூட்டிவிட்டு வாவேண்டும் என்று தூது செல்லவிருந்த கிருஷ்ண பரமாத்மாவிடம் வற்புறுத்திக் கூறிய பீமனை நோக்கித் தர்மபுத்திரர்:—

> உற்றாரை எல்லாம் உடன்கொண் டரசாளப்
> பெற்றால் அதன்மிக்கப் பேறுண்டோ?—வெற்
> பனிமருவும் பாழியம் தோள் வீமா! [பார்
> தனிமரமும் தோப்பாமோ தான்.

என்று அக்கம்சுருக்காமலிருப்பதால் விளையும் நன்மையை நன்கு விளக்கியிருக்கிறார் யுத்தத்தில் முனைந்த அர்ச்சுனனுக்கும் போர்முனையில்,

> உற்றாரை எல்லாம் உடன்கொன்றரசாளப்
> பெற்றாலும் யான் வேண்டேன் இம்மண்ணரசு.

என்று தோற்றியது. இப்படியிருந்தும் துர்யோதனுதியர் பிடிவாதத்தால் பாரதயுத்தம் நடந்தேறி முடிந்தபின்னர், தர்மபுத்திரருக்குமாத்திரம் அக்கம் சுருக்கிய பாபியானேனே என்ற துக்கம் மாறவேயில்லை. அதுமுதல் அவருக்கு உலக வெறுப்பு உண்டாகிவிட்டது. தர்மாத்மா ஙபாயப்படி நடந்தபொழுதும் இவ்விஷயத்தில் இப்பாடு படும்படி நேரிட்டால், தபங்காது தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால், கொக்குக்கு மூக்கு நேரே வழி என்பதுபோல, உறவினர்களை அனுதரவு செய்து பரோபகாரம் புரிய எண்ணும் மூர்க்கன் கதி என்னவாகும்?



## ஸித்தியடைந்த ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதி ஸ்வாமிகள்

## THE PASSING AWAY OF SRI SANKARA CHARYA OF SRINGERI MUTT

"இவனுக்கென்ன ஒரு கொம்பு முளைத்திருக்கிறதா?" என்பது ஒரு பழமொழி. அதாவது மஹா பண்டிதனுகி யாரையும் வெல்லக்கூடிய ஸாமர்த்தியம் உள்ளதா என்பதை அந்த முதுமொழி குறிக்கும். இக்கதைக்கு ஆதாரம் கலைக்கோட்டு மஹாமுனிவர். அவரே ரிஷியசிருங்கர். அவர் பெரு மஹான். அவர் பிறந்த இடம் ஸ்ருங்ககிரி. அதனை ஜனங்கள் ஸ்ரீங்கேரி என்பர். அது ஒரு சிறியமலை. மனதை இழுத்து அழகிற் பதித்துத் தேவதையின் அழகை யூட்டுமிடம். அவ்விடம் காண்பார்க்கு நல்ல காட்சியே! மனவிசாலத்திற்கினிய சூட்சியே. இத்தகைய இடத்தைத் தமது பீடமாக வைத்து விளங்கினவர் ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய கோவிந்த பகவத் பாதாளுடைய சிஷ்யாகிய ஸ்ரீ ஜகத்குரு சங்காாசார்ய ஸ்வாமிகள். இவர்க்குப் பின் அம்மடாதிபத்யத்தை 33 பேர் அடைந்து வந்தனர். அவரில் இப்பொழுதிருந்து கொண்டிருந்தவர் ஸ்ரீ ஜகத்குரு ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதி ஸ்வாமிகள். இவர் கடந்த மார்ச்சுமீ 20௳ யன்று பரம்பொருளில் ஒன்றினர்.

இவர் பெரு மஹான். அவரைக் குறித்தெழுத யாம் பெற்றது பாக்யமாகும். எம்பெருமானது கருணை விலாஸத்தை விசாரித்து யாவர்க்குமளித்து ஞானமூட்டி, மெய்யுணர்வுகாட்டி, மாயையொழித்து, மனமடங்கி மேல்வழி படைய இவர் அனைவர்க்கு, மனக்குழப்பங் கழிந்து சாந்தியடைய வழிக்காட்டியவர். இவர் சிறுவயதிலேயே, தபஸிக்குத் தக்க உபவாஸாதி

களை இயற்கையா யடைந்து மடாதிபத்யம் பெற்றதும், மிதமின்றி ஆஹாரம் உட்கொள்ளாதும், வரவர உணவைக் குறைத்தும் உடலை இளைக்கச் செய்தனராயினும், அவரது முகத்தைக் கண்டதும், அங்கு விளங்கிய தேஜஸின் மஹிமையால், எதிர் வந்து நின்ற பெருங் குழப்ப மடைந்த மனமும் சாந்தி யடைந்துவிடும். இது யாவரும் பெறத்தக்க பாக்கியமன்று.

இவர் மடாதிபத்யத்தில் வந்ததும் காலக்ரமத்திற் கேற்ப நிர்ணயாதிகளைச் செய்தும், பல உபந்நியாஸங்கள் ஜனங்கள் அறியக்கூடிய பாஷைகளில் செய்தும், ஒருவர் மற்றொருவரது மதத்தை ஏளனம் செய்யக் கூடாதென்பதைப் புகட்டியும், தத்தம் மதந்தழுவி பிறமத தூஷணை ஒழிக்கச் செய்தும், பிறமதத்தாரிடத்து அன்பு கொண்டாடியும், யாவர்க்கு மின்பஞ் செய்தனர். வடமொழி அபிவிருத்தியின் பொருட்டு ஒரு கலாசாலை ஏற்படுத்தினர்.

கேரள தேசத்திற் குண்டாகிய வடுச் சொல்லை நிவர்த்தி செய்யவேண்டு மென்ற ஆவல் கொண்டு காலடி என்னும் ஸ்ரீ ஆதிசங்கராது திவ்ய க்ஷேத்ரத்தில் சங்கரப் பிரதிஷ்டை செய்தனர். அச்சிறு ஊரை ஓர்சிறு பட்டணமாக்கினர். இது இந்திய ஸமூகத்திற்கு இம்மஹான் செய்த நன்கொடையாகும். மற்று கணித ஜ்யோதிஷஸங்கமொன்று கூட்டி, பஞ்சாங்க பரிசீலனம் செய்ய முயன்றனர். அதுஸரியாகப் பலன் தராதொழியினும் அவரது குற்றமென்று சொல்லமுடியாது. ஸமுத்ரயாத்ரா விஷயமாகவும் மற்றும் இக்காலத்திய வ்யவாஹாரங்களைப்பற்றியும் தமது அபிப்ராயத்தை வெள்ளிடைமலைபோல் விளங்க அருளி இருக்கின்றனர்.

இவர் ஓர் தபஸி. மஹாரிஷியென்றே சொல்லவேண்டும். நல்மொழி யுடையவர். ஞானமறியும் குணமுடையவர். இவர் திக்விஜயம் செய்து கொண்டு வரும்பொழுதிடைதிடை செய்த அதிசயங்களைக் கேட்டால் எத்தகைய ஸந்தேஹஹ்ருதயமும் அவரிடம் பவ்யமாகும் என்பதிற் கையமில்லை. ஓர் நாஸ்திகன் அவர் முன்போய் "கடவுளில்லை"என்று சொல்ல நாவெழாது நின்றனன். மற்றோர் இடத்தில் அவர் தீர்த்தப்ரஸாத மளிக்குமிடத்தில் ஓர் ஸுமங்கலி தீர்த்தம் கேட்டபொழுது அவளை அகன்றுபோகச் சொன்னார். அவள் மனத்துயரோடு வீடுசென்றபோது தன் கணவனிறந்ததாகத் தந்தி வந்திருக்கக் கண்டாள். இதுமுதலாகிய விசித்ரஸம்பவங்கள் அனேகம். அவர் சென்ற விடமெல்லாமது ப்ரஸித்தம். நாம் கூறவேண்டியதில்லை.

இரண்டாவது வயதில் தன் தகப்பனிறக்க தாயால்வளர்க்கப்பெற்றுபின் ஶ்ருங்கேரி அடைந்து குருகுலவாஸம் செய்து ஸ்ரீகுரு அவர்களால், ஸ்ரீங்கேரிபீடாதிபதியாக ஏற்படுத்தப்பட்டுமஹா விபவத்துடனிருக்கக்கூடியகாலத்தில் யாவற்றையும் வெறுத்து, குணப் பெருங்குன்றாய் விளங்கி, ஒழுக்கம் குன்றாது, தவமே தர்மங்கொண்டு உடலைச் சுருக்கி, யுணவைக்குறைத்து, ஜீவன் முக்த தசையிலுழைத்து, உள்ளன்பூறி, உலக ஜனங்களின்பொருட்டு அவர்கள் ஞானவிசாலிக்க உபந்நியஸித்து, தன்னுள் உணர்வை அவன்பால் சேர்த்துத் திடவைராக்யத்துள்பட்டு மாயா விகாரத்தை ஒழித்து அவன்பால் மயங்கிய இப்பெருமஹானது வைபவம் யாவர்க்கும் உத்ஸாகமூட்டி அவரது நடத்தையையும் வாழ்க்கையையும் உயர்த்தி மனோவிசாலத்தில் ஆழ எம் மதமும் ஸம்மதமாக்கி "ஏகம் ஸத்விப்ரா பஹுதாவதந்தி" என்ற வேதவாக்யத்தின் உண்மையுணர்ந்து அதை அனுபவிப்பாரென்பது யான் மாத்ரமன்றி யாவரும் விரும்பக்கூடியதே. ஓம் சாந்திஃ சாந்திஃ சாந்திஃ

# நியாயமாலை

## POPULAR MAXIMS EXPLAINED

### 32. कदम्बगोलक न्यायः

కదంబగోళక న్యాయః

கதம்பகோளக ந்யாயம்.

கதம்பம் என்பது அடம்பம் என்று கூறும் ஒருவித மரம். இதனடியில்தான் அம்பிகை எழுந்தருளியிருப்பதாக த்யானம் செய்வது வழக்கம். கோளகம் என்பதற்கு மொட்டு என்பது பொருள். கதம்ப மரத்தில் மொட்டுவிட்டதின் பிறகு எல்லாம் ஒரே அடியாகப் புஷ்பிப்பது வழக்கம். இம்மாதிரி அநேக விடங்களில் ஒரே கார்யம் ஒரே ஸமயத்தில் நடந்தேறிப் பலிக்குங்கால் இந்த ந்யாயம் உபயோகப்படும். மின்சார தந்தி, கம்பி இல்லாத் தந்தி முதலியவைகள் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் எல்லாப் பொதுவிஷயங்களும் கதம்பகோளக நியாயப்படி நடந்தேறும். உதாரணமாகச் சென்ற 1911௵ கார்த்திகைமீ டில்லியில் நடந்த நமது சக்கரவர்த்தி மகுடாபிஷேகக் கொண்டாட்டம் உலகெங்கும் ஒரே ஸமயத்தில் சற்றேறக்குறைய ஒரேமாதிரியாகக் கொண்டாடப்பட்டது, இந்த நியாயத்திற்கு உதாரணம். வேதாந்த சாஸ்திரத்தில் இருவித ஸ்ருஷ்டிகள் கூறப்படுகின்றன. அவையாவன க்ரமஸ்ருஷ்டி, ப்ரபோத அல்லது யுகபத் ஸ்ருஷ்டி என்பவைகளே! தூக்கத்தில் ஒன்றும் தோன்றாது விழித்ததும் ப்ரபஞ்சவைசித்ரியம் தோன்றுவது போல, ஒரே ஸமயத்தில் இச்சாமாத்திரத்தில், அவுட்பாணத்திலிருந்து புஷ்பம் தோன்றுவது போல வெளிப்படுவது ப்ரபோத ஸ்ருஷ்டி யாதலால் அதுவும் இதற்கு உதாரணம்.

### 33. कफोणिगुड न्यायः

కఫోణిగుడ న్యాయః

கபோணிகுட ந்யாயம்.

கபோணி என்பதற்குப் புறங்கை என்பது பொருள். நாம் எடுத்து உண்ணும் வஸ்துக்கள் எல்லாம் அகங்கையால் எடுப்பதாயினும், புறங்கையை நக்குங்கால் எடுத்த வஸ்துவின் மேல் நமக்கு ஆசை என்பது வெளியாகும். ஆகவே உள்ளங்கையால் எடுத்த வெல்லம் போன்ற வஸ்துவின் மேல் நமக்கிருக்கும் ஆசை அது இல்லாத புறங்கையை நக்குவதால் குறிக்கப்படுகிறது. இதுபோல ஒன்றில்லாத விடத்தில் அதைத் தேடப் புகுந்து அந்த வஸ்துவினிடத்திலுள்ள ஆசை வெளிப்படுங்கால் இந்த நியாயம் உபயோகப்படும். இதற்கு உதாரணமாக உலகப்ரவிருத்தியையே எடுத்துக் கொள்ளலாம். இதனால் மனஸ் ஸமாதானம் பெறலாம் என்று நாம் ஓயாதுமுயலுகிறோம். ஆனால் வெளிவஸ்துக்களிலிருந்து ஏற்படும் ஸமாதானம் நீடித்திராததால் நாம் மேல்மேலும் முயன்று வருகிறோம். ஆகவே இதிலிருந்து நமக்கு வெளி விஷயத்தில் உண்மையாகவே இச்சை இல்லை என்றும், அதனால் நமக்கு உண்டாகிவிடும் என்று அறியாமையால் மதிக்கும் மாறு ஸமாதானத்தில்தான் நமக்கு ஆசை என்பது தெரியவரும். இதிலிருந்து உலகப்ரவிருத்தி புறங்கையை நக்குவது போலிருப்பதால் இந்த நியாயத்திற்குத் தகுந்த உதாரணம்.

### 34. करकङ्कण न्यायः

కరకంకణ న్యాయః

கரகங்கண ந்யாயம்

கங்கணம் என்றால் கரபூஷணம் என்றே பொருள். கையில் போட்டுக்கொள்ளும் ஓர் அணி என்று கங்கணம் என்ற சொல்லுக்குப் பொருளாதலால், கரகங்கணம் என்றுசொல்லுவது அநாவசியம் என்று தோற்றும். ஆயினும் அது கையிலே அணியப்பட்டிருக்கிறது என்பதை உணர்த்தும். ஒன்றோடு ஸம்பந்தப்பட்ட மற்றொன்று வேறாயிருப்பினும் அவை இரண்டும் சேர்ந்திருக்கின்றன என்று குறிக்கும்படி இரண்டையும் அநாவசியம்போலக் காணப்படும்படி சேர்த்துச் சொல்லுங்கால் இந்நியாயம் உபயோகப்படும். 'என் வயிறு பசிக்கிறது,' 'என் கண்ணால் கண்டேன்' என்ற ஸாதாரணமாக நாம் கூறும் மொழிகள்

இந்யாயத்திற்கு உதாரணம். பசி வயிற்றிலே ஏற்படும் ஒரு அனுபவமாயினும், இம்மொழி கூறுங்கால் அப்பொழுது தனக்குப் பசிவந்துவிட்டது என்பதையும், காண்பது கண்ணாலேதான் இருந்தபோதிலும் குறிப்பிட்டிருக்கும் விஷயஸம்பந்தமாகத் தன்கண் உபயோகப்பட்டது என்று உணர்த்த அனுவசியம்போலத் தோன்றும்வயிறு, கண் என்ற பதங்கள் இங்கு அமைந்து கிடப்பதால் இவை இந்யாயத்திற்கு உதாரணமாயின.

### 35. काकतालीय न्यायः
### కాకతాలీయ న్యాయః
### காகதாளீய ந்யாயம்

பதப்படி நோக்கில் காக்கை பனம்பழ ந்யாயம் என்பதாகும். இவை இரண்டுக்கும் உள்ள ஸம்பந்தத்தைப் பலவிதமாகப் பொருள்படுத்துவது உண்டு.

(1) ஒரு காகம் பனைமர உச்சிக்குப் பறந்து வந்து அங்கிருந்த ஒரு பழுத்த பழத்தின் மேல் உட்காரப்பார்த்தான் ஒருவன். உடனே பனம்பழம் விழத்தொடங்கியது. காகம் ஆதாரம் நழுவுவது கண்டு மேலே பறந்துபோய் விட்டது. அதைப் பார்த்துக்கொண்டிருந்தவன் காக்கை தான் பனம்பழத்தைத் தள்ளிவிட்டது என மதிக்கலாம். இப்படி இருக்கையில் நுட்ப புத்தியுடைய ஒருவன் வந்து 'அதென்ன! அப்படிச் சொல்லுகிறாய்! பனம்பழம் மரத்தில் பிடித்திருக்கும் சக்தி என்ன காக்கையின் அளவுஎன்ன! காக்கையாவது பனம்பழத்தைத் தள்ளவாவது! காக்கைஏறப் பனம்பழம் விழுவதும் சரியாகவிருந்தது. பனம்பழம்விழுந்தருணமாக விருக்க காக்கை ஏறியது. தகுந்த ஸமயத்தில் வந்து முன்னாக வாய்த்துக்கொள்ள இது அதற்குக் காரணம் போலத் தோற்றியதே ஒழிய உண்மையில் காரணமாகாது' என்று விளக்குவன். உலகத்தில் நன்மை தீமைகள் ஒருவனுக்கு வருவது அவன் தற்கால நற்செய்கை, நற்குணம்முதலியவைகளால் ஏற்படுபவைகள் அல்ல. அப்படி இருந்தால் உலகில் நல்லவர்கள் எல்லாம் ஸுகமடையவும், கெட்டவர்கள் எல்லாம் வருத்தப்படவும் காணவேண்டுமே! அவ்வாறின்றி நல்லோருக்குத் துன்பம் அடுக்கடுக்காகவும், தீயோருக்கு ஸுகம் மேல்மேலும் வருவது நமது அனுபவம். ஆதலால் சிற்சில சமயங்களில் நல்லோருக்கு நன்மையும் தீயோருக்குத் தீமையும்வரக்கண்டபோதிலும், அல்லது மாறாக வரக்கண்ட போதிலும், 'இவைகளுக்கு உள்ள ஸம்பந்தம் காகதாளீயமே, ஒருவன் அப்பொழுதிருக்கும் நிலைக்கும் அவனுக்கு வரும் பலனுக்கும் காரண காரிய சம்பந்தம் இல்லவே இல்லை. நற்குணத்தின் பலன் வேறு, அவனுக்கு ஸுகதுக்கங்களை அப்பொழுது கொடுக்கும் காரணம் வேறு, இவைகள் அடுத்து வருவதால் காரிய காரண ஸம்பந்தம் கற்பிக்கலாகாது' என்று பகுத்தறிந்து ஸுகம் வருங்கால் மூழ்காமலும், துக்கம் வருங்கால் அழுந்தாமலும் எக்காலத்திலும் ஒரேமாதிரியாக ஸத்ப்ரவிருத்தியிலேயே நிலைபெற்றிருப்பர் பெரியோர். கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமா? ஸன்மார்க்கத்திலிருப்பதே மேன்மையாகிவிட அதனால் வேறு ஒருமேன்மையும் வேண்டுமா? என்று மனங்கலையாதிருப்பர் மஹான்கள். உலக ஸுகதுக்க விஷயமாக யாதொரு தீர்மானமும் செய்யாது அவைகளை காகதாளீயமாகக் கருதி உபேக்ஷையுடனிருப்பர் பெரியோர்.

(2) ஒரு காகம் பறந்துகொண்டே போயிற்றாம், பனைமரத்திலிருந்து ஒரு பழம் விழுந்தது. தற்செயலாய் காக்கை பனைமரத்தின் கீழ் பறந்து வருவதும் பழம்மேல்விழுவதும் ஸரியாக விருக்க காக்கைமண்டை சிதறிஇறந்ததாம். இதுபோலவே வேறொருகதையும் கூறுவதுண்டு. ஒருவழுக்கைத் தலை மொட்டை ஒருவன், வழி நடந்துபோகையில் நடுப்பகல் வேளையில் ஒரு மணற்காட்டின் வழியாகப் போகவேண்டியிருந்தது. வெயில் மண்டையைப் பிளக்க, மணல் காலில் கொளுத்த நிற்கத் தரியாது ஓடி, மத்தியிலிருந்த ஒரு பனை

4-65









எலும்புக்கூடு



அங்கங்கள் அமைப்பு



நரம்புகளின் அமைப்பு

மரத்தடியில் ஒதுங்கினான். பனைமரத்தில் என்ன நிழலிருக்கும் ? ஆயினும் அது அவனுக்கு ஸ்வர்க்கம்போலத் தோன்ற இளைப்பாறத் தொடங்குகையில் பனைமரத்திலிருந்து ஒரு பெரும் பழம் விழுந்து அவன் மண்டை கீறி இறந்தான் என்ற ஒருகதை உண்டு. இவை காரிய காரண ஸம்பந்தமின்றித் திடீரென்று உண்டாகும் அனிஷ்டத்தைக் குறிக்கின்றன. இந்தப் பாகம் அஜாக்ருபாணீய ந்யாயம் என்ற 109-வது பக்கத்தில் 2-வதுர்ங்யாயத்தில் விஸ்தரித்திருப்பதைக்காண்க.

(3) ஒரு காகம் பறந்து வந்து ஒருபனமரத்தடியில் உட்கார்ந்ததாம். உடனே ஒரு மரத்து பனம்பழம் கீழேவிழுந்துஉடைந்துபோக அதைக் காகம் வயிறாரத்தின்று பசிதீர்ந்து ஸுகம் அடைந்ததாம். இதனால் எதிர்பாராத நன்மை வருவது குறிக்கப்படும்.

காக்கைக்கும் பனம் பழத்திற்கும் எவ்விதமான ஸம்பந்தம் ஏற்படுத்திக் கூறியபோதிலும், எதிர் பாராத தற்செயலாக நடக்கும் விஷயங்களிலும், முன்ன நடந்த விஷயத்தோடு கார்யகாரண ஸம்பந்தமாகத்தோற்ற மாத்திரத்தில்பொருத்தக் கூடிய விஷயங்களிலும் இந்யாயம் உபயோகப்படும் என்பது விளங்கும். பரம்பொருளை உள்ளபடி உணர்ந்த ஞானிகள் உலகத்தில் நடப்பவைகள் எல்லாம் காகதாளீயமே என்று மதித்து,

சென்றது கருதார், நாளைச்
　　சேர்வது நினையார், கண்முன்
நின்றது புசிப்பார், வெய்யில்
　　நிலவாய்விண் விழுது வீழ்ந்தும்,
பொன்றிய சவம்வாழ்ந் தாலும்,
　　புதுமையா யொன்றும் பாரார்
நன்றுதீ தென்னார் ஸாக்ஷி
　　நடுவான ஜீவன் முக்தர்.

என்று கைவல்ய நவனீத வாக்கியப்படி தம் நிலையிற் பிரியாதிருப்பர். ஆதலால் இந்தக் காகதாளீய நியாயத்தை நன்குஆராய்ந்து ப்ரபஞ்ச விஷயங்களில் கூடியவரையில் பொருத்திப் பார்த்தால், அவ்வவைகளிலிருந்து நமக்கு ஏற்படக்கூடிய மனச்சஞ்சலம் நம்மைவிட்டு அகல, நமது மனம் நிலைபெற்றுக்கொண்டே வந்து முடிவில் முத்தி கைகூடும் என்பதற்கு ஸந்தேகமில்லை.

## நாம் வசிக்கும் அற்புத வீடு

## THE WONDERFUL HOUSE WE LIVE IN

உலகத்தில் மனிதனால் கட்டப்பட்டுக் காணப்படும் மாடமாளிகை கூடகோபுரம் என்று சொல்லப்படும் கட்டடங்களின் விமரிசையைக் கவனித்துப் பார்க்குங்கால்,மனித சரீரக்கட்டட அமைப்பைவிட அத்யுன்னதமான கட்டட அமைப்பு உலகத்தில் காணக்கூடியதல்ல என்று தீர்மானிக்கலாம். கட்டடங்களில் அனுபவிக்கக் கூடிய சகல சுகத்துக்கும் ஆதார பூதமாகிய பலவகை சவுகரியங்கள் நம் தேகத்திலும் காணலாம். ஒரு மாளிகையின் சிறப்பு அதில் உடையவன் குடியிருந்தால் மாத்திரம் விளங்குமே ஒழிய, பாழாய்க் கிடத்திவிடின் எப்படி நிலை குலைந்து அழிந்து விடுமோ அதுபோல மனித சரீரமும், உடையவனாகிய ஜீவன் இருக்கு மட்டும் பார்த்து வியக்கக்கூடிய நிலைமையிலிருக்கும். ஜீவன் விலகுங்கால் நம் உடலும் அழியும் இயல்பை உடையது. இவ் அற்புத வீட்டின் விமரிசையைச் சற்று விசாரிப்போம். வீட்டிற்குத் தலைவாயில் இடைகழி முதலிய பிரிவுகள் இருப்பதுபோல, நம் தேகமும் தலை, கழுத்து, உடலாகிய முண்டம், கைகால் முதலிய அவயவங்களோடு பிரிந்து காணும். இக் கட்டடத்துக்குச் சுவர் தூண் உத்தரம் போன்று விளங்கும் எலும்புக்கூடும் உண்டு. தலையில் மூளையைக் காப்பாற்றும் கபாலம் என்ற எலும்புப் பெட்டியும் மூளையினின்று நீளும்பெருநரம்புக்கு, கேடு வராமல் காப்பாற்றப்படும்பொருட்டு ஏற்பட்ட முதுகெலும்பின் மேர்திரக் குழாயும் முக்கியமான பாகங்கள். கைகால்கள் நீட்ட மடக்க இலகுவாயும் பலமாயும்அமைக்கப்பட்ட எலும்புகளின் தொகுதியும் ஹிருதயம், சுவாஸப்பைகள் முதலிய பிராணாதாரமான அவயவங்களின் ரக்ஷணார்த்தமாக அமைந்திருக்கும் மார்க்கூடும் எலும்புகளின் சேர்க்கையாம். தேகத்தின் ஒரு பாகத்தை மற்றொரு பாகத்தோடு அசை

வுப் பொருத்தத்தோடு சேர்த்து அவ்வசை வுக்கே காரண பூதமாயுள்ள பேசிகள் (Muscles) எனப்படும் மாமிசங்கள் இணைக்க ஏற்ற சாதனங்களாகவும் எலும்புகள் இருக்கின்றன.

வீடு ஆகிய கட்டடம் முடியவேண்டுமானல் சுவர், தூண், உத்தரம் மாத்திரம் போதுமா? அச்சுவர், மண், சுண்ணாம்பு, கல் ஆகிய இவற்றால் அமையுமன்றோ! அவைபோன்ற பதார்த்தங்கள் நம் தேகத்தில் உள்ளனவோ என ஐயுறலாம். தேகத்துள்காணப்படும் சதை,தோல்,நரம்பு இவைகளின் செதில்களாகிய கண் அறைகளேயே கற்களாகப் பாவிக்கலாம். கண் அறைகளேக்கட்டி பேசிகளாகவோ, மற்ற அங்க அவயவங்களாகவோ செய்ய உபகாரமாயிருக்கும் நாற் செதில்களும் உண்டு. பின்கூறிய செதில்களேயே, ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்தும் மண்காரையாகப் பாவிக்கலாம்.

வீடு என்றால் உள், வெளி முதலிய இடங்களுக்கு வரப்போக வாயில்களும் ஜன்னல்களும் வேண்டுமல்லவோ? நம் தேகத்திலும் போக்குவரவுக்கேற்ற அவ்விதமான வாயில்களும் உண்டு. அவைகள்தாம் நவத்துவாரங்கள் என்று கூறும் வாயில்கள் ஆவன. வீடு என்றால் மேல்பூச்சு உட்பூச்சு இவைகள் இன்றிக் கட்டடம் முடிவு பெறுதன்றோ! நம் தேகமாகிய வீட்டிற்கும் வெளித்தோல், உள்தோல் அமைந்திருப்பதை ஊகிக்கலாம். வெளித்தோல் ஆகிய சர்மம் தேகத்தின் உள்ளிருக்கும் அங்க அவயங்களுக்கு அபாயம்வராதபடிகவசம்போலிருந்து தற்காக்கும். உட்தோல் தேகத்திற்கானும் துவாரங்களில் ஆரம்பித்து உட்செல்லும் குழாய்களுக்கு உட்பூச்சு போல நின்று அதனுட் செல்லும்படியான வஸ்துக்களால் தேகத்துக்குக் கெடுதி வாராதபடி காத்து ரக்ஷிக்கும்.

நம் வீட்டில் (தேகம்) நடந்தேறிவரும் காரியங்கள் இன்னவையென்று சற்று விசாரிப்போம். உயிரோடிருக்கும் ஒருவனை ஒருநாள் கவனிக்கும் பக்ஷத்தில், அவனது தேகத்திற்கும் அவனைச் சுற்றிலுமிருக்கும் பொருள்களுக்கும் ஏற்படும் வியாபாரம் இன்னதென்று அறியலாம். சதா காற்றைச் சுவாசிக்கிறான், பிராணவாயுவின் விசேஷத்தால் ஏற்பட்ட சூடானது இவன் தேகத்தோடு சம்பந்தப்படும் காற்று உடை முதலிய எவ்வகைப் பொருளையும் சூடாக்கிக் கழிவதைக் காணலாம். இக்கழிவினால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடுசெலுத்தப் பசி தாகம் ஆகிய இரண்டினால் தூண்டப்பட்டு, ஆகாரம் உட்கொள்வதையும் காணலாம். சிறிது நேரத்துக்கு ஒருமுறை கழியும் மல ஜலத்தின் மூலமாகவும் தேகத்தில் எப்பொழுதும் உண்டாகும் வியர்வையின் மூலமாகவும் பல பதார்த்தங்கள் ஜலம் உப்பு வாயு இவை சம்பந்தப்பட்ட அநேக கழிவு பதார்த்தங்கள் தேகத்தைவிட்டு விலகுவதையும் பார்க்கலாம். பதார்த்தங்கள் போக்குவரவுக்குச் சாதனமாய் ஏற்படும் வீடாகிய தேகத்தை ஒரு பெரிய வியாபார சாலையாகவும் சொல்லலாம். தேகத்தின் இரத்தம் சுத்தமாகச் சுவாஸப்பையும், உட்செல்லும் ஆகாரம் ஜீரணிக்க இரைப்பையும், கழிவு பதார்த்தம் விலக மூத்திரக் காய்கள் குழாய்களும் மலப்பையும் நம் தேகத்தில் இருக்கின்றன.

வியாபாரசாலைக்குக் காரியஸ்தன் என்றும்,எஜமான் என்றும் உண்டல்லவோ? எஜமானன்தான் மூளையாகும். சகல காரியத்தையும் விசாரித்து அறியவும் யோசித்துத் தீர்மானம் பண்ணிப் புலன்களுக்கு உத்தரவு பண்ணவும் இவ்வகைத்தான காரியங்கள் மூளையைச் சேர்ந்தது. சாதாரண காரியங்களை இச்சை (Will) யானது தடுக்கவோ, மாறுபாடுகள் செய்யவோ கூடும். ஆனால் உயிருக்கு இன்றியமையாது நடந்தேறி வரவேண்டிய ரத்த ஓட்டம், சுவாஸம், ஜீரணம், முதலிய காரியங்கள்,இச்சையால் நிறுத்தப்படக்கூடியவை யல்ல. மூளையானது தந்தித் தபாலைப்போல ஒரு தலைமை ஆபீஸ் என்றே சொல்லலாம். அதற்கும், தேகத்தின் அவயவங்கள் ஒவ்வொன்றிற்கும் வெள் நரம்பினாலாகிய தந்திக் கம்பிக

சம்பந்தமாக நிற்கின்றன. வெளி விஷயம் மூளைக்குத் தெரிவிக்கவும் மூளையினுடைய இச்சையானது மற்ற அவயவங்களுக்குச் செல்லவும்சாதனமாகவுள்ளவை இவ்வெள் நரம்புகளே. மூளையாகிய எஜமானன் தேகத்தின் அவயவங்கள் உறுப்புகள், இவைகளுக்கு வேண்டியவைகளைக் கொடுக்கவும், வேண்டாதவைகளை அவைகளினின்று நீக்கவும் இரத்த ஓட்டத்திற்கு ஆதாரமாகிய ஹிருதயம் என்னும் காரியஸ்தனை நியமித்திருக்கிறான். தன்னோடு சம்பந்தப்பட்டிருக்கும் அநேக குழாய்கள் வழியாக ஹிருதயமானது விரிந்து சுருங்கி இரத்தத்தைத் தேகத்தின் உறுப்புகளுக்குள் பாயும்படியாகச் செய்கிறது. சுவாஸப் பையினின்று வரும்பொழுது பிராணவாயுவைக் கிரஹித்துக்கொண்டும்,ஜீரணப்பை, குழாய் இவைகளின் வழியாகச் செல்லுங்கால், ஆகாரஸத்தையும், மற்றைய எல்லா விடங்களினின்றும் வேண்டாத பதார்த்தங்களாகிய கரியமிலவாயு, உப்பு நீர்ப்பதார்த்தம் இவைகளையும் சேகரித்துக்கொண்டு இரத்தமானது ஓடுகின்றது. வேண்டாத பதார்த்தங்கள் வேர்வை மூலமாகவும் வெளிமூச்சாகிய சுவாஸ ரூபமாகவும் மூத்திர ரூபமாகவும் விலகுகின்றன. ஜீவனுக்கு இன்றியமையாத வஸ்துக்களாகியபிராண வாயுவும், ஆகார ரஸமும் உறுப்புகளுக்கு இரத்தத்தின் மூலமாகத்தான் கொடுக்கப்படுகின்றன.

தேகத்தின் மற்றைய அவயவங்களாகிய கை, கால், முதலியனவும் பஞ்ச இந்திரியங்கள் எனப்படும் மெய், கண், வாய், மூக்கு, செவி இவைகளை எஜமான் குற்றேவல் செய்யும் கையாட்களாகப் பாவிக்கலாம். இவைகளின் ஒத்தாசையால்தான் தேகத்திற்கு வேண்டிய காரியங்கள் குற்றம் குறைவின்றி நடந்தேறி வருகின்றன. சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தாதிகளாலே, நம்மைச் சுற்றிலும் இருக்கும் பொருள்களின் சாதக பாதகங்களை அறிய இடமாயிருக்கிறது. நமது தேகத்திற் காணும் மற்றைய அற்புதங்கள் தேக உற்பத்தியிலும் வளர்ச்சியிலும், மக்கட்பேரிலும் காணலாம். ஸ்வயமாக வேலைசெய்து குறைவுகளை நிரப்பி அழிவு தேய்வுகளை சுடுசெலுத்திக்கொண்டு நடந்தேறவல்ல ஒரு விசித்திர யந்திரமாக நம் தேகத்தைச் சொல்லலாம். ஆனால் இவ்யந்திர விமரிசை கேவல ஸ்வரூபமாகிய கருவினின்று ஜனித்து, வளர்ந்து மறுபடி நமது தேகமாகிய யந்திரத்தை உண்டுபண்ணவல்ல கரு உற்பத்திக்கு ஆதாரமாக உள்ள சுக்கில சுரோணிதத்தை உள்ளடக்கியே காணப்படும். ஆகையால் கருவின் விகாஸமே தேகமென்றும், தேகத்தின் குறுக்கமே கரு என்றும் சொல்லலாம்.

நம் தேகம் வியாபாரசாலை என்று முன்னமேயே சொன்னோம். வியாபார ஒழுக்கங்களை அனுசரித்தாலன்றோ வியாபாரம் நன்கு நடைபெறும். நமது தேகத்தில் நடக்கும் ஜீவிய தொழில்களும்,தேக அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகளைக் கவனித்து கால தேச வர்த்தமானங்களுக்கு இணங்க, நடைபெற வேண்டும். அவ் ஒழுங்குகள் யாவை யெனில் சுகாதார விதிகளேயாம்.

N. S. ஐய்புநாதய்யர், பீ. ஏ., எல். டி.

---

சிறு விஷயத்திலும் உண்மையாயிருக்க வேண்டும்.—இதுதான் நாம் எடுத்த ஜன்மம் சரியான ஜன்மம் என்பதைக் காட்டும் கண்ணாடி. இதற்கு விரோதமாய் குற்றமென்றறியாமலே சிறு பொய்களையும், மாமாலங்களையும், நாம் சிறுவயதிலேயே ஆரம்பித்து விடுவோமானால் வெகு சடுதியில் நாம் நமது பெயரை இழந்து எத்தொழிலில் நாம் புகுந்தபோதிலும் அத்தொழிலில் மேன்மையும் மரியாதையுமின்றி ஏங்கி நிற்போம். ஒரு சிறுமோசம் அல்லது ஒரு சிறுபொய் இதில் நாம் பழகிவிட்டால் அதில் நாம் அவ்வாறு நாளுக்கு நாள் பழகி வருவோமேயல்லாது அதை விட்டு விலக நமக்கு வழியே யில்லாமல் நமது வாழ்நாட்கள் முழுமையும் பொய்யன் என்ற பேர் படைத்தே கழித்துவருவோம். இப்பொய் நமது தேகத்தில் ஊறிவிடுகின்றபடியால் கண்ணிமைப்பதுபோல் இது நமக்குள் ஒரு குறையாய் அமைந்து நம்மைவிட்டுப் போகாமல் நமக்குள்ளேயே பரவிவிடுகின்றது. அவ்வாறழிந்தவர்களுக்கு நிஜமென்பதைச் சொல்லவே முடியாது. அது அவர்களுடைய அக்கால இயற்கைக்கு விரோதமாய் விடுகின்றது. நண்பர்களே! இது முக்கியமான விஷயமாகையால் நாம் சொல்லுவதை ஏதோ என்றெண்ணமல் சிறுவயதிலேயே பொய்யையும் மாமாலத்தையும் தவிர்ப்போமேயானல் நமது ஜன்மம் கொடியதாய் முடியாது. ஆகையால் நாம் இதில் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். ஒரு சிறு பொய்யை முதல் முதலில் சொல்லுவது வெகு எளிதாய்க் காணப்படலாம். அவ்வாறெண்ணி அத்தொழிலில் நாம் சிக்கிக்கொண்டால் மீண்டும் கரையேறுவதரிது. ஆகையால் அச்சிறு பொய்க்கு நாம் முதல் முதலில் இடங்கொடுக்கவே கூடாது. அவ்வாறு செய்தால் நாம் க்ஷேமமடைவோம்.

# உபநிஷத் ரத்தினமாலை

## THE SUMMARY OF THE MINOR UPANISHADS

### 23. வாஸுதேவோபநிஷத் (56)

ஏது எல்லாவற்றுள்ளும் பரவி, எல்லாவற்றிற்கும் ஆதாரமாகி, தனக்கு ஒரு ஆதாரவஸ்துவு மின்றி, நிலைத்திருக்கிறதோ அந்த வஸ்துவை நான் த்யானம் செய்கிறேன்.

பகவத் ஸ்வரூபமான நாரதர் ஸர்வேச்வரரான வாஸுதேவரை, அடுத்து, வணங்கி, 'ஓ பகவானே! எனக்கு ஊர்த்வ புண்ட்ர விதியைச் சொல்ல வேண்டும், அதற்கு வேண்டிய த்ரவ்யம், மந்த்ரம், ஸ்தானம், ஆகிய இவைகளையும் கருணை கூர்ந்து உபதேசிக்க வேண்டும்.' என்று கேட்டார்.

வாஸுதேவர் உபதேசிக்கிறார்:—

"விஷ்ணு சந்தனம் என்றொரு வஸ்து வுண்டு. அது வைகுண்ட ஸ்தானத்திலிருந்து உண்டாகியது. எனக்கு மிக ப்ரியமானது, ஆதலால் ஒவ்வொரு நாளும் என் அங்கத்தில் பூசப்பட்டுள்ளது. ப்ரஹ்மா முதலிய எனது பக்தர்களால் மிகுந்த ஆவலுடன் தரித்துக் கொள்ளப்பட்டது இது. கோபிகள் பண்ணுவதால் இதற்கு கோபி சந்தனம் என்ற பெயர் வந்தது. இது சக்ர தீர்த்தத்தின் நடுவிலிருந்து எடுக்கப் பட்டு சக்ரத்துடன் கூடிய மஞ்சள் வர்ணமான ஒரு வித வஸ்து, இது முக்திக்கு ஸாதனமானது.

"இந்தக் கோபி சந்தனத்தை நமஸ்கரித்து, அதை எடுத்து 'ஏ கோபி சந்தனமே, நீ பாபங்களைப் போக்கும் விஷ்ணுவின் சரீரத்திலிருந்து உண்டாகி இருக்கிறாய். உன்னை நமஸ்கரிக்கிறேன். தரித்துக்கொள்ளுவதால் என்னைக் கரையேற்று' என்று துதிக்க வேண்டும். **इमंमेगङ्ग** என்ற மந்திரத்தால் ஜலத்தை எடுத்து **विष्णोर्नुकं** என்று குழைக்க வேண்டும். **अतोदवा, अवन्तुनः** என்ற மந்திரங்களால் விஷ்ணு காயத்ரியினலேயாவது அல்லது கேசவாதி 12 நாமங்களினலேயாவது இதை இட்டுக் கொள்ளவேண்டும். ப்ரஹ்மசாரியாக விருந்தாலும், வானப்ரஸ்தனாக விருந்தாலும், நெற்றி, மார்பு, கழுத்து, தோள், இவைகளில் முன் சொன்னபடி இட்டுக்கொள்ளவேண்டும். கிருகஸ்தனே 'சங்குசக்ர கதாதரா! துவாரகாவாஸீ! வாஸுதேவ! கோவிந்தா! புண்டரீகாக்ஷா! சரணமடையும் என்னைக் காத்தருளவேண்டும்,' என்று தியானித்து நெற்றி முதலான 12 இடங்களில் மத்தியவிரலால் முற்கூறியபடி இடவேண்டும். ப்ரஹ்மசாரியும் இவ் விரலையே உபயோகிக்கவேண்டும்.

"யதியோ பவித்ர விரலால் தலை நெற்றி மார்பு இவைகளில் ப்ரணவ மூலமாகவே இட்டுக்கொள்ள வேண்டும். அகார உகார மகார ஸ்வரூபமான ப்ரணவம் வைதிகமான மும்மூன்றான சேர்க்கைகளை அடக்கியுள்ளது. அவையாவன, மும்மூர்த்திகள், மூன்று வ்யாஹ்ருதிகள், மூன்று வேதங்கள், மூன்று அக்னிகள், மூன்று ஜ்யோதிஷ்மான்கள், மூன்று காலங்கள், மூன்று அவஸ்தைகள், மூன்று ஆத்மாக்கள், மூன்று ஊர்த்வபுண்ட்ரங்கள் ஆகிய இவைகளே. இதுவே ப்ரஹ்ம ஸ்வரூபம் ஸத். இதுவே அநேக மாயிற்று. ஊர்த்வஸ்தானத்திற்கு இது கொண்டு போவதால் ப்ரணவ அதிகாரி இவ்வாறு இட்டுக்கொள்ள வேண்டும்.

பரமஹம்ஸன் நெற்றியில் மாத்ரம் ப்ரணவத்தினால் ஒரு ஊர்த்வபுண்ட்ரம் இட்டுக்கொள்ளவேண்டும். தத்வமாகிய தீவட்டிக்கு ப்ரகாசம்போன்ற தன் ஆத்மாவைப் பார்க்கும் யோகீ எனது ஸாயுஜ்யத்தை அடைகிறான்.

"மார்பிலுள்ள புண்ட்ர மத்தியிலாவது, ஹ்ருதய கமலமத்தியிலாவது, நுட்பமான அக்னி ஜ்வாலை ஊர்த்வமுகமாக இருக்கிறது. அது கார்மேகத்தின் இடையில் ஒளிரும் மின்னல் கொடிபோலத் தோன்றி மறைந்தும், நெல்நுனிபோல அதிநுட்பமாயும் உள்ளது. அங்கேதான் பரமாத்மா இருக்கிறார். இவ்வாறு உட்புண்டரீகத்திலிருப்பவரை ஹ்ருதய புண்டரீகத்தில் த்யானப்யாஸம் செய்யவேண்டும். இம்மாதிரி பரம புருஷனான என்னைத் தன் ஹ்ருதய கமலத்தில் உள்ள பரமாத்மாவாக எவன் த்யானிக்கிறானோ அவனே முக்தன். ஸம்சயமில்லை.

"என்ரூபமே ஸூர்யனுள்ளிருக்கும், ஸ்வயம்ப்ரகாச ஸச்சிதானந்த அத்வய பரப்ரஹ்மரூபம். ஒரே விஷ்ணுவான நான் ஸ்தாவரஜங்கமங்கள் எல்லாவற்றினுள்ளும் எள்ளுள் எண்ணெய்போலவும், கட்டையுள் நெருப்புப் போலவும், பாலுள் நெய்யைப்போலவும், ஆத்மாவாக விருக்கிறேன். ப்ரஹ்மரந்திரத்திலும், புருவமத்தியிலும், ஹ்ருதயத்திலும்,கோபீசந்தனத்தைப்பூசி அங்கே

சிதாத்ய ப்ரகாசமான என்னைத் தியானிப்பவன் பரம் பொருளை அடைவான். 'யதியினிடம், ஊர்த்வதாண்டவம், ஊர்த்வரேதஸ், ஊர்த்வபுண்டரம், ஊர்த்வயோகம் ஆகிய நான்கு ஊர்த்வங்களிருப்பதால் அவன் ஊர்த்வ பதவியை அடைகிறான்' என்ற இந்த நிச்சய ஞானம் என்னிடம் உள்ளபக்தியால் தானே ஸித்திக்கும்.

"கோபீசந்தணத்தை இட்டுக்கொள்ளுவதால், எப்பொழுதும் ஏகாக்ரமான பக்திநிலை வரும். வைதிகர்களான ப்ராஹ்மணர்கள் எல்லோரும் கோபீசந்தண ஜலத்தால் ஊர்த்வபுண்டரம் இட்டுக்கொள்ளவேண்டும் என்பது விதி. கோபீசந்தணம் அகப்படாவிடில், முமுக்ஷு அபரோக்ஷ ஆத்மாவை அடைவதற்காகத் துளஸி அடியிலுள்ள மண்ணை இட்டுக்கொள்ளலாம். அதிராத்ரம், அக்னிஹோத்ரம் இவைகளின் பஸ்மத்தை இதற்குப் பதிலாகப் பூசிக்கொள்ளலாம்.

" இதைப் படிப்பவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபடுவன். பாபபுத்தியே உண்டாகாது. ஸகல தீர்த்த ஸ்நாநபலன், ஸகல யாகங்கள் செய்தபலன், எல்லாம் கிடைக்கும். தேவதைகளால் பூஜிக்கப்படுவான். நாராயண பக்தி உண்டாகிவிடும். அவன் நல்ல ஞானம் பெற்று, விஷ்ணு ஸாயுஜ்யம் அடைவன். மறுபடியும் திரும்புவதில்லை! மறுபடியும் திரும்புவதில்லை !!"

இவ்வாறு பகவான் வாஸுதேவர் செய்த உபதேசத்தைப் படிப்பவன் ஸத்ருபமாகவே யாகிவிடுவான். இது உபநிஷத்.

## 24. ஜாபால்யுபநிஷத் (104)

இவ்வுபநிஷத்தால் அறியக்கூடியதும், பரவஸ்து ஸ்வரூபமாயும், பரமேச்வர வைபவத்தை உடைய ராமசந்திரர் என்னும் வஸ்துவை த்யானம் பண்ணுகிறேன். ஹரீ: ஓம். பகவத் ஸ்வரூபமான ஜாபாலி மஹரிஷியைப் பைப்பிலாதி என்பவர் அடுத்து 'ஓ பகவானே! எனக்குப் பரம ரஹஸ்ய தத்வத்தைக் கூற வேண்டும்.' என்று கேட்டார். மேலும் பைப்பிலாதி கூறுவார்.

**பைப்பிலாதி.**—பசு யார்? ஈசன் யார்? மோக்ஷோபாயம் எது?

**ஜாபாலி.**—நன்றாய்க் கேட்டாய். எனக்குத் தெரிந்தபடி எல்லாவற்றையும் கூறிவிடுகிறேன்.

**பை.**—நீர் எங்கிருந்து தெரிந்துகொண்டீர்?

**ஜா.**—ஷடாநநரிடமிருந்து.

**பை.**—அவருக்கு குரு யார்?

**ஜா.**—ஈசன்.

**பை.**—அவர் யாரை அணுகிக் கேட்டார்?

**ஜா.**—அவர் தாமே உபாஸித்துத் தெரிந்து கொண்டார்.

**பை.**—கருணையுடன் எல்லாவற்றையும் எனக்கு உபதேசிக்க வேண்டும்.

**ஜா.**—பசுபதியே அஹங்காரத்துடன் கூடிய ஸம்ஸாரியான ஜீவனாகவும், பசுவாகவும் ஆகிறார். பஞ்ச கிருத்யத்தோடு உள்ள ஸர்வேசுவரனே பசுபதி.

**பை.**—பசுக்கள் யார்?

**ஜா.**—ஜீவர்கள் பசுக்கள். இவர்கள் பதி பசுபதி.

**பை.**—ஜீவர்கள் பசுக்களாவது எவ்வாறு? இவர்களுக்குப் பதி என்றால் என்ன?

**ஜா.**—புல்லைத்தின்று விவேகமற்றுப் பிறரால் உழவு முதலிய வேலைகளில் தூண்டப்பட்டு அநேக துக்கங்களைப் பொறுத்துக்கொண்டு, தன் யஜமானனுக்குக் கட்டுப்பட்டு நிற்பவைகளான பசுக்களைப்போல ஜீவர்களும் இருப்பதால் பசுக்கள் என்னப்பட்டார். ஸர்வஞனான ஈசன் இவர்களுக்கு யஜமானன் போலிருப்பதால் பசுபதி யாகிறார்.

**பை.**—இந்த ஞானம் எவ்வாறு உண்டாகும்?

**ஜா.**—விபூதியை தரித்துக்கொள்வதினாலேயே.

**பை.**—அதைத் தரித்துக்கொள்ளும்விதம் எப்படி? எங்கெங்கே இட்டுக்கொள்ளவேண்டும்.

**ஜா.**—ஸத்யோஜாதாதியான ஐந்து ப்ரஹ்ம மந்திரங்களால் விபூதியை எடுத்து அபிமந்த்ரணம்செய்து ஜலத்தால் குழைத்து, தலை, நெற்றி, மார்பு, தோள், ஆகிய இவ்விடங்களில் மூன்று ரேகையாக இட்டுக்கொள்ள வேண்டும். இதுதான் வேதவாதிகளால் கூறப்படும் வைதிகமான சாம்பவ விருதம். இதை ஸரிவர நடத்தும் முமுக்ஷு ஸம்ஸாரத்தை அடைவதேயில்லை. பிறகு ஸநத்குமாரர் ப்ரமாணம் கேட்கிறார். திரிபுண்டரத்தை மூன்று கோடாக நெற்றியிலும் புருவங்களிலும், கண்களிலும் மற்ற எங்குமே இட்டுக்கொள்ள வேண்டும்.

இவைகளுள் முதல்கோடு, கார்ஹபத்யம், அகாரம், ரஜஸ், பூலோகம் ஸ்வாத்மா, க்ரியாசக்தி, ருக்வேதம், ப்ராதஸ் ஸவனம் இவைகளை உணர்த்தும். இதற்குத் தேவதை ப்ரஹ்மா.

இரண்டாம் கோடு, தக்ஷிணாக்னி, உகாரம், ஸத்வ குணம், அந்தரிக்ஷம், அந்தர் ஆத்மா, இச்சா சக்தி, யஜுர்வேதம், மாத்யந்தின ஸவனம், இவைகளைக் குறிக்கும் தேவதை மஹாவிஷ்ணு.

மூன்றாம்கோடு, ஆஹவனீயம், மகாரம், தமோ குணம், தேவலோகம், பரமாத்மா, ஞானசக்தி, ஸாம வேதம், த்ருதீயஸவனம், இவைகளைக் காட்டும். தேவதை மஹாதேவர்.

இவ்வாறு இவைகளை உணர்ந்து நான்கு ஆச்ரமத்தோரும் விபூதியை அணிந்துகொண்டால் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுவார்கள். எல்லாத் தேவதைகளையும் த்யானம் செய்தவர்களாவார்கள். தீர்த்த ஸ்நானம், மந்த்ர ஜபம், இவைகளின் பலன் வந்துவிடும். அவன் திரும்புவதே யில்லை! அவன் திரும்புவதே இல்லை!! இது உபநிஷத்.

# உல்லாஸன் சரித்திரம்

## ADVENTURES OF ULYSSES

(தொடர்ச்சி)

உடன்செல்ல ஒருவருந் துணியாமையால் உல்லாஸன் தனியே எய்யாத்தீவினுட் பிரவேசித்து ஸூரவியின் ரத்னமாளிகை வாயிலிற்போய் நின்றான். யடியிற் காலை யெடுத்து வைக்கப்போகையில், ஸௌமியன் என்னுந் தேவன் கையிற் பொற்றண்டேந்தி உல்லாஸனை நோக்கி, "உல்லாஸா, என்ன பெரும்பிழை செய்யத் துணிந்தாய்? இந்த வீடு, ஸூரவி என்னும் ஜாலவித்தைக்காரியினுடைய தென்றறியாயோ? உன்னுடைய தோழர்களையெல்லாம் பன்றிகளாக மாற்றியிருக்கிறாள். நீயும் அவ்வுருவத்தைப்பெற ஆசைப்படுகின்றாய்போலும்" என்று சொல்லித் தடுத்தும் உல்லாஸன் கேட்காமல் உட்புகப் பிரயத்தனஞ் செய்ததைக் கண்ட தேவன் உல்லாஸன் தோழரிடத்தில் வைத்த அன்பினால் தனக்கு வருந்தீங்கையும் லக்ஷியஞ் செய்தானில்லை யென்றறிந்து அவனிடத்தில் கிருபை கூர்ந்து "உன் பராக்கிரமத்தைத் தக்க இடத்தில் காட்டினையில்லை. நீ போகின்ற இடத்திலுள்ளவள் மாயவித்தை கற்றவள். அவளுடைய வஞ்சனையினாலுனக்குக் கேடு வராமலிருத்தற்கு நான் கொடுக்கும் இந்த மலரைக் கையில் வைத்துக்கொள். கொல்லைப் பச்சிலை மருந்திற்குதவாதென்றபடி, இந்தப் புஷ்பத்தினுடைய அருமை பெருமைகளை யறியாத அசடர்கள் இதைக் காலால் துவைத்து உதாசீனஞ் செய்வார்கள். மாய மந்திரமெதையும் மாற்றவல்லது இந்த அரும்பூ. ஸூரவி, உன்னைப் பன்றியாக்க மாத்திரைக்கோலை யோங்கும்போது, உருவின கத்தியுடன் அவள்மேல் நீ பாய்தல் வேண்டும். இந்தப்பூ உன் கையிலிருப்பதால் அவள் மந்திரம் பலிக்காது. அவள் நடுக்கமுற்றிருக்குஞ் சமயத்தில் உன்னிடத்தில் ஜாலவித்தை செய்வதில்லையென்றும் உன் தோழர்களுடைய பழைய உருவத்தைத் தரல்வேண்டுமென்றும் அவளை அகோரப்பிரமாணஞ் செய்யச்சொல். அவளும் இணங்குவாள்; உனக்குந் தீங்கொன்றும் நேராது" என்று சொல்லி அந்தர்த்தானமானான்.

தேவனளித்த மாவிமலரைக் கைக்கொண்ட உல்லாஸன், ஸூரவியின் மாளிகைக் கதவை யிடித்தான். முன்போலவே, ஸூரவி நேரில் வந்து கதவைத் திறந்து உல்லாஸனை உள்ளே வாலாமென்றுபசரித்தாள். உயர்ந்த ஆஸனத்திலிருத்தி, அருமையான உண்டிகளையும் பானங்களையும் அவன் முன் வைத்த பிறகு அவனும் அவற்றைப் புசித்தான். ஸூரவி, தன் மாத்திரைக்கோலால் உல்லாஸனைத் தொட்டு, "வெளியிற்போ, பன்றி, உன் தோழர்களிருக்குங் கட்டுத்தறிக்கேகு" என்றனள். ஸௌமியன் என்னுந் தேவனளித்த மாற்றுமருந்தை ஸூரவியின் மாய மந்திரம் வெல்லவல்லதா? உருமாறாத உல்லாஸன் உருவின வாளோடு ஸூரவியின் உயிரை வாங்குபவன் போலக் கையை ஓங்க, ஸூரவி உல்லாஸன் ஸாமான்ய மனுஷன், என்றுணர்ந்து தலைகுனிந்து உல்லாஸனைத்தழுவி, "பிரபுவே, தாம் மனுஷரோ, தேவரோ அறியேன். நான் கொடுத்த மருந்தை யருந்தி விலங்குறாதவன் இதுகாறுமில்லை. உலகப் பிரஸித்தம் பெற்ற உல்லாஸனாய்த்தான் தாமிருத்தல் வேண்டும். தம்மிடத்திற் காதல்கொள்ளத் தான் கடவுள் எனக்கு ஆணையிட்டார் போலும். எவரையும் வணங்காத நான் உம்மைப் பணிகின்றேன். பணிகின்ற தேவியை மணம் புரிவீராக" என்று வருந்தினள்.

உல்லாஸன், "ஆ, ஸூரவி, என்னுடன் வந்தவர்களை விலங்குகளாக்கி என்னை மணம் புரிந்துகொள் என்று கேட்பதெப்படி? என்னையும் உன் வசப்படுத்திக்கொண்டு சிறிது காலத்தில் பன்றிகட்டுந் தறிக்கு என்னை உயர்த்துவதற்காகவோ? விவேகிகள் உன்னை விசுவஸிக்கும்படி நீ செய்யக் கூடியவற்றை யோசித்துப் பார்ப்போம்.—நீ அளிக்கும் அன்னபானாதிகள் விஷங்கலந்தவை. உன்னை மூடனும் நம்பமாட்டான். என் தோழர்களுக்கு நீ இழைத்த தீங்குகளை எனக்குச் செய்தலில்லையென்று அகோரப்பிரமாணம் முதலில் நீ செய்தல் வேண்டும். பிறகுதான் உன் வேண்டுகோளுக்குச் செவிகொடுத்தலாகும்" என்று வற்புறுத்திச் சொன்னான்.

ஸூரவி, உல்லாஸனுடைய பயங்கரமான சொற்களாலே, "அவனிடத்திற் கொண்ட பெருங்காதலினாலோ, மற்றொன்றும் பேசாதவளாய் உல்லாஸனுக்கு யாதொரு தீங்கையும் செய்தலில்லையென்று தேவர்மேலாணையிட்டுச் சொன்னாள். உல்லாஸனும் ஒருவாறு மனமுவந்தவனாய்க் காட்ட, ஸூரவி மனந் திடப்பட்டுத் தன்னிடத்தில் ஸமமான காதல்கொண்டவனென்றெண்ணமிட்டுத், தன்னூழியக்காரிகள் நால்வரை யழைத்து, விரிப்புகள் பரத்தவும், பொன்னாலும் வெள்ளியாலுஞ் செய்த பாத்திரங்களைக் கொணர்ந்து உல்லாஸனுக்கு விருந்து செய்யவுங்கட்டளை யிட்டாள். நால்வரில் ஒருத்தி, பாதப்பிரக்ஷாளனத்திற்குத் தீர்த்தத்தைக் கொணர்ந்தாள்; இன்னொருத்தி உல்லாஸன்

மனக்கவலைகளைத் தீர்க்கவல்ல மதுக்களைப் பொற்பாத்திரங்களில் கொணர்ந்து எதிரில் வைத்தனள். நறுமணங்கமழும் தைலங்களினால் உல்லாஸனுக் கபிஷேகஞ் செய்வித்து, விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களினால் அவனை அலங்கரித்தார். உல்லாஸனை ஓரழகிய] சிங்காதனத்திலிருத்தி, தேவாமிருதமொத்த உண்டிகளை அவன் முன்வைத்தனர். உல்லாஸன் உணவைக்கண்டு களித்தானில்லை. மறைந்த தன்றோழர்களை மறுபடியும் ஸ்வய ரூபத்தில் பார்த்தலே அவனுக்கு விருந்தாகத் தோற்றினமையால், வருந்தின மனத்தனாய் உண்டி யொன்றையும் தீண்டாமற் சும்மா விருந்தனன். காதலன் கருத்தைக் கடிதினிலுணர்ந்த ஸூரவி பன்றித்தறிசென்று உல்லாஸன் தோழர்களையுள்ளே யழைத்துவர, அப்பன்றிகளுறமி மாளிகையை அலங்கோலப்படுத்தின. ஸூரவி ஓர் தைலத்தைப் பன்றிகளின் தலைகளிற்றடவ, உடனே பழைய மனுஷரூபம் வந்து, தலைவனாகிய உல்லாஸனை அறிந்து அவனைக்கட்டித் தழுவிக் களித்தனர். சிறிதுகாலம் வராகங்களாக விருந்ததை எண்ணி அவர்களுக்கு வெட்கமுமுண்டாயிற்று. அவர்கள் ஆனந்த பாஷ்பஞ் சொரிந்துகொண்டு நிற்றலைக்கண்ட மாயக்காரியான ஸூரவியின் மனமுஞ் சற்றுருகிற்று.

உல்லாஸனுக்கு ஸூரவி செய்த அபராதம் முழுமையும் நிவர்த்தியாதற்பொருட்டுக் கப்பலிலேயே தங்கியிருந்த அவனாட்களையுந் தருவித்துக் களிப்பித்தனன். உல்லாஸனைக் கண்ட சந்தோஷத்தினால், அவனாட்கள் பாடியாடினதைக் கண்ணுற்றவர் எய்யாத்தீவை அவர்கள் இதாகாவென்றே எண்ணினாரென்பர். யூரிலாகன் ஒருவன்மட்டும் அவ்வரண்மனைக்குட்செல்ல அஞ்சினவனாயிருந்தான்: தோழர்கள் மாயமாய்ப்போனதையறிந்தவனாதலின் அவன்மட்டிற் றுணியவில்லை.

உல்லாஸனையும் அவனாட்களையும் ஸூரவி நோக்கி "நண்பர்காள், துக்கத்தையெல்லாந் துறந்துவிடுங்கள். முன்பட்ட துன்பங்கள் மறக்கற்பாலன" என்று உறுதி சொன்னாள். ஆயினும் அவர்கள் பரதேசிகளாய்த்தான் தம்மை எண்ணியிருந்தார்கள். கொஞ்சம் மனவெழுச்சியுண்டானகாலத்தில் தங்கள் அனாதரவான நிலைமையை நினைத்து அவர் மனமொடுங்கினார்கள். ஸூரவி அவர்களுக்கு இன்சொற் சொல்லியும் நவநவமான இன்பங்களைக் கற்பித்தும் மாயவித்தையால் சந்திரனை மண்டலத்தை விட்டுப் பெயர்த்துவரவும், மரங்களைக் கழைக்கூத்தாடவும் செய்தமையால் ஒருவருஷகாலம்சென்றதையு முணராமல் அவர்கள் எய்யாத் தீவிலிருந்தார்கள்.

ஸூரவி மயக்கத்திலகப்பட்டவனாய் ஒருவருஷம் கழித்த உல்லாஸனுக்கு ஒருநாள் தன் அருங்காதலி பனிலொபி, குமாரன் தலைமகன் இருவருடைய ஞாபகமுண்டாக மனக்கவலை மேலிட்டது. வழக்கத்தைவிட அதிகமாய் ஸூரவி ஸல்லாபஞ் செய்தபோது உல்லாஸன் இதாகாவுக்குச் செல்ல விருப்பமுடையவன்போலக் கோடி காண்பித்தான். ஸூரவி பதைபதைத்து, "தேவர்கள் உனக்கு இன்னுங் கஷ்டங்கள் நுகர்வதற்கு வைத்திருக்கையில், அவற்றினின்றும் உன்னைக் காக்க யான் வல்லேனில்லை. என்னைப்பிரிந்து நீ போகுமுன்னர் பிதிருலோகஞ் சென்று வருங்காலவுணர்ச்சியுள்ள திருசிரஸைக் கண்டு பேசி, உன் விஷயங்களைச் செவ்வையாயறிந்து பின்னர் இதாகாப் பிரயாணத்தைப்பற்றி எண்ணல் வேண்டும். திருசிரஸ் ஒருவன் மட்டில் நீ சுதேசஞ் சென்று மனைவி மக்களைப் பார்க்கும் பிராப்தி யுடையோனா இல்லையா என்பதைச் சொல்ல வல்லவன்," என்றாள். உல்லாஸன், "ஆ, ஸூரவி, பிதிருலோகத்திற்குச் செல்லுங் கப்பலுமுண்டோ, ஸாத்தியமாகத் தோற்றவில்லையே," என, ஸூரவி, "துணைவனொருவனையும் விரும்பாதே; கவலையின்றிக் கப்பலிலேறி உட்கார்; வாடைகாற்று யாதொரு விக்கினமின்றி உன்னைப் பிதிரு லோகத்திற் சேர்க்கும். கரையிவிறங்கினவுடன் ஒரு சிறு குழி வெட்டி அதிற் பாலையுந் தேனையும் மதுவையும் ஆட்டி ரத்தத்தையும் ஊற்றி உன் முகத்தை மறுபக்கத்தில் வைத்துக்கொண்டிரு. அப்பொழுது பிதிருலோக வாஸிகளெல்லாம், பால் முதலியவற்றைப் பருகக் கூடுவர்: திருசிரஸினிடத்திருந்து நடக்கப் போகிறவற்றைத் தெரிந்துகொள்ளு முன் ஒருவரும் நீ அளித்த பலியைத் தொடாமற் பார்த்துக்கொள்வாயாக' என்றாள்.

ஸூரவியின் வாக்கின்படி உல்லாஸன் கப்பலிலேறி வாடைக்காற்றி னுதவியால் பிதிருலோகஞ் சேர்ந்து, அங்கு ஒரு குழிவெட்டி பிதிருக்களுக்குப் பலியளித்தான். ஸூக்ஷ்மசரீரிகளானவர்கள் பலியையுண்ணக் கூடினார்கள். உல்லாஸன் மாதாவும் வந்தாள். திருசிரஸுக்கு முன் ஒருவரும் பலியைத் தொடலாகாதென்று ஸூரவி சொல்லியிருந்தமையால், உல்லாஸன் தன் தாயையும் பலியை யுண்ணாமற் றடுத்தான். திருசிரஸ் வந்தவுடன் பலியைப் புசித்து உல்லாஸனைநோக்கி, "உல்லாஸா, நீ அனுபவிக்கவேண்டிய கஷ்டங்கள் நிரம்பவுள. வருணபகவானுடைய புத்திரனாகிய பல

பீமன் கண்ணைப் பிடுங்கினதற்காக அவர் உன்னிடத்தில் மிகுந்த கோபங்கொண்டிருக்கின்றார். க்ஷேமமும் உனக்குண்டு. ஸூர்யபகவானுடைய ரிஷபங்களுக்குத் தீங்குசெய்யாமற் காத்தல் வேண்டும். அரசிழந்து நீ பிக்ஷுகனாவாய். அதினின்றுந் தப்ப, உன் சத்ருக்கள் உன்னை உல்லாஸனென்று அறியாம லிருக்கையில் அவர்களை நீ கொலைசெய்தல் வேண்டும்,'' என்று சொல்லி மறைந்தான்.

உல்லாஸன் மாதா வந்து பலியை யுண்டு பரதேசம் போய் வெகுகாலம் திரும்பி வராமலிருந்த பிள்ளையைப் பற்றி மனம் வாடி உயிரைத் துறந்ததாகச் சொன்னாள். ஸூக்ஷ்ம சரீரத்தில் தன் அன்னையைக் கண்ட உல்லாஸன் மனம் நொந்தது. அவள் மறைந்தபின் த்ரோஜா யுத்தத்தில் உல்லாஸனோடு சேர்ந்து யுத்தம் செய்த போர்வீரர்கள் ஒவ்வொருவரும் வந்து பலபல விஷயங்களைப்பற்றி விசாரணைசெய்ய அவர்களுக்கெல்லாம் உல்லாஸன் தக்க விடைகள் பகர்ந்தான். பூமியில் ஜீவந்தர்களா யிருந்தகாலத்தில் கொடும் பாவங்களைச் செய்தவர்கள் மறுமையில் படுங்கஷ்டங்களை உல்லாஸன் கண்ணுற்றான். தண்டாள னென்றொருவன் தேவர்களுக்குச் செய்த விருந்தில் நாமாமிசத்தைக் கலந்தான். மறுமையில் அவன் கழுத்தளவு நீரில் நிறுத்தப்பட்டான். தாகமா யிருக்கையில் நீரைப் பருகத் தண்டாளன் போனவுடனே அது விலகிப்போகும். அவ்வாறே உணவுப்பொருள்களும் விலகிப்போயின. ஸதா காலமும் பசியினாலும் தாகத்தினாலும் வருந்திக் கைக்கெட்டினவை வாய்க்கெட்டாமல் தண்டாளன் தவித்துக் கொண்டிருந்ததை உல்லாஸன் பார்த்து மனம் வெதும்பினான். சிசிபன் என்றொருவன் ராஜரகஸ்யங்களை வெளியிட்டதற்காக மலைஉச்சியில் ஒரு கல்லை ஏற்றுவதும் இறக்குவதுமான கஷ்டத்தை யனுபவித்தான். பெண்பாலர்களைப்பற்றி அவதூறுபேசின தீத்தியன் என்னு மொருவன் மறுமையிற் பட்ட துன்பம் வாயினாற் சொல்ல வழங்காது. இரண்டு கழுகுகள் அவனுடலைக் குத்தித் தின்றுகொண்டே யிருந்தன. மாமிசமானவுடனே திரும்பவும் அதே உடலில் வேறுமாமிசம் உண்டாகிக் கழுகுகளுக்கு இரைதந்து வந்தது. இம்மையில் புண்ணியம் செய்தவர்கள் ஸுகமனுபவித்தலையும் பாவஞ்செய்தவர்கள் துன்பமுறுதலையும் பிரத்யக்ஷமாய் உல்லாஸன் பார்த்தானபின் அவன் கப்பல்தானே வடதிசை நோக்கிச் சென்று ஸூரவி வாஸஸ்தானமாகிய எய்யாத்தீவை யடைந்தது.

## மூன்றும் அத்தியாயம்

ஓயாத துன்ப முரைக்கவுடம்பெல்லாம்
வாயாகினும் போதமாட் டாதே.

எய்யாத் தீவுக்கு உல்லாஸன் திரும்பி வந்தவுடன் ஸூரவி மிகுந்த கோபத்துடன் அடியில் வருமாறு சொன்னாள்:—

" அடா, நிர்ப்பாக்யா, எல்லா மனிதருக்கும் ஒரு முறைதான் சாவுண்டு, நீ ஸ்தூல சரீரத்துடனிருக்கையிலேயே யமலோகம் போய் வந்து விட்டனை. ஸில்லா, கரிப்டிஸ், என்ற இரண்டு பூதங்களும் உன்னைத் தின்ன விருக்கின்றன. பாடிப் பலிகொள்ளும் ஸிரென்மார் உன்னைத் தமக்கிரையாக்கவெண்ணியிருக்கின்றார்கள். ஸிரென்மாரின் குரலைக் கேட்டவன் எவனும் வீடு வாசல் பெண்சாதி பிள்ளைகளிடத்திற் பிரியம் வைக்கான்; பெண்சாதி பிள்ளைகளும் அவனிடத்தில் அன்பு பாராட்டார்."

உல்லாஸன் " பிரியே, ஆபத்துக் களை மாத்திரஞ் சொன்னாய். ஸிரென்மாரிடத்தில் நானகப்படாமல் தப்பும் வழியை எனக்குச் சொல்வாயாக"என்று வினயத்துடன் கேட்க,

ஸூரவி மனமுவந்து " ஸிரென்மாரென்பவர் மூன்று சகோதரிகள். இறந்தோரெலும்புக் குவியல் மத்தியில் அம்மூவரும் உட்கார்ந்திருப்பவர். தமது ஸங்கீதத்தால் மனிதரைத் தம்மிடம் கவர்ந்து பின்னர் அவரைத் தின்று எலும்புகளைக் குவியல் குவியலாக வைத்திருப்பவர். தேனொழுகும் அவருடைய மதுர வாக்கைக் கேட்டு அவர் வலையிற் சிக்காமற் றப்பித்துக் கொள்ளுத லெவர்க்கு மரிதாம். அவரிருக்குமிடஞ் செல்லுங்கால் நீ உன்னாட்களின் காதுகளை மெழுகு வைத்தடைத்தல் வேண்டும்; அப்படிச் செய்தால் மாத்திரம் ஸிரென்மாருடைய கானம் காதிற்படாது. நீ அவ்வாறு உன் செவியை யடைத்தல் வேண்டாம். உன்னாட்களைக்கொண்டு உன்னைப் பாய்மரத்திலிறுக்கிக் கட்டுவித்துக்கொள். எந்தக் காரணம் பற்றியும் ஸிரென்மாரிருப்பிடந் தாண்டும் வரையில் உன்னை அவிழ்த்துவிடக் கூடாதென்று ஆஞ்ஞை செய். இது தான் அக்கொடும்பாவிகளினின்று உய்யும் வகையாம்" என்றனள்.

ஸில்லா, கரிப்டிஸ், என்ற இரண்டு பூதங்களையும் பற்றி உல்லாஸன் கேட்டதற்கு ஸூரவி, " அப்பூதங்களிரண்டும் இரண்டு கற்பாறைகள். அவற்றினடுவே தான் உன் கப்பல் செல்லவேண்டும். மத்தியிலிருந்து மயிர்க்கிடை கப்பல் விலகிச் செல்லுமாயின் கப்பலும்

அதிலுள்ளவரும் தக்ஷணமே நாசமாவார்கள். ஸில்லா என்னும் பூதம் சற்றுப் பெருத்த கற்பாறை. அதன் கீழ் ஒரு நீர்ச்சுழியுண்டு. அதிலமிழாத மரக்கலங்களில்லையெனலாம். ஸில்லா பெருவயிறு படைத்தவள். ஒரு உச்வாஸத்தில் கடலிலுள்ள ஜந்துக்களையெல்லாம் எடுத்து விழுங்கும் பெரும் பசியுடையவள். கரிப்டிஸ் இளையளாயினும் பசியில் முதியள். ஸில்லா ஒரு மூச்சில் ஆறுமனிதர்களை மாத்திரம் விழுங்கும் வல்லமையுள்ளவள். கரிப்டிஸின் பசி என்றும் ஆறாததாம்" என்று விவரமாகச் சொன்னாள்.

"கரிப்டிஸினின்று தப்பி, ஸில்லாவை வாளினாற் கொன்றாலென்ன?" என்று உல்லாஸன் வினவ, ஸூரவி "நீ பேதை ஸில்லாவுக்கு மரணங்கிடையாது; வாளாலவளுக்குக் காயமும் வராது. உன் ஸாமர்த்தியம் அவளிடத்திற் பலிக்காது. வீண் வீறாப்புப் பேசி வாணாளை யிழக்காதே" என்று எச்சரித்தாள்.

உல்லாஸன் தன் ஆட்களுக்குச் சொல்ல வேண்டியவற்றைத் தெரிவித்தானபின் பிரயாணத்திற்கு ஆயத்தஞ்செய்தான். ஸூரவி தன்மந்திரவித்தையினால் கடலை அமைதிப் படுத்திப் பிரயாணத்துக்கு வேண்டிய பொருள்களைப் பூரணமாய்க் கொடுத்து உல்லாஸனை யூர்க்கனுப்பினாள்.

(கட்டிக் கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த புத்தியும் வெகுதூரம் வாராவன்றோ) இசைபாடிப் பலிகொள்ளும் ஸிரென்மாரிருப்பிடத் தருகில் உல்லாஸன் கப்பல் சென்றக்கால் அம்மாயக்காரிகள் உல்லாஸனைப் பலவாறு புகழ்ந்து தம்மிடம் வரும்படி வேண்டினர்கள். ஸூரவியின் கட்டளையை நினைந்து உல்லாஸன் அவர்களுக் கிரையாகாமற் றப்பிப் போனான். பாய்மரத்திற் கட்டுண்டிருந்த உல்லாஸன் கட்டையவிழ்த்துக்கொண்டு ஸிரென்மாரிடத்திற் செல்ல முயன்றபோது அவனாட்கள் அவனை இறுக்கிக் கட்டினமையால் ஒரு ஆபத்தினின்றுந் தப்பினான். பெண்ணுருவங்கொண்ட பிசாசுகளான ஸிரென்மாரின் மாயகீதத்தைச் செவியுற்ற எவர்தாம் அவர் வலையிற் சிக்கமாட்டார்? தைவவசத்தால் உல்லாஸனுயிர் பிழைத்தானெனல் வேண்டும்.

ஸில்லா, கரிப்டிஸ் என்னும் பூதங்களிருந்த இடத்திற் போகுங்கால் உல்லாஸன் ஸூரவி சொன்னதை உல்லங்கனஞ் செய்து ஸில்லாவை வாளால் வெட்ட முயன்றான். ஆட்களிலாறுபேர்களை ஸில்லா பிடித்து விழுங்கவே, உல்லாஸனுக்குப் புத்தி வந்தது. உயிர்த்துணைவராயிருந்த ஆறுபேர் ஸில்லாவுக் கிரையானதைப் பார்த்த உல்லாஸன் மனம் மிகவும் நொந்தது.

மேற்கூறிய இரண்டு பூதங்களினின்றுந் தப்பி வெளிவந்தபோது ஸூரியன் அஸ்தமித்து விட்டது. ஆகாயம் மேகங்களால் மறைக்கப்பட்டு நள்ளிரவாயிருந்தமையால் திக்குதிசை தெரியாமல் மாலுமி மயங்குங்காலத்தில் கன்னங்கரேலென்று தூரத்திற் பூமிபோல ஏதோ தோற்றிற்று. கப்பலை அந்தத் திக்கில் நடத்திக்கொண்டு மாலுமி போனான். அருகிற் சென்றவுடன் ஸூரிய விருஷபங்களிருந்த திரிநாகரம் என்னுந் தீவென்று உல்லாஸனறிந்து அங்கிறங்கினால் ஆபத்து வருமென்றஞ்சி வேறிடத்திற்குப் பிரயாணம் போதல் வேண்டுமென்று தன்னாட்களுக்குச் சொல்ல, அவர்கள், "தம்முடைய ஆணையை இதுகாறும் கடந்தோமில்லை; பகல் முழுதும் தண்டுவலித்துக் கைகள் ஓய்ந்து போயின; ஊக்கமுமிழந்தவரானோம். எந்த விபத்து வந்தாலும் வரட்டும்; இந்தத்தீவில் கொஞ்சம் இளைப்பாறிவிட்டுத்தான் புறப்படுவோம். தங்கள் சரீரம் இரும்பினா லமைக்கப்பட்டதோ? இளைப்பென்பதே தோன்றவில்லை. விழித்திருத்தலும் தூக்கமும் தங்களுடலுக்கு ஒன்றாய்த்தானிருக்கிறது. பசிதாகம் தங்களுக்கில்லை. நாங்கள் ஸாமான்ய மனிதர்கள். எங்களுக்கு உணவும் உறக்கமும் அவசியம். மேலும் இரவிலே கப்பலுக்கும் பிராணனுக்குஞ் சேதம் வரும்படியான காற்றுக்கள் ஜனிக்கும். இருண்ட இரவில் சௌகரியமான துறையில் உண்டுறங்கி யிருத்தல் வேண்டும். தோலோதோல் இந்தத் துறையை விட்டுப் போகமாட்டோம். விடிந்த பிறகு எங்களைக் கடலுக்குக் காவு கொடுப்பதில் ஆக்ஷேபமில்லை," என்று மன்றாடினார்கள். உல்லாஸனுக்கு இஷ்டமில்லா விடினும் ஆட்களின் வேண்டுகோளுக்கிணங்கி நடக்க வேண்டியவனானான். துறையில் ஆட்களிறங்குவதற்கு முன் உல்லாஸன் அவர்களை நோக்கி "இருபது வருஷங்களாய் என் வாக்கை மீறி நடக்காத நீர் இன்று பிடிவாதஞ் செய்வதும் கேட்டுக்குக் குறியாயிருக்கிறதென்றெண்ணுகின்றேன். இந்தத்தீவில் ஸூர்யனுடைய விருஷபங்கள் மேய்ந்துகொண்டிருக்கின்றன. ஸூரவி நமக்குக் கொடுத்திருக்கிற ஆகாராதிகளையுண்டு நீர் திருப்தியடைய வேண்டுமேயன்றி மேற்கூறிய விருஷபங்களின் மாம்சத்திலாசைவைத்து அந்தப் பிராணிகளுக்கு ஹிம்ஸை செய்வதில்லையென்று ஒவ்வொருவரும் பிரமாணஞ் செய்யவேண்

டும். அன்றேல், இத்துறையில் உங்களை இறங்க விடேன்," என்றான்.

ஆட்கள் ஒவ்வொருவரும் தலைவன் சொன்னவாறு பிரமாணஞ்செய்து துறையிலிறங்கிக் கப்பலிலுள்ள உணவுகளை உண்டு நித்திரை போனார்கள். பொழுது விடிந்த பிற்பாடும் உல்லாஸன் தன்னாட்கள் விருஷபங்களைத் தொடுத்தல் கூடாதென்று வற்புறுத்திச் சொன்னான். "ஸூர்யன் ஸர்வவியாபி; அவர்கண்ணிற்படாத இரகசியங்கிடையாது; உங்கள் மனத்திலுள்ள அந்தரங்கங்களையுமறிவார்; பாவத்தைச் செய்தால் அபராதஞ் செய்தவராவீர். பார்த்துப் பிழையுங்கள்" என்று இன்னுமோர் முறை ஆட்களுக்கு உல்லாஸன் ஹிதோபதேசஞ் செய்தான்.

திரிநாக்ரத்தீவில் உல்லாஸன் தன் ஆட்களோடு ஒரு மாதகாலந் தங்கியிருக்கும்படி நேரிட்டது. பிரதிகூலமான காற்று வீசினமையால் பிரயாணஞ்செய்தல் கூடவில்லை. ஸூரவி கொடுத்திருந்த ஆகாரங்களும் பானங்களும் செலவழிந்தன. பறவைகளையும் மீன்களையும் வலையிற் பிடித்து உல்லாஸனும் அவனாட்களும் பசியாறி வந்தார்கள். "மானங் குலங் கல்வி வன்மை யறிவுடைமை தானம் தவமுயற்சி தாளாண்மை" என்னும் உத்தம குணங்கள் பசிவந்திடப் பறக்குமன்றோ? சரீரத்திற்கு ஹிதத்தைச் செய்கிற நித்திரை காலந்தப்பி வருமாயின் அதனாற் கேடுளது. தன்னாட்கள் பசியின் கொடுமையால் ஸூர்யனுக்கு ஏதாவது அபராதத்தைச் செய்து விடுவார்களென்று பயந்து உல்லாஸன் தூக்கத்தை விட்டிருந்தான். அப்படியிருந்தவனுக்கு ஒருநாள் நடுப்பகலில் மிகுந்த களைப்புண்டாகி மெய்ம்மறந்த தூக்கம்வந்தது. தலைவன் அயர்ந்து நித்திரை செய்வதை யறிந்த உல்லாஸன் ஆட்கள் வாயு பகவானுடைய தோற்பையைத் திறந்து பார்த்துக் கேடிழைத்தாற்போலச் சதியோசனை செய்ய ஆரம்பித்தார்கள். வயது அனுபோகம் இரண்டிலுமுதிர்ந்தவனான யூரிலாகன் என்பவன் சதியோசனைக்குட்பட்டதுதான் விசனிக்கத்தக்கது. யூரிலாகன் மற்றவரை நோக்கி, "நண்பர்காள், பிறந்தால் இறத்தலுண்டு. மிகவும் இழிவான மரணம் வயிற்றிற்குணவகப்படாமையா லுண்டாவது. பக்ஷி மத்ஸ்யாதிகள் இனி இந்தத் தீவிற் கிட்டமாட்டா. அனுகூலமான காற்றுவீசி நம்மூர் போய்ச் சேர்வோ மென்பதற்கிடமில்லை. இங்கிருந்து பட்டினியால் பிராணனை விடவேண்டியவரா யிருக்கின்றோம். மூடத்தனத்தினால் நம்முடைய வயிறுகாய்கின்றது. உல்லாஸன் இத்தீவிலுள்ள எருதுகள் ஸூர்யனுடைய சொத்தென்றும் அவற்றைத் தொட்டால் அபராதிக ளாவோமென்றும் பயமுறுத்துகின்றார். ஸாதாரண எருதுகளுக்கும் இங்குள்ளவற்றிற்கும் என்ன பேதம்? மேலும் ஸூர்யனுக்குப் பசிதாகங்க ளுண்டா? மூடர் பேச்சை நம்பி நாம் ஏமாறலாமா? கடவுளால் அபரிமிதமாய்க் கொடுக்கப்பெற்ற பொருள்களை நாமும் அனுபவித்து பிறர்க்கும் கொடுத்துக் களித்திருபதன்றோ விவேகிகள் காரியம்" என்று சொன்னான்.

"அதிர்ந் தடித்தவனுக்கு ஐயனாருமில்லை, பிடாரியுமில்லை.' யென்றபடி யூரிலாகன் வார்த்தைகளைக் கேட்ட உல்லாஸன் ஆட்கள் அத்தீவில் மேய்ந்து கொண்டிருந்த ஏழு எருதுகளைப் பிடித்துக் கொன்று சமைத்துத் தின்றார்கள். அவ்வாறு உண்ணத் தொடங்குமுன் ஸூர்யபகவானை நோக்கி, "கடவுளே, நாங்கள் செய்யும் அபராதத்தைப் பொறுத்தல்வேண்டும். எங்களூர் சென்ற பிறகு உமக்குக் கோவில் ஒன்று கட்டுவித்துப் பூசைகள்செய்கின்றோம்,"என்று பிரார்த்தனை செய்தார்கள். பசுவைக்கொன்று செருப்புத் தானஞ் செய்கிறவர் கடவுளால் மன்னிக்கப்படுவார்களா? எருதினிறைச்சியை உல்லாஸனாட்கள் உண்டுகளிக்குங்கால் உல்லாஸன் மாம்ஸ வாஸனையறிந்து விழித்துக்கொண்டு, "பாவிகாள், என்ன காரியஞ் செய்தீர்? உங்களுக்கு இனி விமோசனமே கிடையாது. நீங்கள் கொன்ற மாடுகளின் தோல்கள் முக்காரம் போட்டு ஓடுகின்றன. இது பெரிய உற்பாதம்" என மயிர்க்கூச்செரியப் பேசினான்.

ஸூர்யன் தன் எருதுகள் கொல்லப்பட்டதைப் பார்த்து மனம் புழுங்கி, "தேவாதி தேவனே, ககன மார்க்கத்தில் நான் வலம் வரும்போதெல்லாம் கண்குளிரப் பார்த்த விருஷபங்களைக் கொன்று தின்ற கொடும்பாதகர்களைச் சிக்ஷை செய்வீராக" என்று வேண்டத் தேவாதி தேவனும் "அப்படியே ஆகுக" வென்று வாக்களித்தனர்.

ஏழெட்டுநாள் வரையில் மாட்டிறைச்சியைத் தின்று உடல் கொழுத்து உள்ளங் குளிர்ந்திருந்த உல்லாஸனாட்கள் காற்று இதாகாவை நோக்கி அடிப்பதைக் கண்டு யாத்திரை செய்ய ஆரம்பித்தார்கள். உல்லாஸனொருவன்மட்டில் பெருங்கேடு ஸம்பவிக்குமென்று நிச்சயமாயிருந்தான். சிறிது தூரஞ் சென்றபின் கடலில் பெரும்புயலடித்தது; கப்பற்கயிறுக ளறுந்தன; பாய் மரமொடிந்து விழுந்து மாலுமி தலையுடைந்து மாண்டான். மீகாமனில்லா மரக்கலம் திசைதப்பி இங்குமங்குமோட ஆரம்பித்தது. யூரிலாகன் இடிவிழுந்திறந்தான்; மற்றவரும் ஒவ்வொருவராய்க் கடலில் வீழ்த்தப்பட்டார். கப்பல்பாறையில் தாக்கி ஆயிரஞ் சுக்காக உடைந்தது உயிர்பிழைத்துப் பலகை ஒன்றைத் தாங்கி அலைகளுடன் போராடினவன் உல்லாஸன் ஒருவனே. மெய்த்திருவந்தற்றாலும் வெந்துயர்வந்துற்றாலும் ஒத்திருக்குமுள்ளத்தனான உல்லாஸன் ஒன்பது நாள் அன்ன ஆகார மில்லாமல் அலைகடலாலலைக்கப்பட்டு, நிர்வாணமாய் ஒஜிஜீயா என்னும் மனோரஞ்சனத் தீவில் வந்திறங்கினான்.

## தமிழ்ப்பரிபாலகர்

ரேவரண்டு ஜீ. யூ. போப்பையர்

**THE REV. G. U. POPE, M. A., D. D.**

பஞ்சரத்தினம்.

அறுசீராசிரியம்.

சொல்லதனுக் குறுதியெனச் சொற்றிவெர்
காலுடனே யிரண்டுங் கூட்டிப்
பல்லதனுக் குறுதியெனப் பகர்ந்திவெ
ராலுடனே வேலுஞ் சேர்த்துச்
சொல்லதனுக் குறுதிவரிற் சுகமுண்டாம்
வாழ்வுண்டாந் தொலைபுஞ் சன்மம்
கல்லதெனுங் காயமிதுந் தளர்ந்தழியுந்
தன்மையிதைக் கருதிப் பார்த்தே. (1)

பார்த்தாலும் பலதேயங் கிடைக்கரிய
பழந்தமிழ்நூ லிரண்டின் சாரஞ்
சேர்த்தாகப் பகுத்தறிந்து சேகரமாஞ்
சுவையெல்லாந் திரட்டிச் சேர்த்துப்
பேர்த்தாகும் பன்மொழியிற் பிரியமொடு
காணவைத்த பெரியோர் காண்மின்
பார்த்தாலுங் கேட்டாலும் பாவனமாம்
போப்பையர் பதவி நன்றே. (2)

நன்னூல்க ளைந்துதமி ழாயுமவர்க்
கிருகண்ணு நவிலும் பாங்கால்
நன்னூலென் னொருகண்ணு நாலுளுஞ்
செழித்திடவே நமக்கு மீந்தார்
பன்னூலுட் பரமமதாந் திருக்குறளாந்
திருக்கதனு ணியாயந் தந்தார்
தொன்னூல்செய் வீரமுனி யிவரென்னச்
சொலலாகுஞ் சிறப்பு ளாரே. (3)

ஆனதொரு வயதெல்லா மயராதே
தமிழ்க்குழைக்கு மனகர் காண்மின்
ஏனையவர் தமிழ்நாட்டும் புறநாட்டு
மிவர்போல்வா ராரோ சொன்மின்
சோனைமழை பொழிபுதக மண்டலத்துஞ்
சோணாட்டும் பன்னாட் டங்கித்
தானமைத் தமிழோங்க நூல்செய்த
வையரிவர் போப்பா ளரே. (4)

ஆனாலுந் தொண்டுகிழ மிவர்நாட்டந்
தமிழிடத்தே யமர நித்தந்
தேனாருந் தமிழ்காக்குந் திறமரிதே
நாலடியின் னறிகங் கீர்த்தி
தானுகிப் பல்லாண்டுந் தனுகரணந்
திடங்கொண்டே தரையில் வாழக்
கோனாகும் பரம்பொருளு மருள்புரியக்
கோரியதா முதவி கொண்டே. (5)

### பாடினோன் பெயரு மூரும்

கொண்டலமர் மயிலைதனிற் சென், தோமாக்
கூறவருங் கல்விச் சாலைத்
தண்டமிழிற் றலைமைபெறும் பண்டிதனும்
வேங்கடங்கொள் ராம நாமன்
தொண்டமருமறைக்குலத்தோன் சோணாடன்
நிலையம்பூ ரதனில் வந்தோன்
விண்டநிது வுபகாரச் சீர்நினைந்தே
மேதினியோர்க் குரிமை வாக்கே.

### சீட்டுக்கவி.

சீர்கொண்ட தென்றமிழ்க் கவியினற் றீஞ்சுவை
தெளிவுறத் தேக்கு நிபுணன்
செப்பரிய குசைதனியி லுட்பமதி நிகழ்வுற்ற
திட்பமுறு புலமை வாய்ந்தோன்
கார்கொண்ட மயிலையுட் சென்தோ மெனுங்கலா
சாலையுட் கல்வி யாக்குங்
கலைவல்ல பச்சிங்க சரபவேங் கடராம
கவிராசனெழுது நிருபம்
நேர்கொண்ட ஆக்சபோர்ட் டதனிடைப் பலியலாங்
கழகத்து நெடிய தமிழை
நித்தமுந் தமிழாங்கி லேயத்து ணேர்செயும்
தூயர்போப் பையர் காண்க
நார்கொண்ட சொல்லருமை நாலிரண் டோடுநன்
னூலொன்று மாக மூன்று
நன்கொடைக ளீந்தெமக் கறிவுநெறி நாடிடத்
தமிழ்பரவ வுதவு வாயே.

### வேறு

மூன்றுநா லாட்சியான் மூதறிவு முலகெலா
மோங்கு முண்மை
சான்றபே ருண்மையிது சாதிகுல
வாசார மேற்கி னுமோ
தோன்றுநாள் முதலாகு முலகறிவு
மோயவே தூய்மைசாரு
மூன்றலோ கத்திடைப் போப்பையர்
கீர்த்தியு முடுகெல்லாமாண்பே.

தீ. வேங்கடராம ஐயங்கார்.

## THE UNIVERSAL PRAYER

**( By Alexander pope )**

THE ENGLISH POET

Father of all ! in every age (1)
In every clime adored
By saint, by savage, and by sage
Jehovah, Jove or Lord.

Thou great First Cause, least understood (2)
Who all my sense confined
To know but this, that Thou art good
And that myself am blind.

What conscience dictates to be done, (3)
Or warns me not to do,
This, teach me more than hell to shun,
That, more than Heaven pursue.

What blessings Thy free bounty gives (4)
Let me not cast away ;
For God is paid, when man receives,
To enjoy is to obey.

If I am right, Thy strength impart (5)
Still in the right to stay
If I am wrong, Oh ! teach my heart,
To find that better way.

Save me alike from foolish pride (6)
Or impious discontent.
At aught Thy wisdom has deceived,
Or aught Thy goodness lent.

Teach me to feel another's woe ; (7)
To hide the fault I see ;
The mercy I to others show,
That mercy show to me.

Mean though I be, not wholly so ; (8)
Since quickened by Thy breath ;
O lead me wheree'er I go
Through this day's life or death.

This day be bread, and peace my lot : (9)
All else beneath the sun.
Thou know'st if best bestowed or not
And let Thy will be done.

## சமரஸத் தோத்திரம்

எந்தக் காலமும் எதுள தேயமும்
சந்த மாதவர் கானவர் சான்றவர்
எந்தம் நாயக ! ஈச ! தே வே ! யெனச்
சிந்தை யேத்துபல் ஜீவரின் தந்தையே ! (1)

ஆதி காரண ! ஆய்தல் அரியவ !
ஓதென் ஞாகமெல் லாமுற ஓர்வனேல்
கோதில் நல்லனீ கூறுநான் அந்தகன்
எதி யானறி யீதல தில்லையே. (2)

சாட்சி பூதமே சால விதிப்பன
மோட்ச நல்வழி யிற்செல முந்தவும்
ஆட்சி செய்யலா காதென நீக்கிய
காட்சி கொண்டுயான் கும்பியிற் காப்பனே. (3)

முட்டில் சீர்குண மூதறி வாசிகள்
தட்டி டாமலே தாங்கியான்¦போற்றுக
இட்ட நீயருள் இன்பதைத் துய்ப்பனேல்
சிட்ட நன்றியைச் செய்தவ னுவனே. (4)

நல்லொ ழுக்கினின் நல்வலி யீந்துயான்
ஒல்கா வண்ணமே ஓம்பிநீ காத்தருள்
பொல்லாச் செய்கையைப் போற்றிடின் என்மனம்
நல்ல தோர்நெறி நாட நவில்வையே. (5)

நற்கு ணத்தினீ நல்கி யருள்வன
ஒற்க மில்லறி வூனச்செ ருக்கொடு
நற்போ தத்தினீ நல்கவொ ழித்தவை
அற்ப மாய்க்குறை கூறியு மாள்வனே. (6)

மற்ற வர்துயர் ஓரவும் மன்னுயிர்
குற்ற மேபுறங் காக்கவுங் கூறுவாய்
பற்றி னல்பிறர் பாலருள் காட்டுவன்
அற்ற ஆரருள் காட்டிநீ ஆள்வையே. (7)

உன்னி உன்னுயிர் தந்தெனே யாக்கினும்
என்னி லெத்தனை ஈனம் இருப்பினும்
துன்னிச் சாரிடந் தோறுமே தாநெறி
என்னை யின்றிருப் பின்னிறப் பின்னருள். (8)

இன்றெ னக்குண வேயொழி வேயளி
என்றின் கீழுறும் எப்பொரு ளாயினும்
நன்று நல்கினை யோவிலை யோவறி
உன்றன் நன்மனக் கட்டளை உய்கவே. (9)

எஸ். சாமிநாதையர்.

# ராகங்களின் உற்பத்தி

## ORIGIN OF TUNES

ராகம் என்றால் பிரியம் என்று அருத்தம். ஸ்வரங்கள் அநேகமாதிரியாய்ச் சேர்ந்து சேர்ந்து தொகுக்கப்படுவதால் சுகத்தைத் தருகின்றன. அப்படிச் சுகந்தரும் ஸ்வரத் தொகுதிகளுக்கு **ராகம்** எனக் காரணப் பெயரிட்டிருக்கிறார்கள்.

இந்த **ராகம்** என்னும் விஷயம் கர்நாடக ஸங்கீதத்தினருக்கே உரியது. ராகவிஸ்தாரம் என்பது வேறுவிதமான ஸம்பிரதாயங்களில் கிடையாது. தேசிகம் அல்லது **ஹிந்துஸ்தானி** ஸங்கீதத்தில் ஸாஹித்தியங்களை மட்டும் பாடுவதுதான் வழக்கத்தில் உள்ளது. இப்போதிப்போதுதான் பெரிய கவாயிகள், ராகம் பாடும் ஸம்பிரதாயத்தை வித்தை இருக்கிறதென்பதற்கு அடையாளம் என்று எண்ணிப்பாட ஆரம்பித்திருக்கிறார்கள். ஐரோப்பியர்களுக்கு இந்த ஸம்பிரதாயம் தெரியாத விஷயம் என்று மேலே சொல்லிவிட்டோம். ஆகவே, ராகம் என்பது என்ன? அது பாடவேண்டிய முறை என்ன? என்று அறியவேண்டுமானால் கர்நாடக வித்துவான்களைப் பாடச்செய்து கவனித்துத்தான் தெரிந்துகொள்ளவேண்டியதாகிறது.

அது மாத்திரமல்ல. இந்த ராகம் என்னும் விஷயம் கர்நாடக சங்கீதம் எங்கே ஜாஸ்தியாய்க் கேட்டநுபவிக்க இடமுண்டோ, அவ்விடங்களில் தான் அதை நன்றாய் அறிந்துகொள்ள சந்தர்ப்பம் நேரிடும். அதாவது, **காம்போதி** என்னும் ராகத்தைப் பாடுவதற்கு ராஜமஹேந்திரபுரம் முதல் கன்னியாகுமரி வரையில் பாடகர்கள் உண்டென்றாலும், கர்நாடக சங்கீதத்துக்கு பிரதான ஸ்தானமான தஞ்சாவூர் ஸமஸ்தானத்தில் தான் அந்த ராகத்தின் வாஸ்தவமான ஸ்வரூபம் அறியப்பட இடமுண்டு. மொத்தமாய் ஸங்கீத விஷயங்களை நிஜமான நிலையில் பார்க்கவேண்டுமென்றால் தஞ்சாவூர் ஸமஸ்தானத்தில்தான் காணலாம்.

ராகம் பாடும் வழக்கம் பாடுவோரிடம் ஆதிகாலந்தொட்டு இருந்ததாகத் தெரியவில்லை. முதல் முதலில் ஏற்பட்டது கீதி என்று பெயர் வழங்கிய ஸாஹித்யங்களேதான். படித்த வித்வான்கள் ஈசுவரனை இந்தக் கீதிகளால் துதித்து வந்தார்கள். அதுமாத்திரமல்ல. படித்தவர்போலவே பாமரரும் சரி, பாலரும் சரி அவரவர் தம் வேலையைச் செய்யும்போது வேலைக்குத் தகுமான பாட்டுக்களைப் பாடிக்கொண்டு வேலைசெய்வது வழக்கத்திலிருந்தது. உதாரணமாக, அம்மானை ஆடும் குழந்தைகளும், கழற்சிக்காய் ஆடும் குழந்தைகளும் அந்தந்த வேலைக்குரிய அம்மானைக் கழற்சிக்காய்ப் பாட்டுக்களை ஏற்படுத்திவைத்திருந்தார்கள். அந்தப்பிரகாரமே கீழ்ச் சாதியார் முதல் மேல்ஜாதியார்வரையில் மேல்சொன்ன மாதிரி வேறுவேறு ஸாஹித்யங்களை ஏற்படுத்திக்கொண்டு ஸங்கீதத்தை அநுபவித்து வந்தார்கள். இப்படிக் கொஞ்சகாலம் சென்றபின் புத்திநுட்பமாயிருந்த சிலர் அந்தந்த வேறு வேறான பாட்டுக்களை ஒருமிக்க முற்றிலும் கற்றுக்கொண்டார்கள். அன்றியும், அவைகளில் உள்ள ஒத்துமைகளையும் வித்தியாஸங்களையும் கண்டறிந்து, அந்தந்த ஊர்களிலிருந்து வந்தபாட்டுக்களுக்கு அந்தந்த ஊர்களின் பெயர்களை வைத்தார்கள். அப்பேர்க்கொத்த ராகங்களுக்கு ஸங்கீத சாஸ்திரத்தில் **தேசாங்கராகங்கள்** என்னும் பெயர் வழக்கத்திலிருக்கிறது. உதாரணமாக, **குறிஞ்சி** என்னும் ராகம் குறிஞ்சிநாட்டு ராகமாம். **மாளவி** என்னும் ராகம் மாளவதேசத்துப் பாட்டுக்களின் ராகமாம். மற்றும், **கூர்ஜ்ஜரி**, **பங்காளா** முதலிய ராகங்களின் பெயர்களிலிருந்தே அவை அவை எந்தெந்த ஊர்களில் பாடப்பட்டுள்ளன வென்று அறிந்துகொள்ளலாம்.

அது மாத்திரமல்ல. பாட்டுக்களின் அமைப்பைக் கவனிப்போமானால், சில தினுசுப்பாட்டுக்கள் சில நாடுகளிலே மட்டும் பாடப்படுகின்றன. தமிழ்தேசத்திலுள்ள **நோண்டிச் சிந்து**, **காவடிச் சிந்து**, **தெம்மாங்கு** முதலிய ஸாஹித்தியங்கள் தெலுங்கு தேசத்தில்கூட கிடையாது. **ஸீஸபத்தியம்** என்னும் தெலுங்கு தேசத்திலுள்ள ஸாஹித்யம் வேறு எந்தப் பாஷையிலும் கிடையாது. **அபங்கம்** **கேகாவளி** முதலிய ஸாஹித்யம் தேசிய (மஹாராஷ்டிர) ஸாஹித்தியமாகும். இதை எல்லாம் கவனித்தால் ராகங்களுக்குப் பெயரிடும் காலத்தில் அந்தந்த ஊர்களின் பெயருக்கும் ராகங்களின் பெயருக்கும் சம்பந்தம் இருக்க வேண்டும் என்று நிதரிசநமாய்த் தெரிகிறது.

மேலும், சில ராகங்கள் குறிப்பிட்ட ஜாதியாரால் பாடப்பட்டு வந்தன வென்றும், அந்த ராகங்களுக்கு அந்த ஜாதியாரின் பெயர் வைக்கப்பட்டிருக்கிறதென்றும் தெரிகிறது. **எருகல காம்போதி** என்னும் ராகம் எருகலவாடு என்று பெயருள்ள வடக்கே உள்ள ஒரு ஜாதியாருடைய ராகமாம். இம்மாதிரி ஜாதியின் பெயரை ராகத்துக்கு வைக்கக் காரணம் உண்டு. ஒட்டர் முதலிய சாதியார்களை எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லலாம்? அவர்களுக்கு ஸ்தாயியான

இடமில்லாததால் அவர் பாடும் பாட்டுக்கு அவர்கள் ஜாதியின் பெயர் இடப்பட்டிருக்கிறது.

இப்படி ஸாஹித்திய ரூபமாய் பாடுவதுமட்டும் வெகு நாளைக்கு வழக்கத்தில் வந்து கொண்டிருந்தது. பிறகு அநேக விதமான ஸாஹித்யங்களுக்கு ஆதாரமாகிய **ராகம்** என்பது பாடும் வழக்கத்தில் வந்தது. அதாவது ஒரேமாதிரியாயுள்ள பாட்டுக்களுக்கு ஆதாரமான கான ரூபத்தை **அகாரமாகவும்** சிலவேளைகளில் **தந்நகாரமாகவும்** பாடி அவைகளுக்கு ராகம் என்னும் பெயர் வைத்தார்கள்.

இந்த **ராகம்** என்பது என்னவென்று பார்ப்போம். இது கீதமும் அல்ல ; கீர்த்தனமும் அல்ல. இது இன்னதுதான் என்று எழுதிக்காட்ட முடியாமலிருக்கிறது. இதற்கு இரண்டு காரணங்களாம்.

முதல் காரணம் என்னவென்றால், அது சப்தரூபமாய் இருப்பதால் அதை இன்னதுதான் என்று சுட்டிக் காட்ட முடியவில்லை.

இரண்டாவது காரணம் என்னவென்றால், ஒரு உபமானத்தை உபயோகித்துக் காட்டிவிடுவோம் என்றாலோ, வேறு எந்த ஸம்பிரதாயங்களிலும் இந்தமாதிரி விஷயம் இல்லாமலிருக்கிறது. பிராமணர்களுடைய வழக்கத்திலுள்ள ஆசமநம் என்னும் வழக்கத்தை வெள்ளைக்காரருக்குப் போதிப்பது எப்படிக் கொஞ்சம் முடியாத காரியமோ அதுபோலவே, ராகத்தை ஒப்பிட்டுக்காட்டிப் போதிப்போமென்றால் அது முடியாமலிருக்கிறது.

ஆனாலும் ஏதோ ஒருவிதமான உபமானத்தைச் சொல்லலாம். ஒரு விநாயகர் சதுர்த்தி உற்சவகாலத்தில் எல்லா ஜனங்களும் விநாயகர் பிம்பம் வேண்டுமென்று ஒரு குயவனைக் கேட்டால், அவன் தன் சிற்றறிவுக்கேற்றபடி (மண்ணைப் பக்குவப்படுத்தி வைத்துக் கொண்டு) வெறும் மண்ணாலோ, அல்லது ஒரு நாதப் பட்டையையும் உபயோகித்துக் கொண்டோ, தன்னச்சில் வைத்துப் பிம்பங்கள் தயார்செய்து கொடுக்கிறானல்லவா? அதே பிரகாரமாய், ராகம் என்கிற அச்சை உபயோகித்துக்கொண்டு தெலுங்குபாஷையில் ஸாஹித்தியம் செய்கிறவர் சிலர். தமிழ்ப்பாஷையில் ஸாஹித்தியம் செய்வார் சிலர். இப்படி அநேக விதமான ஸாஹித்தியம் செய்ய ஆதாரபூதமானது ராகம் என்று சொல்லுவோம். அது கீதமுமல்லாமல், வர்ணமுமல்லாமல் கீர்த்தனமுமல்லாமல், ஜாவளியுமல்லாமல், பதமுமல்லாமல் இவை எல்லாவற்றிற்கும் ஆதாரமானதாய் ஒருவித சத்தரூபமாயுள்ளதே.

இந்த ராகம் என்னும் விஷயம் ஒரு அநிர்வசநீயமான சத்தரூபம் என்று மேல்காட்டியிருக்கிறதல்லவா? அதை எவ்வாறு அறிந்து கொள்ளுகிறது? அதில் **ஸ்தூலஞாநம்** என்பது ஒருவகை ராகஞானம். விவாகஞானம் அல்லது ஸூக்ஷ்மஞானம் இன்னொருவகை ராகஞாநம். ஏற்கனவே சொல்லியபடி ராகம் ஸ்வரங்கள்வெவ்வேறு மாதிரியாகத் தொகுக்கப்பட்டு உண்டாகிறது என்று சொன்ன காரணத்தாலே **ஸ்வரஞாநம்இல்லாதவர்க்குச் சரியான ராகஞாநம்வர** இடமில்லை. ஸ என்னும் ஸ்வரமும் ரி என்னும் ஸ்வரமும் வெவ்வேறு என்று உணரக்கூடியவர்க்கே ராகஞானம் உண்டு. மற்றவர்க்கு இல்லை. ஏனென்றால், **ஸ்வரம் வேறுபட்டால் ராகம் மாறிவிடும்.**இப்படிக்கு ஸ்வரம் மாறும் காலத்தில் ஸ்வரம் மாறிற்று என்னும் விஷயத்தை உணரக்கூடிய சக்தியோடு அமைந்த புலன்களில்லாதவர்க்கு இது அறியக்கூடிய விஷயம் அல்ல. **ராகம் பாடும்போது குற்றம் குறை சொல்வோர்** இப்படிக் குண்டாகும் **ஸ்வரக்குறைவைக் குறிப்பிட்டுக் காட்டும் சக்தியுள்ளவராயிருக்கவேண்டும்.** இவ்விதமான **ஸ்வரஞாநம் படைக்காதவர்** (ராகஞானம் உள்ளவராக நினைத்துக்கொண்டு) **ராகத்துக்குக் குற்றம் குறை சொல்வது அதிகப் பிரஸங்கம்** என்பது என் அந்தரங்கமான அபிப்பிராயம்.

ஆனால் ஸங்கீதத்தை (மேல்குறித்தவாறு ஸ்வரஞானம் சம்பாதித்துக் கொள்ளாமல்) ஜனங்கள் அநுபவித்துக்கொண்டு விவகரிக்கும் ஞானத்தை நாம் ராகத்தின் **ஸ்தூலஞாநம்** என்று சொல்லவேண்டியது. சென்னையில் ஸங்கீத ஸபை என்று சொல்லுமிடத்தில் கூட்டம் கூட்டமாய்க் கேட்டானந்திக்கும் சபையோர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது ஜனங்கள் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாகும்.

மேலும், ராகம் என்னும் ஆதாரமான விஷயத்தை அறிய, முதல் முதல் ஸாஹித்தியங்களை அறிந்து கொள்ள வேண்டும். அந்த மார்க்கத்தாலே தான் நாம் ராகத்தைஅறியவேண்டும் என்பதற்குக் காரணம்என்னவென்றால் சாதாரணமாய், ராகம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவோர்கூட ஏதாவது ஒரு ஸாஹித்தியத்தை நினைவில் வைத்துக்கொண்டு அது எந்த ராகத்தில் பாடப்பட்டுள்ளதோ அதே மாதிரியாய்ப் பாடப்படுவதை யெல்லாம் அந்த ராகம் என்று கண்டறிகிறது வழக்கத்தில் இருப்பதை யாவரும் பார்த்திருக்கிறோம்.

பி. எஸ். சுந்தரம் ஐயர், பீ. ஏ., எல். டி.

## வஸந்த மாளிகை

### VASANTHA MALIKAI

### அத்தியாயம் 7

நயத்தாலும் பயத்தாலும், சாமியார் எவ்வளவோ சொல்லியும், அவன் வார்த்தைகளைக் கொஞ்சமேனும் லக்ஷியம் செய்யாமல் 'இவன் சொல்லுவது' நான் கேட்பதா?' என்ற ஒரே முரண்டாய் நமது பானுமதி முன்கூறிய அறையில் சாமியாருடன் தற்கித்துக்கொண்டிருந்தாள்.

இந்நிலைமையில் திடீரென்று ஓர் 'விஸில்' சத்தம் கேட்டது. சாமியார் 'ஐயையோ! போனேனே! போனேனே! என் பிழைப்பில் மண் போட்டுவிட்டானே! பாவிப்பயல் வலபத்திரன்! அந்தப் பயல் போகிற இடமெல்லாம் போராட்டமா? சனியன் வந்தால் போல—தெய்வமே என்று நான் அடைத்துக் கிடக்கும் இடத்தில் இடித்துப்புக இங்கேயும் வரவேணுமா—அவன் நாசமாய்ப்போக! எத்தனை குற்றம் தப்பித்துக்கொண்டு இப்பொழுது என் பிராணனையும் வதைக்க இங்கேயுமா வந்து சேரவேண்டும்' என்று கதறி, வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு 'அம்மணி!—உனக்குக் கோடிப் புண்யமுண்டு. உன் பெரியோருக்கெல்லாம் வந்தனம்—நீ நீ உள்ளே போ! அதோ எஜமானன் வந்துவிட்டார். இவ்வலங்கோலத்தையும்—நாமிருக்கும் நிலைமையையும் கண்டு விட்டாரோ—தீர்ந்தது—என்பாடு—அம்மணி! நீ!—"

பானுமதி.—வாயை மூடு! நீ, நான் என்று மரியாதைத் தாழ்வாய்ப் பேசாதே! போ! கதவைத் திற! உன் எஜமானன் உள்ளே பிரவேசிக்கட்டும் என்று சொல்லிக்கொண்டு, சாமியார் யாதொன்றும் செய்யத் தோன்றாமல் திகைத்து நிற்பதைக் கண்டு தானே சென்று, அவ்வறையின் வெளிக்கதவை மெதுவாய்த் திறந்து 'ப்ராணநாதா! என்று ஆவலுடன் அங்குத் தோன்றிய புருஷன் அண்டை விரைந்து சென்றாள். மஹாவீரன் ப்ரவேசமானான். "ப்பூ! மஹாவீரன் தானா!" என்று அலக்ஷியமாய் வெறுப்புடன் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

மஹாவீரனோ தனக்கு வந்த அடங்காக் கோபத்தை வெளிக்காட்டாமல் அடக்கிக்கொண்டு 'அம்மணி! வந்னம்!' என்று சொல்ல, அதைக் கொஞ்சமேனும் பாராட்டாது, பானுமதி அலக்ஷியம் செய்துவிட்டாள்.

அம்மணி! ஆமாம் நான் கேவலம் மஹாவீரன்தான். ஆயினும், சூரியன் வரவைத் தெரிவிக்கும் அருணனுங் கூட சில சமயங்களில் சந்தோஷத்தை விளைவிக்கவில்லையா?

'ஆஹா! என் ப்ராணநாதர் இன்று இரவு இங்கே வருகின்றாரா?' என்று ஆவலுடனும், ஆனால் கலக்கத்துடனும் வினவினாள்.

'மந்திரி எஜமான் வருகின்றாரா?' என்று சாமியாரும் வினவலானார்.

'ஆம் அம்மணி ஆமாம்.'

பானுமதி தன் குதூகலத்தை யடக்க முடியாதவளாய்ப் பரபரப்புடன் "ஜானகி! ஓடிவா! ஜானகி! என் ப்ரிய சகி! என் தோழி!" என்று உரக்கக் கூப்பிட, ஜானகி யென்ற தோழியும் ப்ரத்யக்ஷமானாள்.

பானுமதியின் வதனமானது, கதிரவன்வரவை எதிர்பார்க்கும் செந்தாமரை போல் மலர்ந்தது. அவள் முகத்தில் இயற்கையாயுள்ள குதூகலமும், அழகிய செம்மேனியும் க்ஷணப்பொழுதில் விளங்கின. பரபரப்புடன், எதிரில் நிற்கும் புருஷர்களைக்கூடக் கவனியாமல், ஆவலுடன் "ஜானகி! என் ப்ராணநாதர் இன்னும் ஒரு ஜாமநேரத்துக்குள் இங்கே வரப்போகின்றாராம். சீக்கிரம், எனது அந்தப்புரஞ் சென்று, வாஸனைத் தைலங்கள்—அத்தர், பன்னீர், சந்தனம், புஷ்பம் முதலியவைகள் தயார் செய்து, எனது பெட்டியைத் திறந்து நகைகளெல்லாம் எடுத்துவை, என் பனாரிஸ் பட்டை எடு—சீக்கிரம்—என் ப்ராணநாதரைக் கண்டு—எத்தனை—நாளாயிற்று—சீக்கிரம்—ஜானகி! சீக்கிரம்."

"அம்மணி! இந்தக் கடிதத்தைத் தம்மிடம் கொடுக்கும்படி—நமது எஜமானர் ஆக்ஞாபித்தார்" என்று சொல்லி, பட்டுப்பையில் அடக்கம் செய்த ஓர் கடிதத்தை பானுமதியிடம் மஹாவீரன் கொடுக்க;

அதை யவள் ஆவலுடன் வாங்கி, உடைக்க முயன்றும், முடியாதவளாய், ஜானகி! ஓர் கத்திரி யெடுத்துவா! என்று ஆக்ஞாபிக்க, "அம்மணி! அடியேன் கத்தியால்—அதை உடைக்கலாமே" என்று சொல்லி மஹாவீரன் தன் கத்தியை மரியாதையாய் நீட்டினான்.

வேண்டாம், மஹாவீர! வேண்டாம். உன்கத்தியெல்லாம், மெய்க்காதல் முடிச்சைச் சிதைக்கவல்லதன்று!

'எத்தனையோ காதலைக் குலைத்திருக்கிறது இந்தக் கத்தி' யென்று சாமியார் மஹாவீரனைப் பார்த்து இரகஸ்யமாய் கண்களைச் சிமிட்டிக்கொண்டு சொன்னார்.

இதற்குள் ஜானகி கொண்டுவந்த கத்திரியால்,

லகோடாவை உடைத்து, பரபரப்புடன், கடிதத்தைப் பார்த்துவிட்டு ஆனந்த பரவசையாய், அப்பையிலுள்ள ஓர் முத்துமாலையை எடுத்து முத்தமிட்டுத் தன் கழுத்தி லணிந்துகொண்டு, மலர்ந்த முகத்துடன் 'ஜானகி! என் ப்ராணநாதருடைய அன்புக்கு அளவுண்டோ? இம்மாலையின் ஒவ்வொரு முத்தும், இம்மங்கம்மாள் ராஜ்யம்போல் ஒவ்வொரு ராஜ்யம் பெறும்போலக் காணப்படுகின்றதே. மேலும் இக்கடிதத்திலுள்ள ஒவ்வொரு அக்ஷரமும் இதைப்போல் ஒவ்வொரு முத்து மாலை பெறும்போலிருக்கின்றன!" சொல்லி என்று ஆனந்தித்தாள்.

ஜானகி! உள்ளே போவோம் வா! மஹாவீர! உன்னிடம் நான் தயவாய் இருக்க வேண்டுமென்று என் ப்ராணநாதர் ஆக்ஞாபித் திருக்கின்றார். சாமியாரே! என் ப்ராணநாதருடைய அந்தஸ்துக்கும் பதவிக்கும் தக்கவாறு சரியானபடி எல்லாம் தயாராகட்டும். மஹாவீர! உன் ஞாபகம் எப்பொழுதும் நமக்கிருக்கும்! என்று சொல்லிவிட்டு ஜானகியுடன் அந்தப்புரம் சென்றாள்.

'எதப்பா! இதற்குள்ளேயே பவிஷு கொண்டாட ஆரம்பித்துவிட்டாளே பேஷ்! பேஷ்! ஒன்றும் குடியிருப்பில்லை. அவள் கோறுகிற பதவி இன்னும் சேர்ந்துவிட்டால்—உம்!—உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி தரையில் வந்துதானே முட்டையிட வேண்டும்.'

சாமியார்.— மஹாவீரரே! எதைபா! இவளைக் கட்டிப்பிடிக்க நம்மால் முடியாது. என்னைக் கொஞ்சங் கூட மதிக்கமாட்டேன் என்கிறாள்.

மஹாவீரன்—அது உன் குற்றம்—முரட்டுத்தனம் தவிர வேறொன்றும் உனக்குத் தெரியாது.

பாட்டுக்கள்—வேடிக்கைகள்—தமாஷாக்கள்— இந்தப்படி வீட்டிலேயே அவள்மனது கவியும்படி செய்ய வேண்டும். அல்லது, பேய் இருக்கு, பிசாசிருக்கு என்று சொல்லி வெளியே வராமல் பயமுறுத்தி வைக்கவேண்டும்.—எல்லாம் உன் புத்திசாலித்தனத்திலிருக்கின்றது. சரி! அது கிடக்கட்டும்—இந்தத் தர்மாராஜன் இங்கே எப்படி வந்தான்?

"தர்மாராஜனா? இவனை நான் இதற்குமுன் கண்டது மில்லை கேட்டதுமில்லையே!"

இவன்தானடா! பானுமதியின் அத்தைமகன். தாய் கிடையாது, தந்தை கிடையாது. இந்த லக்ஷணத்துக்குத் தான் பானுமதியைக் கொடுப்பதாய் அவள் பிதா தீர்மானித்திருந்தார். காமவெறிபிடித்த இந்தப் பையல் எங்கேயோ சுற்றிச் சுழற்றிக் கடைசியாய் இங்கேயே வந்து சேர்ந்துவிட்டான். நல்லவேளை—இவ்விஷயத்தில் நமது எஜமானர் சம்பந்தப்பட்டிருப்பது அவனுக்குத் தெரியாது. நான் தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்று நினைத்திருக்கிறான். அதுவும் நல்ல வேலை தான்!—சரி இந்தப்பயல் இங்கே எப்படி வந்தான்?

'அந்தப்பயல் வலபத்ரனோடு அல்லவா வந்து விட்டான்.'

'இந்த வலபத்ரன் என்பவன் யார்.' அடே தடிப் பயலே, சூரிய சந்திரர்கள்கூட அறியாவண்ணம் பாது காக்கவேண்டிய இப்பரம ரகஸ்யத்தை, கண்ட சோம்பேறிப்பயல்களுக்கெல்லாம் இடங்கொடுத்து—"

சாமியார்.—ராஜஸேவை என்பது சரியாகத்தானிருக்கிறது! மஹாவீர! கத்தியில் திறமையும், கொஞ்சமேனும் பழிபாவத்துக் கஞ்சாதவனுகவும் பயல் ஒருவன் நம்முடைய வேலைக்கு வேண்டுமென்று, தாம் சொல்லவில்லையா?—நான் அந்த விஷயத்தில் எவ்வளவு ப்ரயாஸப்பட்டேன்—நல்ல வேளையாய் இந்தப் பயல் வந்து சேர்ந்தான்—தங்கள் இஷ்டப்படி—வேண்டிய துர்க்குணங்களெல்லாம் அமைந்தவன்.

மஹாவீரன்.—சரியான பயல்தான்—உனக்கும்அவனுக்கும் கொஞ்சம்தான் வித்தியாஸம்—உனக்குக் கபட முமுண்டு—அவன் வெகுளிப்பயல்—சரி—இந்தப் பயலா, தர்மாராஜனை அழைத்து வந்தவன்?

சாமியார்.—இந்தப் பகவத்கீதையாணே! அவன்கள் இரண்டு பேருமாகத்தான் வந்தான்கள்—தவிரவும்—வலபத்ரனோடு நான் தனித்துப் பேசிக்கொண்டிருக்கையில்—தர்மாராஜன் நம்மகுட்டி—பானுமதி—மஹாவீரன் கோபாவேசத்துடன் 'அடே! அயோக்யத் தடியா! கெட்டது கார்யம்! இப்போ, சில நாட்களால் இந்தக் குட்டிக்குத் தன் தகப்பன் நினைவு வந்து விட்டது போலிருக்கிறது. இந்தப் பயல், என்ன, அவளை மறுபடியும் ஏமாற்றி—'

சாமியார்.—அப்படி யாதொரு பயமுமில்லை. அவனைக் கண்டதும் பாம்பைக் கண்டதுபோலப் பயந்து கூக்குரலிட்டாள்.

மஹாவீரன்.—அப்போ சரி! உன் மகள் ஜானகி மூலமாய்—என்ன நடந்தது என்று விசாரிக்க முடியுமா?

சாமியார்.—மஹாவீர! நான் மனதாரச் சொல்லுகிறேன். நம்முடைய பழியும் பாவமும் நம்மோடே

போகட்டும், என் மகளும் நம் வழியில் தலைபிட்டுக் கெட்டழிய நான் சம்மதியேன்.

**மஹாவீரன்.**—அடே மடையா? நான் என்ன சொல்லுகிறேன், உன்னைப்போல உன் மகளும் கெட்டுப்போக வேண்டுமென்றா? சும்மா என்ன நடந்தது தர்மராஜனுக்கும் பானுமதிக்கும் என்றுதானே?

**சாமியார்.**—நான் விசாரித்த மட்டில், ஏதோ பானுமதி தன் தகப்பனார் அசௌக்கியத்தைப்பற்றி அழுது கொண்டிருந்தாளாம்.

**மஹாவீரன்.**—"சரிதான்! அர்த்தமாச்சுது. இதெல்லாம் இந்தத் தர்மராஜன் செய்தவேலை சாமியாரே!—ஜாக்கிரதையாயிரு! மோப்பம் கண்ட நாய்போல மறுபடி திரும்பி வருவான். இந்தப் பயலைத் தொலைக்கும்வரை நமக்கு க்ஷேமம் கிடையாது. இன்றைக்கு அவன் கையினின்று தப்பிக்கப் பட்டபாடு தம்பிரான் புண்யமாய்ப் போயிற்று.—நல்லவேளை உன் பயல் வலபத்ரன் வந்து சேர்ந்தான்—"

**சாமியார்.**—அதெல்லாம் சரிதான்! இந்த அரண்மனையை என்பேருக்கே சாஸனம் செய்து கொடுப்பதாய் வாக்களித்தாயே—இப்போ உன் பேருக்கு இருக்கிறது. நாளை என்னை வெளியேற்ற வேண்டுமென்றாலும்—உன்னால் வெளியேற்ற முடியும்.

**மஹாவீரன்.**—அடே தடியா! எடுத்ததெல்லாம் சந்தேகமா? உன் பேரில்தான் செய்தாய்விட்டதே—மேலும் உன் மடம்—அழகு—நீ ஒரு சாமியார்!—இது ஒருமடம்!—உன்மடம் என்று சொல்லுகிறார்களோ—மஹாவீரனுடைய தென்கிறார்களோ?

**சாமியார்.**—அப்படியானால் அந்தச் சாஸனத்தை என் கையில் கொடுத்து விட்டால்—

**மஹாவீரன்.**—அடே மஹாமூடசிகாமணி! மறந்து போனேன். இன்னொரு தடவை வரும்பொழுது கொண்டுவந்து தொலைக்கின்றேன்—சாஸனத்தை—சாஸனம்—உன் தலையிலேகூட வைத்து எரிக்கப்போகிறார்கள்—!

**சாமியார்.**—எல்லோருடைய பாடும் இவ்வளவு தானே! பிறரைப்பற்றிப் பேசும்பொழுதல்லவா வேதாந்தம் வருகின்றது. தான்மாத்திரம் சாசுவத்தாய் கல்ப கோடி காலம் இருப்பதாகவல்லவோ ஒவ்வொருவனும், பொய்யும், புனைசுருட்டும், பழியும், பாவமும் செய்து வருகிறான்.

**ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பீ.ஏ., பி.எல்.**

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## வியாஸ விதானம்

## Essay writing

### IV. ஆராய்ச்சி வியாஸங்கள்

### REFLECTIVE ESSAYS

### 5. துர்க்குணங்கள்—பொய்யுரைத்தல்

Bad qualities—Lying

**குறிப்பு**—ஸ்வரூபம் -அடங்கியுள்ள கெடுதிகள்—நீக்கும்விதம்—தர்மஸங்கட விஷயங்கள்—கதைகள்—முடிவு.

**உ**ள்ளதை மாற்றிக் கூறுவதும், உணராததைத் தெரிந்ததுபோலக் கூறுவதுமே பொய் என்று கூறப்படும். இவ்வாறு கூறுவதற்கு முயலும் சொற்களும் பொய்யே. இரண்டு அர்த்தம் படும்படியான சொற்களைச் சொல்லி கேட்பவர்களை ஒரு பொருள் கொண்டு போகும்படி செய்துவிடுவதும் பொய்யுரைத்தலே. ஆகவே குறி கூறுவது முழுப்பொய் என்பதற்கு ஸந்தேஹமில்லை. இம்மாதிரியே காயில் படாமலும் பழத்தில் படாமலும் சேற்றில் நட்ட கம்பம்போல பொருள் விளங்காமலிருக்கும்படி கோமுட்டி ஸாக்ஷியாகக் கூறும் சொற்கள் காட்டும் கை சைகள் எல்லாம் எதிராளியை மோசம்செய்ய வேண்டும் என்ற கருத்தால் உண்டாவதால் இவைகளைப் பொய் என்றே கூறவேண்டும். சொன்ன வாக்குத் தவறுவது, சொன்ன வாக்கை மறுப்பது ஆகிய நேர்மைக்கு மாறாக இருக்கும் நடவடிக்கைகளும் பொய்யே. ஆகவே பொய்யுரைத்தலுக்கு முக்யமாக இருக்கவேண்டியது தன்னயம் கருதும் மோசக்கருத்து. இம்மோசக்கருத்தால் உள்ளதை மறைப்பது, மாற்றிக் கூறுவது, அறியாததை அறிந்ததாகப் பெரிதாக்கிக் கூறுவது ஆகிய இவைகள்தான் பொய்யுரைத்தலின் லக்ஷணம்.

இம்மாதிரிப் பொய்யுரைத்தலில் அடங்கி உள்ள தீக்குணங்கள் எவை? ஊன்றி நோக்கின் மூன்று விதத் தீக்குணங்கள் இதனுள்ளிருக்கின்றன. அவை யாவன, மடத்தனம், இழிவு, கொடுமை ஆகிய இவைகளே. எதைக்கருதி ஒருவன் பொய்சொல்ல எண்ணுகிறானோ அதற்கு மாறாகவே இது ஏற்படுவதால் இதை உணராதிருத்தல் மடத்தனமல்லவா? பலநாள் பொய்

யன் ஒருநாள் வெளிப்படுவான். இவ்வாறானதும் இவன் ஆட்டம் பலிக்காமல் போவதோடுங் கூட இவனை ஒருவரும் நம்பமாட்டார்கள். பொய்யனுக்கு மறதி கூடாது. ஆகவே எவ்வளவு ஜாக்ரதையாக விருந்தபோதிலும் குழப்பத்தில் பொய் வெளியாவதற்கு வேண்டிய முன் பின் முரணான விஷயங்கள் பொய்யால் ஏற்படாமல் போகாது. மேலும் ஒரு குற்றத்தை மறைக்கவே பொதுவாக பொய் எழுவது வழக்கம், ஆனால் பொய் கூறுவதே ஒரு குற்றமாக மாறி ஒரு குற்றம் நீக்க எண்ணிய தந்திரம் இரண்டு குற்றத்தைக் கொண்டு விடுகிறது. இவைகளை உணராம விருப்பதால் பொய்யர்கள் மடையர்களே. இனி உண்மை உள்ளபடி உரைப்பதற்கு வேண்டியதான மனோதிடக்குறைவே இதனால் ஏற்படும் இழிவுக்குக் காரணம். பொய்யர்களுக்கு இந்த இழிவால் வரவர பயங்குள்ளித்தனம் ஓங்கிக் கொண்டே வந்து அவர்கள் மறைந்துரையும்படி நேரிடும். வாக்கு நல்லதைக் கூறி மேன்மை உண்டாக்க ஏற்பட்ட இந்திரியம் இதைக்கெடுத்து அவநம்பிக்கை சண்டை சச்சரவு முதலிய குழப்பங்களை உண்டாக்க உபயோகப்படுத்துவது பெருங் கொடுமையல்லவா? அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் அநேகர் சேர்ந்து வாழ்வது அஸாத்யமாகிவிடுவதால் பெருங்கேடு விளையாமற் போகுமா?

இவ்வாறு பொய் உரைப்பதில் இம்மூன்று தீக்குணங்களிருக்குமாயின் இதை நீக்குவது எவ்வாறு என்ற கேள்வி பிறக்கும். முற் கூறியபடி பொய்யுரைத்தலில் அடங்கியுள்ள தீக்குணங்களைப் பகுத்துணர்ந்து மனனம் செய்வதே இதைவிட்டு நீங்கும்படி நம்மைத் தூண்டும். இந்தப் பகுத்தறிவு மாத்திரம் போதாது. பொய் கூறும்படி நேரிடும் நிலைகளிலிருந்து நீங்க முயலவேண்டும் என்ற எண்ணத்தைத் தான் முற்கூறிய ஆராய்ச்சி கொடுக்கும். ஆகவே நீங்குவது எவ்வாறு என்ற சங்கை நீங்கியபாடில்லை. (1) அதிகப் பேச்சு அனாவசியப் பேச்சு ஆகிய இவைகளை நிறுத்த வேண்டும். இதுதான் முதல்படி. ஏதாவது ஒன்று நடந்துவிட்டால் அது ஒருவரிடம் ஒருவர் சொல்லப் பரவுவதைக் கவனித்தால் இதன்பொருள் விளங்கும். வரவர அந்த ஸங்கதிகளில் பொய் சேர்ந்து கொண்டே வரும். ஆதலால்தான் நடந்த விஷயம் மிக ஸாதாரணமாயினும் அதன் உண்மையை விசாரித்தறிதல் மிகக் கஷ்டமாகி விடுகிறது. ஆதலால் ஒன்றைப் பற்றிக் கூறவேண்டும் என்ற ஆவல் வந்தால், அது கூறவேண்டியது அவசியமா என்று நோக்கவேண்டும். அவசியமில்லாவிடில் வெளியில் மற்றவரோடு கூறி வீண்வார்த்தை யாடுவதைவிட கூறாது நிறுத்துவதே நலம். கூறவேண்டியது அவசியமாகில் நடந்ததை நடந்தபடி சேர்மானம் சேர்க்காமல் கூறி நிறுத்திவிடவேண்டும். அதைப்பற்றிப் பின்னர் அதிகப் பேச்சுக்கு இடங்கொடுக்காமலிருக்கவேண்டும். மிதபாஷி நிதானமாக விருப்பதால் பொய்கலவாமல் பார்த்துக் கொள்வது எளிது. (2) இரண்டாவது படி அவசியம் மறைக்கவேண்டியவை அல்லது மாற்றிக் கூறவேண்டியவை ஆகிய இவை அதிகமாக உள்ள தொழில்களை விட்டு நம்மால் கூடியவரையில் ஒதுங்கவேண்டும். ஸமூகவாழ்க்கையில் சிற்சில விஷயங்களை மறைக்க விடங்கொடுத்து அவைகளை ரஹஸ்யங்கள் என்று பிறர் புகுந்து கலக்காது விட்டு விடுவர். அவைகளுக்கு மேல் அதிகமாக இம்மாதிரி விஷயங்களுள்ளவைகளிலிருந்து ஒதுங்கியே தீரவேண்டும். (3) அதிகமாக ரஹஸ்ய விஷயங்களை மறைத்து அடிக்கடிக் கூறும்படிப் பேச்சுகளை விடுபவர்கள் சேர்க்கையை ஒழிக்கவேண்டும். (4) பிறரிடம் இருந்து மறைத்தே தீரவேண்டியதாகிய கார்யங்களைச் செய்யவாவது, பேச்சுக்களைப் பேசவாவது கூடாது. இதுபற்றியே 'போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்' என்ற வாக்கியம் பிறந்தது. ஒருவனிடம் நேரிட நாம் கூறக் கூடாதவைகளை அவனுக்குப் பின்னர் பயனில்லாமலிருக்குங்கால் கூறக்கூடாது. இவ்வாறு செய்தால் அவன் முன்னிலையில் பொய்யுரைக்கும்படி நேரிடும். ஆதலால் சுருக்கிக் கூறுமிடத்து ஒருவன் தன் வ்யவஹாரத்தை ஒழுங்குபடுத்திக் குறைத்து முற்கூறிய வண்ணம் நடக்கக்கூடிய வழியில் கொண்டு வருவானானால் எளிதில் பொய்சொல்லாது நிலைக்கலாம் என்பதாயிற்று. கண்டபடி வ்யவகாரத்தை வளர்த்தி விட்டால் பொய் சொல்லாமல் தீராது என்ற படுகுழியில் விழும்படி நேரிடும். பொய் சொல்ல அவகாசம் கொடுக்காது அதை நீக்கவேண்டுமே ஒழிய; பொய் சொல்லும் நிலைகளில் நின்று பொய் சொல்லாது முடியவில்லையே என்று துக்கப்படுவது பயனற்றது.

முன்னர் கூறியபடி எவ்வளவு ஜாக்ரதையாக நடந்து வந்தபோதிலும் மோசக்கருத்தில்லாது, பொய்யுரைக்கும்படியான தருணங்கள் வந்துவிடும். நம்மை ஒருவன் சாப்பிட அழைக்கிறான். நமக்குப் போக ப்ரியமில்லை. இதைச்சொன்னால் அவனுக்கு மனம் வருத்தம் வரும், இந்த ஸமயத்தில் 'எனக்கு உடம்பு சரியாக வில்லை, என்று கூறவேண்டிவரும். இது பொய்தான். ஒரு

வன் ஒருத்தி கற்பை யழிக்கப் பார்க்கிறான். அவள் பயந்தோடி நாம் இருந்த விடத்திற் கருகாமையில் ஒளித்துக்கொண்டாள். அத்துன்மார்க்கன் 'அவள் எங்கே போனாள்' என்று நம்மை வந்து கேட்கிறான். நாம் 'எனக்குத் தெரியாது' என்று கூறிவிடவேண்டும். இதுவும் பொய்தான். 'ஆயிரம் பொய்யைக்கூறி கல்யாணம் பண்ணு' என்பது ஒரு பழமொழி. பெண்ணும் பிள்ளையும் எல்லா விதத்திலும் தகுந்தவர்களாக விருப்பார்கள். ஏதோ பணத் தகராரில் கெட்டுப்போவதாக விருக்கும். அப்பொழுது எதாவது பொய்யுரைத்து கல்யாணத்தைப் பண்ணி வைக்கும்படி வந்துவிடலாம். இவ்வாறு செய்துவைப்பின் தன்னயம் கருதி பொய் சொன்னால் அது பொய்யே. அவ்வாறில்லாது சொல்ல வேண்டிய பொய்யைப்பற்றித்தான் இங்கு ஆராய்வது. குழந்தைகள் கசப்பு மருந்தைக் குடிக்கா. இது சர்க்கரை என்று கூறி சர்க்கரையுடன் சேர்த்துக் கொடுக்கவேண்டிவரும். இதுவும் பொய்தான். இவைகளைக் கூறும்படி வந்தால் என்ன செய்வது? இவைகளுக்குத்தான் தர்மஸங்கடங்கள் என்று பெயர். பொய்யின் ஸ்வரூபத்தைப்பற்றிக் கூறுங்கால் தன்னய ஸம்பந்தமான மோசக்கருத்து முக்யம் என்று கூறப்பட்டுள்ளது. அதுமாத்ரம் இல்லாமலும், உண்மை உரைத்தால் பிறருக்குக் கேடு விளையுமே என்ற பரிதாபமும், பொய் உரைத்தால் ஒருவருக்குத் தர்மப்படிக் கேடில்லை என்று பகுத்தறிந்து கூறவேண்டிய பொய்யைக் கூறிவிடுவதே மெய்யுரைத்தல் என்பது பெரியோர் கொள்கை. இது பற்றியே திருவள்ளுவரும்:—

பொய்ம்மையும் வாய்மையிடத்த, புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

என்று கூறியிருக்கிறார். விசேஷமான நிலையில் ஆபத்தர்மமாகக் கூறியிருக்கும் இதை முன்பின் ஆராயாது கண்டபடி உபயோகப்படுத்தி வீண்பாபத்திற்கு இடனாகும். முன்கூறிய சமயங்களில் பொய்யுரைப்பது பொய்யே ஆதலால் அவ்வாறான நிலைகளையும் கூடிய வரை நம்மை அணுகாது தடுக்கவே முயலவேண்டும். அப்படிச் செய்தும் தடுக்க முடியாமற் போனால் மனக்கூச்சத்துடன் பொய் உரைத்தே தீரவேண்டும்.

இவ்விஷயமான கதைகள் அநேகம் உள. புலி வருகின்றது என்று விளையாட்டாகப் பொய் உரைத்த பையன், புலிவந்த காலத்தில் பிறர் நம்பிக்கை இழந்ததால் உதவியின்றி மாண்டான். தர்மபுத்ரர் ஆராயாது பொய் உரைத்ததால் நரகம் பார்க்கும்படி நேர்ந்தது. ஸத்யவாதியான கௌசிக ப்ராஹ்மணன் திருடர் வருவதை அறிந்து ஊராரோடு ஓடி, பொய் சொல்லும்படி வரக்கூடிய நிலையை தடுத்துக்கொள்ளாததால், திருடர் கேட்டதற்கு ஊரார் ஒளிந்திருந்த விடத்தை உள்ளபடி கூறி மெய் உரைத்து பொய் உரைத்த நரக துக்கத்தை அடைந்தான். இம்மாதிரியே புராணங்களில் கதைகளுக்குக் குறைவில்லை.

இவைகளிலிருந்து பொதுவாகப் பொய் உரைக்கவே கூடாது. பொய்யுரைக்கும்படி வரும் தர்மஸங்கட நிலைகள் தடுத்தும் வந்து நேருமாயின் மிக வெறுப்புடனும், கூச்சத்துடனும் கூறவேண்டிய பொய் கூறலாம் என்பதும் விளங்கும்.

### போதனைக்குறிப்புக்கள்

1. ஸ்வரூபம்.
2. அடங்கியுள்ள கெடுதிகள்.
3. நீக்கும் விதம்.
4. தர்மஸங்கடம்.
5. கதைகள்.
6. முடிவு.

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வ்யாஸ விஷயங்கள்

| | |
|---|---|
| 1. கோபம். | 6. பொறுமை. |
| 2. கர்வம். | 7. பழித்தல். |
| 3. ஆசை. | 8. பிடிவாதம். |
| 4. ஆத்திரம். | 9. தன்னயம் கருதுவது. |
| 5. பழிவாங்குதல் | 10. புண்படுத்தல். |

## மொழிபெயர்ப்பு விளக்கம்

## Translation Models

**18. Relief of Delhi: The attack.**

"If there is a desperate deed to be done in India, John Nicholson is the man to do it," his superiors had always said. The desperate deed was at hand. The hour so anxiously looked for came at last. The assault was ordered. John Nicholson was to command the main storming column, his the post of honour and danger. On the morning of the 14th September, the columns, eager to begin, and flushed with the thought coming victory, streamed out in the grey dawn. They were to move in different directions according to plan, Nicholson himself leading the first column of attack. At first everything was successful. The breach was carried, and Nicholson with his column had forced his way over the ramparts into the city. The defence was vigorous, stronger than had been su spected. It was thought that after leading the attack, Nicholson would have fallen back, into the Commander's post to direct the movements of the storming party; but enthusiasm urged him on, and he was

ever to be found where the danger was thickest. The truth was that the share of the day's work assigned to Nicholson's column was more than it could perform ; and he was not the man to leave a part of his duty unfulfilled.

### டில்லியை விடுவிக்குங்கால் தாக்கிய விதம்

'இந்தியாவில் துணிவான காரியம் ஒன்று செய்ய வேண்டுமாயின் ஜான் நிகொல்ஸனே தகுந்தவன்' என்று ஓயாது கூறி வந்தனர் அவன் மேலதிகாரிகள். துணிவான தொழிலும் அணுகிவிட்டது. மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்த காலமும் முடிவில் வந்து விட்டது. சண்டை தொடங்கும்படி உத்தரவும் பிறந்தது. புகுந்து கலக்கும் ஸேனாபாகத்திற்கு ஜான் நிகொல்ஸனே தலைமை பூண்டிருக்கும்படி நேரிட்டது. அவன் நிலைமிகுந்த அபாயமும் சிறப்பும் வாய்ந்திருந்தது. சண்டை தொடங்கப் பரபரப்பும், ஜயத்தைப் பற்றிய பூரிப்பும் நிறைந்து, ஸெப்டம்பர் மாதம் 14-ம் தேதி அதிகாலையில் செவ்வான ஒளியில் ஸேனைகள் மடைதிறந்து விட்டாற்போல, அணிஅணியாகக் கிளம்பி நடந்தன. முன் ஏற்பாட்டின்படி அவர்கள் வெவ்வேறு பக்கங்களில் போகவேண்டியிருந்தது. தாக்கும் பாகத்து முதல் அணியை நிக்கொல்ஸன் நடத்தி வந்தான். முதலில் எல்லாம் கைகூடியே வந்தன. ஏற்பட்டசிதைவுபிடிபட, நிகொல்ஸன் கோட்டைகொத்தளங்கள் மேலாக விலக்கிக்கொண்டு ஏறி டில்லிக்குள்புகுந்துவிட்டான். எதிரிகளால் ஏற்பட்ட தடை எதிர்பார்த்ததை விட மிகமும்மரமாக விருந்தது.இம்மாதிரி சண்டைதொடங்கிவிட்டு நிகொல்ஸன் பின்னடைந்து, தன் தலைமை நிலைக்கு வந்து தாக்கும் ஸேனைகளை நடத்துவான் என்று எல்லோரும் எண்ணி யிருந்தனர். ஆனால் யுத்தாவேசம் அவனை மேல் மேலும் தூண்டியது: அபாயம் அதிகமாக விருந்தவிடத்திலேயே அவன் காணப்பட்டான். உண்மையாக நோக்கில், நிகொல்ஸன் பாகத்திற்கு அன்று ஏற்பட்ட தொழில் அதனால் முடிப்பதற்கரிதானது, நிகொல்ஸனும், தன் தொழிலை முடியாது திரும்புபவனல்லன்' என்பதே இதற்குக் காரணம்.

### 19. Why is it colder on the mountian top ?

You think perhaps, that as you are nearer to the Sun, you ought to get hotter. It is true that as we get nearer to the Sun, we must get hotter, unless something else is working the other way at the same time. But the highest mountain on the earth is not seven miles high, and as no one has even been to the top of it, and as seven miles is not much worth mentioning, seeing that the Sun is more than 90,000,000 miles away,—well, you cannot expect to gain much by climbing a mountain.

But you want to know why you get colder ? It is because that the warmth we live by is mostly in the surface of the earth, though doubtless most of it has come from the sun in the first place and the air besides being necessary for us to breathe is also a great blanket to keep in this warmth. When we climb a mountain, we pass through the densest part of this blanket, away from the warm crust of the earth and so we get cold. It is just the same when men go up in balloons. We should be frozen to death in the night if it were not that earth is warm itself and that the blanket of air keeps the warmth in for us.

### மலை உச்சியில் குளிர்ந்திருப்பானேன் ?

ஸூர்யனை அணுகிச் செல்லச் செல்ல வெப்பம் அதிகமாக உறைக்கும் என்று நீங்கள் ஒருவேளை எண்ணலாம். அதே வேளையில் வேறு முகாந்தரங்கள் எதிராகத் தொழிற்படாமலிருந்தால் இவ்வாறாகும் என்பது உண்மைதான். பூமியிலுள்ள மலைகளுள் மிக உயர்ந்தது ஏழு மைல்கூட இல்லை. இதன் உச்சியில் எவரும் போனதில்லை! ஸூர்யன் ஒன்பதுகோடி மைலை விட அதிக தூரத்திலிருக்கிறான் : இதன் ஸம்பந்தமாக இவ்வேழுமைல் எவ்வளவு? ஆதலால் மலையில் ஏறுவதால் வெப்பம் மிக அதிகப்பட்டுவிடாது.

குளிர் ஏன் அதிகப்படுகின்றது என்றல்லவா உங்களுக்குத் தெரியவேண்டும். நமது வாழ்வுக்கு வேண்டியதானவெப்பம், முதலில் ஸூர்யனிடமிருந்து வந்தது என்பதற்கு ஐயமில்லையாயினும், பூமியின் மேற்பரப்பிலேதான் அது தங்கியிருப்பது. நாம் மூச்சு விடுவதற்கு ஸாதாரண வாயு அவசியமாக விருப்பதோடுகூட, அந்த வெப்பத்தைச் சிதறிப்போகாது காக்கும் கம்பளி போலவும் இருக்கிறது. மலையில் ஏறும்போது பூமியின் வெப்பமான மேற்பரப்பை விட்டு கம்பளிக்கு நிகரான ஸாதாரணவாயுவின் அடர்ந்த பாகத்தின் வழியாக விலகிப் போய்விடுகிறோம். ஆதலால் நமக்குக் குளிருகிறது. ஆகாய விமானத்தில் ஏறிப் போகும்போதும் இம்மாதிரியேதான் இருக்கும். பூமி வெப்பமா யில்லாமலும், கம்பளிபோன்ற ஸாதாரண வாயு அவ்வெப்பத்தைச் சிதறாது நிறுத்தாமலும் இருந்து விட்டால் நாம் இரவில் விரைத்து இறக்க வேண்டியதுதான்.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

### அத்யாயம் 10

### அதிக அத்புதங்கள்

நாடாஒவ் வொன்றிலும் ஆம்நன்மை தீமையை
நாட்டல் செய்யார்
ஈடார்இந் நாளவர் மூடநம் பிக்கைக் கிடங்
கொடுக்கக்
கூடாதென் றுத்திகள் கூறிஓர் அற்புதங்
கூறியதம்
பாடாயின் யாவைக்கும் ஆளாவர் காலஸ்வ
பாவமிதே!

ஆகாயத்திலிருந்து திடீரென்று ஒரு சித்த புருஷர் குதித்து டிப்டி கலக்டேர் நாராயணய்யர் வீட்டில் தங்கி, அத்புத சித்து வித்தைகளைக்காட்டி விட்டு அங்கேயே திவான்பஹதூர் அதிதியாக விருக்கிறார் என்ற ஸமாசாரம் ஊரெங்கும் பரவியது. கொஞ்ச நாழிகைக்கெல்லாம் மிகுந்த ஆவலுடனிருந்த அநேகர் நாராயணய்யர் வீட்டுவாயிலில் வந்து கூடிவிட்டனர். எல்லோரும் சித்தர்கள் மஹாத்மாக்கள், யோகிகள், ரிஷிகள், இவர்களையும் இவர்கள் அத்புதச் செயல்களையும் பற்றியே வாயோயாது வசனிக்கத்தொடங்கிவிட்டனர். வீட்டிலோ ஒழுங்காக ஏற்படுத்தப்படாது தற்செயலாகக்கூடிய ஸபை ஒன்றில் திவான் பஹதூர் தாமே அக்ராஸனம் வஹித்து எழுந்தருளி யிருந்தனர். இதில் 'சித்து வித்தைகள் செய்யக்கூடியவைகளா அல்லது அஸாத்யமான வைகளா' என்ற அரிய விஷயம் ஆராயப்பட்டு வந்தது. அநேகர் அநேக அப்பிராயங்களை அநேகவிதமாக அங்கு ஸமர்ப்பித்தனர். இவைகளின் சிறப்பை நோக்குங்கால் இவைகள் முழுவதையும் இங்கு எடுத்து வெளியிட இடம் போதாமலிருக்கிறதே என்ற துக்கம் என்னைப் பாதிக்கின்றது. இவைகளுள் மிக முக்கியமானது டிப்டி கலெக்டர் அவர்களது அபிப்ராயமே: அதை வாசிப்போர்கள் நன்மைக்காக இங்கு அவர் கூறியபடி எடுத்து வெளியிடுவோம். 'சித்து வித்தைகளை உள்ளபடி நோக்கில் அவைகள் அஸாத்யமே: ஆயினும் சிலர் அவைகளைச் செய்து விளையாடுகின்றனர் என்பது மறுக்கக்கூடாத விஷயம். ஆனால் நமது மாடியில் வஸிக்கும் மஹாத்மா விஷயத்தில் மாத்ரம், அவர் செய்தவைகளை நோக்கில் அவர் சித்தர் என்ற எண்ணம் பலமாக எனக்கு உண்டான போதிலும், அவர் அத்தகையவரோ என்ற ஸந்தேஹம் என்னைப் பாதிக்காமல் போகவில்லை. ஆங்கல ஜாதியாரில் சிலர் சித்து வித்தைகள் செய்யக்கூடியவைகளே என்று அபிப்ராயிப்படினும், மற்றவர் அஸாத்யம் என்றே கூறுகின்றனர். ராஜ்ய வருமான உத்யோகஸ்தராக வெகு திறமையுடனும் மேலதிகாரிகள் மதிக்கும்படியும் வேலை பார்த்து வந்த நாளில் நான் தாவாக்களில் செய்துள்ள தீர்மானத்தைப் போல 'இங்கும் உண்மை இவ்விரண்டு விரோத அபிப்ராயங்களுக்கு இடையில் தான் இருக்கவேண்டும்' என்பதே முடிவான தீர்மானம்' என்று இவ்வாறு விஸ்தாரமாக தட்ப ஆராய்ச்சி செய்து பக்ஷபாதமில்லாது பல அபிப்ராயங்களின் ஸாராம்சங்களை நாராயணய்யர் வெளியிட்டார்.

இவ்வாறுசெய்ததும் எல்லோரும் தமது அத்புத உபந்யாஸத்தில் ஈடுபட்டுத் தம்மைக்கரகோஷம் முதலியவைகள் செய்து அனுமோதிப்பார்கள் என்ற எண்ணத்துடன் ஒரு தரம் எல்லாப் பக்கங்களைச்சுற்றி நோக்கினர். இவைகளை எல்லாம் கேட்ட ஜனங்களுக்கு இவர் கூறிய விஷயம் விளங்காவிடினும் இவர் நோக்கம் இன்னது என்று விளங்க 'உண்மை! உண்மை!! பலே! பேஷ்!! அதுதான்ஸரி!' என்று இவ்விதமாகக் கூறி அவர் விரும்பியதை அவருக்கு ஸமர்ப்பித்துவிட்டனர். விளங்காமையைக் குறித்த அவர்கள் ஒளியிழந்த முகாரவிந்தங்கள் அவர்கள் வாய்மொழி பொய் என்பதையும், அஸாத்யத்திற்கும் ஸாத்யத்திற்கும் இடையில் உள்ள நிலையின் ஸ்வரூபம் இன்னது என்று விளங்காது அவர்கள் தவிக்கின்றனர், என்பதையும் நன்கு வெளிப்படுத்தின. சித்திவித்தை அஸாத்யமாகவாவதிருக்க வேண்டும் அல்லது ஸாத்யமாகவாவது இருக்கவேண்டும். ஒரேகாலத்தில் இவ்விரண் விரோத அம்சங்கள் கலந்ததாக எவ்வாறிருக்கமுடியும்' என்று அவர்கள் ஸமயோசிதமறியாப் புத்திமாத்திரம்அவர்களைக் கலக்கியது.

ராஜ ஸேவக வ்ருத்தியில் தேராத ஒரு ஸதஸ்யன் எழுந்து இவ்வாறு அப்பொழுது கேட்டுவிட ஸதஸில் உள்ளோர் அநேகர் கோபித்த பம்பைப்போலச் சீறி, அவனை உட்கார்த்திவிட்டனர். இம்மாதிரி ஸதஸ்யர்கள் செய்ததால் ஒருவாறுமனம்தேறி அக்ராஸனாதிபதியவர்கள் 'எனக்கு என்ன அவ்வளவு தெரியாதென்று எண்ணுகிறாய் அப்பா'? என்று மிகுந்த வெறுப்போடு கூறிவிட்டார். ஆயினும் விரோதாம்சமுடைய இருகுணங்கள் எவ்வாறு ஒரே விஷயத்தில் பொருந்தியிருக்கும் என்று அவர் மனம் அப்பொழுதும் குழம்பிக்கொண்டுதான் இருந்தது. அந்தத் தருணத்தில் அவர் அதிர்ஷ்டம் ஒரு பண்டிதர் அவரைக்காக்கவெளிவந்து விட்டார். 'இம்மாதிரியான விஷயம் நமது ச்ருதிகளிலும் காணப்படுகின்றது. ஒரு விஷயம் ஸாத்யமாயும் அஸாத்யமாயுமிருக்கலாம். அதற்கு அநிர்வசனீயம் என்றுபெயர்' என்று மிகுந்த அமைதியுடன் கூறிசிலச்ருதிவாக்யங்களை எடுத்துத் தொடுத்து விட்டார். இத்தேர்ந்த பண்டிதர் நோக்கம் யாது என்பது எனக்கு விளங்கவில்லை. 'ப்ரபஞ்சம் முழுவது இருந்தும் இல்லாததே. அதாவது இருப்பதுபோலத் தோற்றுவதே; அதுபோலச்சித்துவித்தைகளும் ஸாத்யமாயினும் அஸாத்யமே. அதாவது ஸாத்யமாகத்தோற்றுகின்றன அதாவது தந்த்ரமான மோசடி

கள், ப்ரமைகள்' என்பது அவர் அபிப்ராயமாயின் அது ஸரியானது என்று எமக்குத் தோற்றுகின்றது.

அவர் என்ன எண்ணி யிருந்தாரோ, திடீரென்று ஆராய்ச்சி தடைபட்டு நின்றுவிட்டது. இதை இவ்வாறு தடைபடுத்தியவன் அந்த நல்ல தருணத்தில் அங்கு நுழைந்த தபால்காரனே. இவன் புகுந்ததும் டிப்டி கலக்டெருக்கு பெரிய ஸலாம் செய்து ஒரு நீண்ட காகிதப் பையிலடைத்த கடிதத்தை அவரிடம் மஹா விநயத்துடன் ஸமர்ப்பித்தான். அதைத் திறந்து உள்ளே நோக்கியதும் தனக்கு வேலையில் ஒரு நிலை உயர்ந்திருக்கிறது என்று ஸங்கதி தெரிய வந்தது. உடனே அத்புத யோகி காலையில் கூறிய 'உனக்கு இன்று நன்மை உண்டாகும்' என்ற மொழி அவருக்கு ஞாபகம் வந்துவிட்டது. மிகுந்த ஸந்தோஷத்தோடு எழுந்து 'நான் கூறவில்லையா, சித்து வித்தைகள் ஸாத்யமானவை என்று? அவ்வாறேதான் உண்மையும் உள்ளது. காலையின் மஹான் ஸித்தபுருஷர் கூறியபடி திடீரென்று எனக்கு உத்யோகத்தில் ஒருபடி உயர்ந்திருக்கிறது. அவர் சக்தி அத்யத்புதம்' என்று ஆனந்தபரசவராகி உபந்யாஸித்தார். உடனே எல்லோரும் ஒரு தலையாக ஸித்தர் பெருமையைக் கொண்டாடத் தொடங்கி இப்பொழுது நடந்த அத்புதத்தைப்பற்றி சிறப்பித்துக் கூறலாயினர்.

சப்தம் செய்து மஹாத்மா நிஷ்டைக்குத் தடைசெய்யாது மெதுவாக மேலே சென்று யோகி வெளியே வந்துவிட்டாரா என்று பார்த்து வரும்படி இத்தருணத்தில் எல்லோரும் கூடி ஒருவனை அனுப்பினர். இவன் மேலே போனதும் யோகியின் பாம்பு அவர் இருந்த உள்ளைவிட்டு வெளியே ஊர்ந்து வரக்கண்டுவிட்டான். இவனுக்குப் பாம்பைக்கண்டால் அதிக பயம். நெஞ்சமாறு படபடவென்று அடிக்க ஓடோடியும் கீழே வந்து விழுந்து, தன் மூடத்தனத்தை வெளியிட வெட்கி, கேட்க ஆவலோடிருக்கும் ஜனங்களுக்கு ஒரு அத்புத கதையைக் கட்டிவிட்டான். 'எல்லோரும் கண்டுதிகைக்கும்படி ஸித்த புருஷர் அறை முழுவதும் ஒரு திவ்ய தேஜஸ் நிறைந்திருந்தது. நான் சாவித்தொளை வழியாக உன்னே பார்த்துவிட்டேன். என்ன அத்புதம்! யோகியாரின் தேஹம் ஸுமார் மூன்றடி உயரத்தில் அந்தரமாக நின்றது. அவர் அங்கங்கள் எல்லாம் வேறுபட்டு, சுத்தப்படுத்த கழற்றி எரிந்திருக்கும் யந்த்ர பாகங்கள்போல் தலை ஒருபுறமும், கைகால்கள் வேறொரு புறமுமாகச் சிதறிக்கிடந்தன' என்று மிகுந்த படபடப்புடன் சொல்லி முடித்தான். எல்லோரும் ஆச்சர்ய பரவசராகி ஸ்தம்பித்து நின்றுவிட்டனர்.

அசைவற்று கொஞ்ச நாழிகை இவ்வாறு நின்று கொண்டிருக்கையில் கணீர்! என்ற ஒருமணி ஓசை கேட்டது. அதுமாடியிலிருந்து வருவதாக உணர்ந்து எல்லோரும் அங்கே கூட்டமாகப் புகுந்து விட்டனர். யோகீச்வரர் உள் திறந்திருந்தது. அவர் எழுந்து நின்று பூஜை செய்யும் பொழுது இவ்வாறு மணி அடித்துக்கொண்டிருந்தார். அவர் பூஜை செய்து வந்த பொன்விக்ரஹம் ஸுமார் நாலடி உயரம் இருந்தது; அதற்கு வைரம் கெம்பு, பொன் முதலிய விலையுயர்ந்த வஸ்துக்களாகி ஆபரணங்களே நகசிகபரியந்தம் பார்ப்போர் கண்டு திகைக்கும்படி சொரிந்துவிட்டிருந்தது. அது அமைக்கப்பட்டிருந்து கோயில் புஷ்பத்தாலேயே அலங்கரிக்கப்பட்டு அனேக வர்ணதீபங்களால் சூழப்பட்டிருந்தது. பூஜாபாத்ரங்கள் எல்லாம் வெள்ளியாலேயே செய்யப்பட்டிருந்தன. பலவிதபுஷ்ப பலங்கள் வெள்ளிக்கூடையில் வாரி வைக்கப்பட்டிருந்தன. நாராயணய்யர் முதலியவர்கள் மேலே சென்றதும் இவை களைக்கண்டு ப்ரமை கொண்டவர் போலாயினர். இந்த மாயாயோகி எல்லோரையும் அழைத்துவரும்படி நாராயணய்யரை நோக்கி உத்தரவளிக்க அவர் கீழேசென்று எல்லோரையும் மேலே போகும்படி வருந்தி அழைத்தனர். மேலே விஸ்தாரமாக இருந்தபோதிலும் ஊரார் எல்லோரும் உள்ளே புகுந்து விட்டபடியால் எல்லோருக்கும் அப்பொழுது நிற்பதுகூடக் கொஞ்சகஷ்டமாகத்தானிருந்தது. யோகி அம்பிகைக்குத் தீபாராதனை நிவேதனம் முதலியவைகள் செய்து, ப்ரஸாதத்தைஎல்லோருக்கும் கொடுத்து விடும்படி உத்தரவளித்தார். உடனே அறைக்கதவு மூடப்பட கூட்டம் கலைந்துவிட்டது. அன்று நாராயணய்யர் கச்சேரிக்கு வரமுடியாது என்று தெரிவித்து மேலதிகாரிகளிடம் அனுமதி பெற்று வீட்டிலேயே தங்கிவிட்டார். அன்று யோகீச்வரருக்குப் பெரிய விருந்து செய்யப்பட்டது. மாலைப்பொழுதில் கழுத்தில் ஸர்ப்பம் ஊர்ந்து படமெடுத்து ஆட யோகீச்வரர் வாயில் திண்ணையில்வந்து உட்கார்ந்தார். உடனே மதுரை மஹாஜனங்கள் எல்லோரும் நாராயணய்யர் வீட்டு வாயிலில் வந்து கூடிவிட்டனர்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## ருக்மணி அல்லது பக்திநிலை

### பக்தி மலர்ந்த காதை

(தொடர்ச்சி)

நான் உமக்குத் தக்கவளல்ல! உம்முடைய உயர்விற்கும், பெருமைக்கு நிகருற்றவள் நான் அல்ல! ஹே நாதா! ஆகையாலே என்னை நீர் ஏளனம் செய்தீர்! கொடுஞ் சன்ம வாசனை அடைந்தும் உம்முடன் ஏளனத்திற்காவது ஆள் ஆகி விளங்கிய தென்பாக்கியம் அல்லவா? என் தலைவா! நான் கொடியளாகிலும், உமக்குகந்த கண்ணாட்டியாக விளங்கக் கூடியவளல்லளாயினும் உம்முடைய கிருபாநோக்கத்திற்கு ஆளாகி நிற்கிறேன்! என்னைக் காக்கவேண்டும்! உம்முடைய காலில் வீழ்ந்து நமஸ்கரிக்கிறேன். 'அமலர் துணைகளில் வழியும் அன்பாகிய தேனையுண்டு எனக்கு அழியாதுமக்கு தொண்டு செய்யும் பாக்கியம் பெறச் செய்யும்."

என்று பிராட்டியார் தமது பூர்ணாபிப்பிராயத்தை வெளியிட்டு எம்பெருமானது காலில் வீழ்ந்து நமஸ்கரித்து, கைப்பொத்தி வாய்ப்பொத்தி ஓர் பக்கம் ஒதுங்கி நின்றாள். அப்பொழுது ஸ்ரீவாஸுதேவன், அவளை வாரி எடுத்து, அன்பென்னும் பாசத்தால் கட்டியணைத்து முத்தமிட்டு "அடீ! கற்புடையாய்! செல்வி! என் ஆசைக்கண்ணாட்டி! இத்தகைய மொழிகளை விரும்பியல்லவா உன்னை பரிகசித்தேன். நான் சொல்லியதையே நீ மீண்டுங்கூறினாய். நான் கூறியது உண்மையென்று விஸ்தாரப்படுத்தினாய். தன் அபிப்பிராயத்தை அறிந்து அவ்வாறு வெளியிடும் மனைவியைக்காட்டிலும் பாக்கியம் வேண்டுமோ? நன்னடத்தையுடையாய்! என்னிடம் கொண்ட உனது பக்திக்கு எதைத்தான் உனக்கு நான் தரலாகாது? உன்னுடைய விருப்பமென்ன? நீ எதைக்கேட்டாலும் கொடுக்க ஸித்தமா யிருக்கிறேன். அதை நீ என்றும் அடைவாய். குற்றமில்லா மணியே! நான் இன்றுதான் உனதிடம் பொதிந்து கிடந்த நாயகவாஞ்சையும் நாயக பக்தியும் உண்டேன். நான் கூறிய மொழிகள் வெருட்டியபோதிலும் என்பால் கொண்ட உன்னுடைய ஆசையும் அன்பும் சற்றும் சலியாது நின்றது. இருஹஸுகத்திற்காகயார் ஒருவர் தவத்தினால் மோக்ஷப்ரதனாகிய என்னை வழிபடுகிறார்களோ அவர்கள் என் மாயைக்காளாகிவிடுவர். பேரறிவுடையாய்! 'அற்றது பற்றெனில் உற்றது வீடு,' எனு மோக்ஷத்திற்கு மூலமாகிற என்னை, பவபந்தத்திற்குக் காரணனாகிய என்னை கேவலம் அல்பஸுகத்திற்காக ஈடுபடுபவர் அல்ப ஜீவராசிகளாய் உலகவாழ்க்கையில் உழலும் ஜன்மத்திற்கே ஆளாகத் தக்கவர். பத்தியிற் சிறந்தாய்! நீ காமமின்றி, இச்சையை ஒழித்து என்னிடம் ஈடுபட்டாய்; அவ்வாறு இருப்பது கெடுங்குணமே கோயில் கொண்டு விளங்கும் வஞ்சக ஜாலங்களிற் றேர்ந்த பாழ் எண்ணங்கொண்ட பெண்களால் செய்யக்கூடியதன்று. அவற்குத் தம்முயிர் தித்திப்பு; அதுவே இனிக்கும். தமது கணவரைத் தம் நயம் பொருட்டே பாராட்டுவர். அவர்கள் தம் வழிக்குடந்தையில்லாவிடில் தூற்றுவர். சிறப்புடையாய்! நீயோ நிஷ்காமமாக என்னை ஸேவித்தாய். பெருமித முடையாய்! உன்னைப்பெரும் பாக்கியம் என்னுடையதாய் இருந்தது. உன்னைப் போன்ற அன்பிற்கினிய பத்னியை இன்று உன்னிடந்தான் கண்டேன். அன்று அரச சபையிலிருந்த அரசர்களைக்கணிசியாது, என்னுடைய குணவிசேஷங்களைக் கேட்டு, என்னை முழுமனத்தோடு அடைய வேண்டும் என்ற ஆவலால் பிராஹ்மணனை என்னிடம் தூது ஏவினாய். உன்னுடன் பிறந்தான் உன் கலியாணக்காலத்து முகவிகாரமடைந்த காலத்தும், மற்றொரு ஸமயம் சூதாடுங்காலத்தில் உயிரொழிந்த காலத்தும், உன் மனோதைர்யத்திற்கெதிர் நிற்க முடியாமலடித்து விட்டாய். மனத்திற்குள் பொங்கி பொங்கி புகைந்து துஃகாக்ராந்தையாய் என்னை அடைய தூது விட்டாய். யானின்றி உலகமில்லாதிருந்ததாக எண்ணி உனது உயிரையும் விடத் துணிந்தாய். உன்னுடைய செயலெல்லாம் எமக்கினிய. உன்னுடைய நடத்தைஉனக்கே உன்மனதுக்குள்ளே துஃகத்தை, எங்கு எம்மைப்பிரிக நேர்ந்திடுமோ என்று, ஒடுக்கி எம்முடை ஆலைமையை சொந்தமாக இருக்கட்டும்" என்று தன் கண்ணில் ஆநந்தபாஷ்பம்பொங்க புளகாங்கிதனாகி பதில்கூறினார்

ஸ்ரீ சிருங்கேரி மட குருபீடம்.—ஸித்தியடைந்த ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதி ஸ்வாமிகளுக்குப் பதிலாக, ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளுக்கு பட்டச்சூட்டு வைபவம் சிருங்கேரி மடத்தில், பல வித்வான்களின் இடையில், எல்லோரும் கொண்டாட, வெகு கோலாஹலமாய் நடந்தேறியது. பிரம்மசரியத்தைக் கைக்கொண்டு, பெங்களூரில் சம்ஸ்கிருத பாடசாலையில் சாஸ்திராப்பியாசம் செய்துவந்த 19 வயதுள்ள இந்த புதுக்குரு, ஒழுக்கம், சாந்தம், கல்வி முதலியவைகளில் சிறந்தவர் என்பதை ஜனங்கள் மனதில் பதியும்படி செய்துவிட்டார். காலஞ்சென்ற ஸ்வாமிகள் அவர்களின் மனோபீஷ்டப்படி சந்திரசேகர பாரதி என்ற நாமத்துடன் புது ஸ்வாமிகள் விளங்கி வருகிறார்.

*
* *

ஸ்ரீ மீனாக்ஷியம்மன் திருக்கல்யாணமும், அழகர் உத்ஸவமும்.—இது வருஷந்தோறும் மதுரையில் சித்திரைமாதத்தில் நடந்துவரும் ஒரு திவ்ய உத்ஸவம். இதற்காகவென்று லக்ஷக்கணக்கான ஜனங்கள் பற்பலவிடங்களிலிருந்தும் வருகிறார்கள். ஸ்ரீ மீனாக்ஷியம்மனுக்கு திருக்கல்யாண மஹோத்ஸவம் முடிந்ததும், அழகர் மலையிலிருந்து, ஸ்ரீ ஸௌந்தர ராஜப்பெருமாள், கள்ளவேஷத்துடன், சித்திரா பௌர்ணமியன்று மதுரை நோக்கி வருதல் மிகவும் நேத்திரானந்தத்தைக் கொடுக்கக்கூடியது. அழகர் கள்ள வேஷத்துடன் வரும் படமொன்று இந்த மாதப் பத்திரிகைக்கு அனுபந்தமாக அனுப்பி யிருக்கிறோம். இந்தத் திவ்ய உத்ஸவங்களைப்பற்றி மற்றோர் சஞ்சிகையில் தக்க ஆதாரங்களைக்கொண்டு விரிவாய் எழுதுவோம்.

*
* *

அப்பாலோபந்தர் ஞாபகச்சின்ன கட்டிடம்.—சக்கரவர்த்தி தம்பதிகளின் விஜய ஞாபகமாய் பம்பாய் அப்பாலோ பந்தரில், சலவைக் கற்களாலே ஓர் கட்டிடம் கட்ட எட்டு லக்ஷ ரூபாய் ஆகுமென்று மதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையில், பம்பாய், இந்தியா கவர்ன்மெண்டார்கள் 5 லக்ஷம் ரூபாய் கொடுக்கிறார்கள். மீதி 3 லக்ஷம் ரூபாயும், பம்பாயில், பிரபல வர்த்தகரும், உதாரசிந்தையுமுள்ள ஸர் ஜேகப் ஸாஸூன் என்பவர் தான் ஒருவரே கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

*
* *

பர்மா வியாபாரம்.—சென்ற வருஷத்தில் பர்மாவிலிருந்து $3\frac{1}{2}$ கோடி ரூபாய் சாதாரண மணியார்டர் மூலமாக வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

*
* *

சென்னை ராஜதானி கல்வி இலாகா.—சென்னை ராஜதானி கல்வி இலாக்காத் தலைவர் அனுப்பிய (1910-11) வருஷத்திய ரிப்போர்ட்டின் பேரில் சென்னைக் கவர்ன்மெண்டாரின் ரிமார்க்கு:—"ஆனரெபில் டாக்டர் போரன், ஆனரெபில் மிஸ்டர் ஸ்டோன், முதலிய வித்யா இலாகா ஆபீஸர்களின் வேலைத்திறமையைக் கண்டு கவர்ன்மெண்டார் களித்து, அவர்களுக்கு வந்தனமளித்திருக்கின்றனர். பிரதம படிப்பின் அபிவிருத்தியில் செய்திருக்கும் ஏற்பாடும், போதனா முறையில் காட்டிவரும் ஊக்கமும் மெச்சத் தக்கவை. ஆண்கள் பெண்கள் அடங்கலான உபாத்திமார்களின் போதனாமுறைப் பாடசாலைக்கும் பிரதம படிப்பு விஷயமாய் லோக்கல்போர்டாருக்கும் முனிசிபாலிடியாருக்கும் பண உதவிசெய்ய முன்னுக்கு வரவேண்டியது அவசியம்."

*
* *

ஓர் எரிமலையின் ஆர்வாரம்.—பனாமாவிலுள்ள கிரிக்குவி எரிமலை இப்போது எரியத்தொடங்கியதென்றும், அது கக்கிய நெருப்புச் சுவாலையால் ஆயிரக்கணக்கான ஜனங்களிறந்தன ரென்றும், கிராமங்கள் பல நாசமாயின வென்றும் மொபைலுக்குப் பழங் கொண்டு சென்ற ஒரு கப்பலால் தெரிகின்றன.

*
* *

ஒரு ஜப்பான் டாக்டரின் அபிப்பிராயம்.—மெலிந்து சுருங்கியிருக்கும் உடம்பில் கிருமிகள் மிகுதியாகவிருக்கின்றன என்றும், பூரித்திருக்கும் உடம்பில் கிருமிகள் மிகுதியாக விருப்பதில்லை என்றும், பெண்களது உடம்பிலும் புருஷர்களது உடம்பில் கிருமிகள் மிகுதியாக விருக்கின்றன என்றும், குளிர்ந்த நீரில் ஸ்நானஞ் செய்தால் கிருமிகள் குறைந்துபோமென்றும் சாராயங் கலந்துள்ள குளிர்ந்த நீரில் ஸ்நானஞ்செய்வது மிகவும் நலமாமென்றும் ஒரு ஜப்பான் டாக்டர் கூறுகின்றார்.

*
* *

ஒரு நட்சத்திர விசேஷம்.—இம்மாதம் 11-ந் தேதி இரவு 9-மணி சுமாருக்கு ஒரு நட்சத்திரம் அதிக காந்தியோடு அடி பெருத்தும் நுனி சிறுத்தும் நீலமேக வர்ணப்பிரகாசத்துடன் ஆகாயத்தினின்றும் விழுந்தது. அது கீழே விழுந்தபோது ஜோதியொன்று காணப்பட்டது. இதன் விசேஷ மின்னதென்று தெரியவில்லை.

*
* *

ஒருயர்தரப் பதவி.—வியவசாய விலாக்கா ரசாயினி மிஸ்டர் ஹாரிசன் என்பவர் இம்மாதம் 17-ந் தேதியிலிருந்து விடுமுறை வாங்கி யிருப்பதனால், அவர் வேலையை அவருடைய பிரதம அசிஸ்டெண்டாகவிருக்கும் மிஸ்டர் ராமசாமி சிவன் செய்யுமாறு கவர்ன்மெண்டார் உத்தரவளித்திருக்கின்றனர். இதுகாறும் இவ்வேலை ஹிந்துக்களுக்குக் கொடுத்ததேயில்லை. இந்த நியமனம் சிறப்புடையதேயாம்.

## புத்தக வரவு
## BOOKS RECEIVED

கல்யாணி அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து.—ம-ா-ா-ஸ்ரீ, R. S. நாராயண ஸ்வாமி ஐயர், பி. ஏ. பி. எல்., அவர்கள் எழுதியது.—விலை அணா 10.

பிரேமகாந்தன்.—இது தாமரைப் பெண் என்னும் ஓர் பெண்பாலால் எழுதப்பெற்றது.—விலை அணா 12.

# ஸித்திபெற்ற ஸ்ரீசிருங்கேரி ஸ்வாமிகள்

## THE LATE SRINGERI SWAMIGAL

சீறும் பேய்மதச் செருக்கொழித் துணர்த்திட்டு
மீறு நாத்திக மித்தையொ ழித்தினித்
தூறு ஞானச் சுனையிடை யாழ்ந்துயர்ப்
பேற ளித்த பெருநிதி யார்யனே !

கூறு மாயைக் குலங்க ளறுந்திட
தேறு ஞானமா வெட்டியிற் சேதித்து
நாறும் ப்ரம்ஹத்தின் நாற்றம் பொலிதர
வீறு சான்ற வியநிதி யார்யனே !

சாந்தந் தண்மை தயையுடன் ஆர்வமும்
காந்த மென்ன கவர்தரூஉம் பண்பின்வே
தாந்தத் திச்சி யினின்மொழித் தாவிநின்
றேந்த வின்னருள் பொழிநிதி யார்யனே !

மனவி சாலமும் மதத்து விசாலமும்
நினைவின் யாவர்க்கு நன்மைநெ றிபடூஉம்
கனவின் வாழ்க்கையைக் காற்றெதரிந் திளமையே
முனிவழிக் கொண்ட முழுநிதி யார்யனே !

வாதர் தம்மையவ் வாதி வகைப்படித்
தோது வித்துய ருண்மையை யூட்டிப்புன்
கோது நீக்கி குணத்தை யளித்தருண்
வேத நாயக மெய்ந்நிதி யார்யனே !

ஆதி சங்கர வார்ய னவதரித்
தோது காலடி யூரிற்கோ யிற்கட்டி
போத கன்பெயர் பொற்பின் விளங்குற
நீதி செய்யுநன் னெறிநிதி யார்யனே !

வடமொ ழிக்கென மாண்பின் கலாசாலை
திடமு றச்செய்து செம்மையின் இந்தியர்
கடப டந்தனைக் கழித்துநன் வழிபெற
வடத ருக்குரு மாண்பரு ளார்யனே !

அன்பின் பிண்டமென் றுரும் பழிச்சிட
முன்பு செய்திடுமொய்வாக் குணத்தினன்
புன்பு லன்றனை போக்கி மனமொழித்
தின்பங் காண்டிடு இன்னரு ளார்யனே !

முத்தி பெற்றனன் முன்னில் மயங்கினன்
அத்வி தீயம தாகி விளங்கிமெய்ப்
பத்தும் போக்கி மெலிந்து பரனென்றி
நித்தியம் பெற்ற நின்மல வார்யனே !

நவாபி சென்ம நலத்தை யறுத்துப்பொன்
தவாபிறைச் சந்த்ர மௌளியின் சார்ந்தனன்
சிவாபி நவநர சிம்ஹ பாரதிப்பெயர்
தவாபி யுத்தனும் சங்கரா சார்யனே !

## H. E. LORD CARMICHAEL Ex. GOVERNOR OF MADRAS.

## சென்னை மாஜி கவர்னர் கனம் கார்மைகேல் ப்ரபு

கங்குல் லைய கடிதினெதிற் வருஉம்
மங்குல் சூரன்றன் மாண்பினி னலண்டவவ்
வங்கஞ் செல்லும் மகானவரென்றுமே
மங்க ளம்பெற வாழ்த்திதும் வையமே !

சொல்லும் பொருள் உதம தாழந் தொடர்ந்தெங்கும்
கல்லு மண்ணுங் கடந்தெரிந் தார்மணி
ஒல்லை யிற்கொளு முள்ளத்தின் வன்மையன்
எல்லை யிற்கரு ணை யெரி யின்பத்தான்.

எண்ணு மார்ந்தரி டைக்கொண்ட வெல்லையிற்
கண்ணு மெங்குங் கலந்தண்மை கண்டுப்பின்
நண்ணு நெஞ்சின் வழியி னடந்திடு
மண்ணை யாளு முறைமை வழிப்பட்டோன்.

நண்ணுங் கருத்தெனக் கைக்கொண் டிவ்விந்தியர்
எண்ணு மெண்ண மியாவு வுணர்ந்திட
பண்ணை யாள்முதல் படித்தவ ரீறிவர்
நண்ணி ஞாயங்காண் நன்மை பயந்தவன்.

முன்ன ரிராமன் முதற்பெரு மேந்தலார்
சொன்ன முறைமையின் தூங்கலி ஞாயங்காண்
மன்ன வன்வழி மன்னு மகானிவன்
என்ன நன்மைதான் இன்பத்தி யற்றிடான் ?

ஞாய மென்னும் படைகொடு நாடிய
மாயர் தங்களை மாற்றி மனிதற்கென்
றூய சட்டம ணுவள வும்படா
தூய நன்னெறி திடக்கியச் சீரினன்

திங்க ளைந்திங்கிருப்பினுஞ் சீரிய
பொங்கு மன்பென் புயற்பெய்தக் தாசையின்
சங்க மூதிட தண்ணளி யாட்டியிங்
கெங்கு மன்புப்பைங் கூழ்வளர்க் கேண்மையோன்

தங்கு மாசை தண்ணிதி யாகிக்க
ளங்க மில்மதி யாமென லாலித்து
பொங்கு மன்பின ளக்கர் பூரித்திட
நங்கு கருணை யளிக்கு நயத்தினன்

கீழ்மை யறுத்துநற் கேண்மை யுயர்த்தியும்
ஆழ்ம னத்தைக்கொண் டன்பைப் பரப்பியும்
ஊழ்வலிக் குமுண்டோ விந்த உண்மையென்
றேழ்பெ ரும்புவி யெண்ண விளங்கியோன்

கார்மைக் கொண்டலென் அன்பினிற் காண்டிடும்
நீர்மை என்னு நெடுமேருள் மின்னிட
சீர்மையி னுசைச் செழிமழைப் பெய்த ருஉம்
கார்மை கேலென் கனத்தினன் காண்டியால்.